
பறம்புமலைச் சிறப்புமலர்



அருள்தரு


மங்கைபாகர் திருக்கோயில்

அருள்தரு

திருக்கொடுங்குன்றநாதர் திருக்கோயில்

திருக்குட நன்னீராட்டு

20 - 4 - 92



திருக்கொடுங்குன்றம்

(பறம்புமலை - பிரான்மலை)

உ



வானிற் பொலி வெய்தும் மழை மேகங் கிழித்தோடி
கூனற்பிறை சேருங் குளிர் சாரற்கொடுங் குன்றம்
ஆனிற் பொலி ஐந்தும்மர்ந் தாடியுல கேத்தத்
தேனிற்பொலி மொழியாளொடு மேயான்திரு நகரே!

—திருஞானசம்பந்த சுவாமிகள்

பறம்புமலைச் சிறப்பு மலர்

1992

திருவண்ணாமலை ஆதீனம்

பிரான்மலை வகை ஐந்து கோயில் தேவஸ்தானம்

குன்றக்குடி - 623 206

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்

உ

திருச்சிற்றம்பலம்

அம்மானெனவுள்கித்தொழுவார்கட்கருள் செய்யும்
பெம்மானவன் இமையோர் தொழமேவும் பெருநகரே!

— ஞானசம்பந்தர்

கொடுங்குன்றம் எனத் திருமுறைகளால் போற்றப் பெறும் பிரான்மலை வரையாது வழங்கிய பாரிவள்ளலின் பரம்பு மலையாகும். பாண்டி நாட்டுப்பாடல் பெற்ற தலங்கள் பதினான்கனுள் ஒன்றாகவும், திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி குருமகா சந்நிதானம் அவர்களின் அருளாட்சிக்குட் பட்டதாகவும் விளங்குகின்ற இத்திருக்கோயில் குடமுழுக்கு நன்னாளில் குயிலமுதநாயகி உடனாய கொடுங்குன்றீசர் திருவருளால் மனிதகுலம் முழுமைக்கும் அனைத்து நலன்களும் பெருகத் திருவருளையும் குருவருளையும் சிந்திக்கின்றேன்.





மலர் மணம்

வரலாற்றுப் புகழ் கொண்ட 'பறம்புமலை', சங்க காலத்தில் வள்ளல் பாரி ஆண்ட பறம்பு நாட்டின் 'தலைப்பதி'யாக விளங்கியது. புலவர்பெருமான் கபிலர், வள்ளல் பாரியின் உள்ளம் கவர்ந்த உழுவல் அன்பராகப் பறம்புமலையில் பாரியோடு உடனிருந்து வாழ்ந்ததால், பறம்புமலை 'தமிழ்ப்பதி' யாகவும் திகழ்ந்தது! அன்பால் அருச்சிக்கும் எருக்கம் பூவையும் அரியதென ஏற்று, அருள்நகை கொள்ளும் பேரருளாளன் பெருங்குணத்தை, வேள் பாரியின் வள்ளன்மை உணர்வுடன் ஒப்பிட்டுக் குறிப்பிடும் கபிலரின் புறப்பாடல், பறம்புமலை-சிவமணம் கமழும் 'தெய்வப்பதி' யாகவும் திகழ்ந்ததைத் தெளிவாக உணர்த்துகின்றது.

தலைப்பதியாகவும், தமிழ்ப்பதியாகவும், தெய்வப்பதியாகவும் திகழ்ந்த பறம்புமலை, ஏழாம் நூற்றாண்டில் 'திருக்கொடுங்குன்றம்' என அழைக்கப் பெற்றிருப்பதை, திருஞான சம்பந்தசுவாமிகளின் திருவாக்கால் அறிகின்றோம். பதினைந்தாம் நூற்றாண்டினராகிய அருளாளர் அருணகிரியாரும்'கொடுந்திண் குன்றம்' என்றே பறம்புமலையைத் திருப்புகழில் குறிப்பிடுகின்றார். திருப்புகழ் காலத்திற்குப் பின்னே 'பறம்புமலை' எனப்பேசப் பெற்று, 'பிறாமலை' ஆகிப் பின் 'பிராய்மலை' என வழங்கப்பெற்று, தற்போது 'பிரான்மலை' என அழைக்கப்பெறுகின்றது. மலைக்குரிய பெயராகிய பிரான்மலை, மலையின் அடிவாரத்தில் உள்ள ஊரின் பெயராகவும் வழங்கப்பெற்று வருகின்றது.

பிரான்மலையிலுள்ள அருள்தரு திருக்கொடுங்குன்றநாதர் திருக்கோயிலும், அருள்தரு மங்கைபாக சுவாமி திருக்கோயிலும், பதினேழாம் நூற்றாண்டு முதலாக, திருக்கயிலாய பரம்பரை குன்றக்குடி திருவண்ணாமலைஆதீனத்தின் அருளாட்சியில் இருந்து வருகின்றன. முப்போதும் திருமேனி தீண்டிப் பூசனை செய்யும் முறைமையுடைய ஆதிசைவ மரபிலே தோன்றிய ஞானச்செல்வர் தெய்வசிகாமணிப் பெருவள்ளல் திருவண்ணாமலையில் ஆதீனத் திருமடம் அமைத்து (கி.பி.1310) அருளாட்சி மேற்கொண்டார்கள். ஆதீனக்குருமுதல்வர் தெய்வசிகாமணிப்பெருவள்ளல் திருவருள் பாலித்த திருமடத்தில் வழி வழியாக எழுந்தருளி அருளாட்சி மேற்கொண்ட ஆதீனகர்த்தர்களில் 17ஆம் பட்டம் திருப்பெருந்திரு நாகலிங்க சுவாமிகள், (கி.பி.1690) இராமேசுவரம் யாத்திரை வந்தபோது, இராமநாதபுரம் சேதுபதி மன்னரின் உள்ளார்ந்த வேண்டுதலுக்கு உடன்பட்டு, குரு முதல்வர் வழிபட்ட காளத்திநாதரை எழுந்தருளிவித்து, பிரான்மலையிலேயே தங்கி அருளாட்சி மேற்கொண்டார்கள் பிரான்மலை (உட்கிடைக்கோயில் சதுர்வேதி மங்கலம்) திருப்புத்தூர், திருக்கோளக்குடி, குன்றக்குடி, தேனாட்சி அம்மன் கோயில் ஆகிய ஐந்து திருக்கோயில்களும் ஆதீனத்தின் அருளாட்சித் திருத்தலங்களாயின. 31 ஆம்பட்டம் திருப்பெருந்திரு மருதநாயக தேசிகர் அருளாட்சிக்காலத்தில் (கி.பி. 1778) திருவண்ணாமலை ஐந்து கோயில் ஆதீனத்தின் தலைமை மடாலயம் பிரான்மலையிலிருந்து குன்றக்குடிக்கு மாற்றப்பெற்றது.

குன்றக்குடியில் 45 வது குருமகா சந்நிதானமாக (1952) எழுந்தருளியுள்ள அருள்நெறித்தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் அருளாட்சியில் ஆதீனப்பெருமை உலகளாவிய அளவில்ஒளிர்ந்து வருகின்றது.

அருள்நெறித்தந்தை அருளாட்சி மேற்கொண்ட 1952லேயே பிரான்மலைத் திருக்கோயில்களுக்கு மின்சாரத் தொடர்பமைத்து திருவருள் பாலித்தார்கள். 1957 இல் திருப்பணிகள் செய்விக்கச் செய்து, திருக்குட நன்னீராட்டுப் பெரு விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

முப்பத்து நான்கு ஆண்டுகளுக்குப் பின், அருள்நெறித்தந்தை தவத்திரு அடிகளார் அவர்கள் இந்துசமய அறநிலையத் துறையின் உதவியோடும், பிரான்மலைத் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமானைக் குலக்கடவுளாகப் போற்றி வழிபடும் அருவியூர் நகரத்தார்களின் ஆதரவோடும், பிரான்மலை மதகுபட்டி முத்துராஜாக்கள் சமூகம், திருக்கோயிலைச் சேர்ந்த கிராமத்தார், பிரான்மலை ஊரார் ஆகிய பெருமக்களின் ஒத்துழைப்போடும் பெருந்திருப்பணிகள் செய்வித்து 20-4-92 இல் திருக்குட நன்னீராட்டுப் பெரு விழாவை மகாசந்நிதானங்கள் திருமுன் சிறப்பாக நிகழ்வித்தார்கள்.

திருக்குட நன்னீராட்டு நிகழ்வினையும், திருத்தலத்தின் வரலாற்றுப் பெருமையினையும் என்றென்றும் நினைவில் கொள்ளுமாறு, சிவமணமும், தமிழ்மணமும் கமழுமாறு மலர்ஒன்று உருவாக்குமாறு அருள்நெறித்தந்தை அருள் பாலித்தார்கள். அருட்செல்வரின் திருவருளை அடிமுதலாகக் கொண்டு 'பறம்புமலைச் சிறப்பு மலர்' மலர்ந்துள்ளது.

மகாசந்நிதானங்களின் வாழ்த்து மணமும், அறிஞர்பெருமக்களின் உரை மணமும், புலமை சான்ற கவிஞர்களின் கவிமணமும் மலருக்குப் பொலிவும் பயனும் நல்குமென நம்புகின்றோம்.

குறுகிய காலத்தில் பெருகிய நலம் வழங்கிய விளம்பரதாரர்களுக்கும், அச்சு அமைப்புச் செய்து கொடுத்த காரைக்குடி குமரன் பிரிண்டர்ஸ், குன்றக்குடி சண்முகநாதன் அச்சகத்தார் ஆகியோருக்கும் மலர்க் குழுவின் சார்பில் மனமார்ந்த நன்றியைப் புலப்படுத்துகின்றோம்.

இது—சிறு மலர்தான்! எனினும் பறம்பின் சீரிய முல்லை மலர்!

மலர் மணம்! 'மன நலம்' கூட்டுவிக்கப் பிரார்த்திக்கிறோம்.

பணிவன்புடன்,

பிரான்மலை
7—6—92

குன்றக்குடி பெரியபெருமாள்
செயலர்—மலர்க்குழு



——

திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா

தொன்மையும், தொழத்தக்க வளளன்மையும் கொண்டது 'பறம்புமலை' எனும் பிரான்மலை. பிரான்மலையில் எழுந்தருளியுள்ள அருள்தரு மங்கைபாக சுவாமி, அருள்தரு குயிலமுத நாயகி உடனாகிய திருக்கொடுங்குன்றநாதர், அருள்தரு சுப்பிரமணியசுவாமி, பைரவர், விசுவநாதர், ஆகிய திருமூர்த்திகள் திருவருள் நலமளிக்கும் பெருங்கருணையால், மக்களிடையே பெருங்கீர்த்தி பெற்றவை. அம்மையும், அப்பனும் திருமணக் கோலத்தில் எழுந்தருளியுள்ளதால், 'தென் கயிலாயம்' என்றே இத்திருத்தலத்தை போற்றிப் புகழ்ந்து வழிபட்டு வருகின்றனர் மக்கள்.

வரலாற்றுச் சிறப்பும், புராணப் பெருமையும் பூண்ட, பாடல் பெற்ற இத்திருத்தலத்தின் திருக்கோயில்களைப் புதுக்கியும், புனர் நிர்மாணம் செய்வித்தும், புதியதோர் இராஜகோபுரம் எழுப்பியும், பெருந்திருப்பணிகளாற்றி, நகரத்தார், கிராமத்தார், ஊரார், தமிழக அறநிலையத்தார் ஆகியோர் உதவியுடனும், ஒத்துழைப்புடனும் அருள்நெறித் தந்தை தவத்திரு அடிகளார் அவர்கள் ஆங்கிரஸ ஆண்டு சித்திரைத் திங்கள் 8 ஆம் நாள் (20-4 92) திங்கட்கிழமை காலை 9.30க்கு மேல் 10 மணியளவில் தமிழக திருமடாலயங்களின் மகாசந்நிதானங்கள் திருமுன், திருக்குட நன்னீராட்டுச் செய்வித்துத் திருவருள் பாலித்தார்கள். பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி நின்று, பக்திப் பரவசத்துடன் நன்னீராட்டு நிகழ்ச்சியைப் பார்த்து மகிழ்ந்தனர்; பயனடைந்த பேற்றினை எண்ணி நெகிழ்ந்தனர்!

திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா 17-4-92 காலை 9.30 மணி அளவில் எழில் திருக்கோலம் பூண்டிருந்த பிரம்மாண்டமான யாகசாலையில் அனுக்ஞை, விநாயகர் வழிபாட்டுடன், தொடங்கியது. மங்கல இன்னிசை ஒலிக்கவும், பன்னிரு திருமுறை பாடவும், நான்மறை ஓதப்பெற்ற விநாயகர் பூசையில், யாகசாலையைச் சுற்றிலும் மக்கள் திரளாகக் கூடிநின்று பங்குபெற்றது குறிப்பிடத்தக்கது.

17-4-92 பிற்பகல் 3 மணி அளவில் 'கடஸ்தாபனம்' செய்யப்பெற்றது. முதற்கால பூசையும் 'பூர்ணாகுதி'யும் நிகழ்ந்தன. 18 4-92, 19- -92 இரு நாள்களும் காலை, மாலை இரு வேளைகளும் 'காலப்பூசை'களும், 'பூர்ணாகுதி'களும் செய்விக்கப் பெற்று 20-4-92 அதிகாலை ஆறாம் கால யாக பூசை மகா சந்நிதானங்கள் திருமுன் பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமி நிற்க நிகழ்த்தப் பெற்றன.

வானில் கருடன் வட்டமிட்டு நன்னிமித்தம் காட்ட, வளர் பறம்புமலையின் பார்க்குமிடமெல்லாம் மக்கள் நிறைந்து பெருகி நிற்க, மகாசந்நிதானங்கள், சுவாமிகள், அருளாளர்கள், அறிஞர்கள், தொழிலதிபர்கள் ஆன்மீகச் செல்வர்கள், ஊரார், கிராமத்தார், நகரத்தார் ஆகியோர் சூழ்ந்திருக்க நன்னீராட்டு குறித்த வேளையில் நிகழ்ந்து நிறைவெய்தியது. அருள்நெறித் தந்தை தவத்திரு அடிகளார் மகிழ்ந்து நெகிழ்ந்ததை, அவர்களின் திருநயனங்களில் பெருகி நின்ற 'மகிழ்நீர்' எடுத்துக் காட்டியது.

திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நிகழ்ச்சிகளாக—சமயத்தமிழ் விழா, சங்கத்தமிழ் விழா, அறிவியல் தமிழ் விழா, வள்ளல் பாரி விழா ஆகிய திருவிழாக்கள் 18-4-92, 19-4-92, 20-4-92 ஆகிய மூன்று நாள்களும் நடைபெற்றன. அமைச்சர்கள், அருளாளர்கள், அறிஞர்கள், அறநிலையத் துறை அலுவலர்கள் பங்கேற்று விழாக்களுக்குப் பொலிவும் புகழும் ஊட்டினர். ஆதீனக் கவிஞர் மரு. பரமகுரு படைத்த ஆராய்வுத் திருநூல் 'பறம்புமலை' (திருக்கொடுங்குன்றம்) விழாவினில் வெளியிடப்பெற்றது. பாரி விழாவில் கவிஞர் 'சிற்பி' பாலசுப்பிரமணியம் 'கவிஞர்கோ' எனும் சிறப்பையும் அறிஞர் மீனாட்சி முருகரத்தினம் 'செந்தமிழ்த் திலகம்' எனும் சிறப்பையும் பெற்றனர்.

திருப்பாம்புரம் சகோதரர் நாதசுர இன்னிசை, சிங்கம்புணரி எஸ். தங்கராஜன் லட்சுமிபானு குழுவினரின் நாட்டுப்புற ஆடல் பாடல் நிகழ்ச்சி, திரைப்படப் புகழ் மனோரமா&பூபதி நகைச்சுவை நிகழ்ச்சி ஆகிய கலைநிகழ்ச்சிகள் மக்கள் கண்டு, கேட்டுக் களிப்புற்றனர். ஆதீன அலுவலர்களும், அரசுத் துறை அலுவலர்களும் பம்பரம் போல் சுழன்று பணியாற்றிய பாங்கு பாராட்டுக்குரியது.

சிறப்பொடு பூசனை நிகழ்ந்த 19-4-92, 20-4-92 ஆகிய இருநாள் மாலைகளிலும் வானம் வழங்கிய 'மழைக்கொடை' மண்ணையும் குளிர்வித்தது! மக்கள் மனத்தையும் குளிர்வித்தது!

பரம்புமலை திருக்குட நன்னீராட்டுத்
திருப்பணிச் செயற்குழு

தலைவர்:

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள்

துணைத்தலைவர்கள்:

திரு நல்லசுப்பையா அவர்கள்	பொன்னமராவதி
திரு மு. சுவாமிநாதன் அவர்கள்	புலிமலைப்பட்டி
திரு இராம. அருணகிரி அவர்கள்	சிங்கம்புணரி

செயலாளர்:

திரு மு. ந. இராமநாதன் அவர்கள் கிருங்காக்கோட்டை

துணைச்செயலாளர்கள்:

திரு மு. இராமச்சந்திரன் அவர்கள்	பிரான்மலை
திரு ஆர் வெங்கடகிருஷ்ணன் அவர்கள்	,,
திரு ந. செல்லையா அவர்கள்	,,

பொருளாளர்:

திரு தே. மா. பழனிச்சாமி அவர்கள் பொன்னமராவதி

சிறப்பு மலர் உருவாக்கக் குழு

கவிஞர் மரு. பரமகுரு

சு. செல்வராஜ்

புலவர் வீர, அழகேசன்

நூலகர் ஆர். நடராஜன்

குன்றக்குடி பெரியபெருமாள் (செயலர்)

மேகத்திடி குரல்வந்தெழ வெருவிவ்வரை யிழியுங்
கூகைக்குல மோடித்திரி சாரற்கொடுங் குன்றம்
நாகத்தொடு மிளவெண்பிறை சூடிந்நல மங்கை
பாகத்தவன் இமையோர்தொழ மேவும்பழ நகரே!

— திருஞானசம்பந்த சுவாமிகள்.

பரம்புமலை திருக்குட நன்னீராட்டுத்

திருப்பணிக் [illegible]

தலைவர்:

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள்

துணைத் தலைவர்கள்:

திரு [illegible] அவர்கள் [illegible]

திரு மு. [illegible] அவர்கள் [illegible]

திரு இராம. அருணகிரி அவர்கள் [illegible]

செயலாளர்:

திரு மு. த. [illegible]

[illegible]

திரு மு. [illegible]

[illegible]

திரு த. செல்லையா அவர்கள்

பொருளாளர்:

திரு தே. மா. பழனிச்சாமி அவர்கள் [illegible]

சிறப்பு மலர் [illegible]


[illegible] மரு. [illegible]

க. செல்வராஜ


[illegible] வீர. அழகேசன்

[illegible] ஆர். நடராஜன்

[illegible] பெரியபெருமாள் [illegible]



அருள்தரு மங்கைபாகப் பெருமான்



காவி உடையில் பொதிந்திருக்கும்
தமிழ்மா முனியாம் ஞானமணி
பூவினும் மெல்லிய இதயத்தில்
புரட்சி வைரமணி கனல்விடும்
மேவிய குன்றக் குடியில்புதுச்
சரித்திரம் செதுக்கிய அறிவுமணி
நாவினில் நெஞ்சில் குறள்மறைபோல்
நவில மணக்கும் தெய்வசிகாமணி.

— கவிஞர்கோ சிற்பி

அருள்நெறித் தந்தை
தவத்திரு குன்றக்குடி அடிகளார்



அருள்நெறித் தந்தை
தவத்திரு குன்றக்குடி அடிகளார்

வாழ்த்து மணம்

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரை
ஸ்ரீ - ல - ஸ்ரீ
சிவப்பிரகாசதேசிக
பரமாசாரியசுவாமிகள்
குருமகாசந்நிதானம்
திருவாவடுதுறை ஆதீனம்



திருவாவடுதுறை - 609 803
(தஞ்சாவூர் மாவட்டம்)

நாள் : 17 — 1 — 1992

''நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் எனநெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க''

"வாழ்த்துரை"

பாண்டிப் பதினான்கு திருத்தலங்களுள் ஒன்றாய், வளங்களினால் செழித்துத் திகழ்வதும் பெருமைமிகு குன்றக்குடி ஆதீன அருள் நிருவாகத்திற் சிறந்து விளங்குவதுமாகிய திருக்கொடுங்குன்ற எழில் நகரில் அருள்தரு குயிலமுதநாயகி உடனாகும் அருள்தரு கொடுங்குன்றீசர் திருக்கோயிலும் அருள்தரு மங்கைபாக சுவாமி திருக்கோயிலும் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா கொண்டு அருளொளியினைச் சிறக்க வழங்கவுள்ளமையும் விழாச் சார்பில் மலரொன்று மலர்வதும் அறிந்து மகிழ்கிறோம்.

''அம்மான்என உள்கித்தொழு வார்கட்கருள் செய்யும்
பெம்மானவன் இமையோர்தொழ மேவும்பெரு நகரே''

என்று திருஞானசம்பந்தப் பெருமான் பரவிப் புகழும் திருக்கோயிலில் நமது பெருமதிப்பிற்கும் போற்றுதற்கும் உரிய தவத்திரு அடிகளாரின் அருள்உளத்திற்கு உவப்பாகத் திருப்பணிகள் சிறப்பாக நிறைவெய்தித் திருக்குட நன்னீராட்டு விழாப் பெறுவது பாராட்டுதற்குரியது. விழா நிகழ்ச்சிகள் யாவும் இனிது நடைபெறவும், விழா மலர் தமிழ் நலம் பேணும் சான்றோர்களின் அரும்படைப்புகளைத் தாங்கிச் சிவமணம் கமழ மலர்ந்து உயர்பயன் விளைக்கவும் தவத்திரு அடிகளாரின் இணையிலாப் பணிகள் நீடு நிலவி உலகு இன்புறவும் அருள்தரு ஞானமா நடராசப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

குருபாதம்



திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம்
மயிலாடுதுறை - 609 001
தேதி : 22 — 3 — 92

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே".

இறைவன் எழுந்தருளும் இடங்களைக் கும்பம், பிம்பம், தம்பம் என மூவகையாகக் கூறுவர் ஆன்றோர். ஆலயங்களைப் பழுதுபார்த்துத் திருப்பணிகள் செய்து புதுப்பித்தற் பொருட்டு ஆலயங்களில் கும்பம், தம்பம் ஆகியவற்றில் விளங்கும் மூர்த்திகளைக் கும்பத்தில் ஆவாகனம் செய்து யாக சாலையில் எழுந்தருளிவித்து வேள்விகளாலும், வேத சிவாகமத் திருமுறை பாராயணங்களாலும் மங்கல வாத்தியங்களாலும் மகிழ்வூட்டிப் பூசித்து மீண்டும் அபிடேகத்தின் மூலம் அம்மூர்த்திகளைத் தத்தம் திருவுருவங்களில் சேர்ப்பித்தலைத் திருக்குட நன்னீராட்டு என்றும் கும்பாபிஷேகம் எனவும் கூறுவர்.

கும்பாபிடேகம் பன்னிரண்டாண்டுகட்கு ஒருமுறை செய்விக்க வேண்டு மென்பது ஆகம விதி, இவ்வாறு செய்யப் பெறும் திருக்கோயில்களிலேயே தெய்வசாந்நித்யம் மிகுந்திருக்கும் என்பர் பெரியோர். திருக்கோயில்களில் நாள்வழிபாடுகள், சிறப்பு வழிபாடுகள், பெருவிழாக்கள் சிறப்புற நிகழ்வதால் ஊரும், உலகும் செழிப்புறும். ஆலயங்களிலுள்ள மூர்த்திகளின் அருளாற்றல் கோபுரக்கலசங்கள் வழியே பரவி மக்களைவாழ்விக்கும்.

இத்தகைய திருக்குட நன்னீராட்டு விழா குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்கொடுங்குன்றம் திருக்கோயிலுக்கு நிகழ்வதறிந்து மகிழ்கிறோம்.

பிரான்மலையென வழங்கும் இத்தலம் திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகம் பெற்ற சிறப்புடையது. மகோதர மகரிஷியும் நாகராஜனும் வழிபட்டு அருள்பெற்ற பெருமை உடையது. சங்க காலத்துக் கடையெழு வள்ளல்களில் முல்லைக்குத் தேரீந்த பாரி வள்ளலின் பறம்பு மலையே பிரான்மலை எனக் கூறி வருகின்றனர். வளைந்த சிகரங்களை உடையதால் பிரான் மலை கொடுங்குன்று எனப் பெயர் பெற்றது. இறைவன் கொடுங்குன்றீசர் எனப் பெற்றார். அம்மை குயிலமுதநாயகி.

சமய உலகில் புகழ்மிக்க இவ்வாலயத்தையும், அருள்மிகு மங்கைபாகசுவாமி திருக்கோயிலையும் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் (தவத்திரு குன்றக்குடி அடிகளார்) தேவையான திருப்பணிகள் பலவற்றையும் செய்வித்து மகா கும்பாபிஷேகம் செய்வித்தருளுகின்றார்கள்.

மகா கும்பாபிஷேகம் சிறப்புற நிகழவும், மகாகும்பாபிஷேக விழா மலர் பக்தி மணத்துடன் வெளிவரவும், தேசத்திலுள்ள இடையூறுகள் நீங்கச் சிவாலயங்கள் பலவற்றிலும் மகாபிடேகம், மகாநைவேத்யம், திருப்பணி மகோற்சவங்கள் நன்கு நடைபெற்று நாடு நலம் பெற்றுச் சிறக்கவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

உ

சிவ சிவ



கயிலைமாமுனிவர்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

அதிபர், ஸ்ரீ காசிமடம்

திருப்பனந்தாள் - 612 504

(தஞ்சை மாவட்டம்)

தேதி: 10—1—1992

வாழ்த்துரை

செந்தமிழ்ப் பாண்டித் திருநாட்டுத் திருப்பதியும் குன்றக்குடி ஆதீனத் திருக்கோயிலும் ஆகிய திருக்கொடுங்குன்றம் ஸ்ரீ கொடுங்குன்றீசர் திருக்கோயில் குடமுழுக்கு விழா 20 — 4 — 92 அன்று நிகழ்வதும், விழாவில் சிறப்பு மலரொன்று வெளியிடப் பெறுவதும் அறிந்து மகிழ்ச்சி.

சைவமும் தமிழும் சால்புற வளர்த்துப் புகழுற்ற பாண்டித் திருநாட்டில், தமிழ், சமயப் பணிபுரியும் குன்றக்குடி ஆதீனத்தின் பரிபாலனத்தின்கீழ் மாட்சியுற்றோங்கும் திருக்கொடுங்குன்றீசர் திருக்கோயிலில் திருப்பணிகள் செய்து குடமுழுக்குச் செய்வது சிறப்பான பணியாகும்.

'வாழியவனை வணங்கும் முடிச் சென்னி' என்றும், 'தாழ்த்த சென்னியும்' என்றும் அருளாளர்கள் எம்பெருமானை முப்போதும் பரவிட வேண்டியதை வலியுறுத்திப் பேசினர். அவ்வழி நின்று அன்பர்கள் வழிபாடாற்ற ஏதுவாகச் செய்யப்பட்டுள்ள திருக்கோயில் குடமுழுக்கு விழா இனிதே நிகழவும், விழா மலர் பெருமானின் அருளிப் பாடுகளை வெளிக்காட்டும் படைப்புகளுடன் ஒளிவீசிடப் பொலிவுடன் மலரவும் செந்திற் கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சுபம்

சிவசிவ

உ
சிவமயம்

தொலைபேசி: 3679

ஸ்ரீ தொண்டை மண்டலாதீனம்,

சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் மடம்,

57, உபதலைவர் பரமசிவம் தெரு, **பெரிய காஞ்சிபுரம் - 631 502**

ஆசியுரை

நாள்: *11 — 3 — 92*

"ஆக்கையாற் பயனென் அரன் கோயில் வலம் வந்து
பூக்கையா லட்டிப் போற்றி என்னுத விவ் யாக்கையாற் பயனென்
கால்களாற் பயனென் கறைக் கண்டனுறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக் கால்களாற் பயனென்"

— அப்பர்

மக்கட் சமுதாயம் இன்பமாக வாழவேண்டுமானல் அனைவரும் பரந்த மனப்பான்மையோடு பிறர் நலத்தைப் பேணி வாழ்வதைத் தவிர வேறு வழி இல்லை. "நான் — எனது" என்னும்செருக்குகள் குறையக் குறைய உயிரினங்களை அன்புடன் நேசிக்கும் பண்பு தோன்றும். இதனை நன்குணர்ந்த நம் முன்னோர் வாழ்க்கையோடு சமயத்தையும் இணைத்து வாழ்ந்து காட்டினர். இதன் பயனே இறை யுணர்வு ஆகும்.

இறையுணர்வும் இது பற்றிய சிந்தனையும் உள்ளத்தே அரும்பிடினும் அது மலர்ந்து அதனல் ஆன உண்மைப் பயனை நாம் பெறுவதற்கே நம் முன்னோர்கள் வானளாவிய திருக்கோயில்களை உருவாக்கினர், இயல் இசை கூத்து என்று மூன்ருய்க் கிளைத்த இந்நாட்டின் பழம் பெரும் நாகரிகச் சின்னங்களாகவும் இவைகளை நிறுவினர்.

தமிழ் நாட்டில் மட்டும் அறுபதினுயிரத்திற்கு மேற்பட்ட திருக்கோயில்கள் இருப்பதாகப் பேசப் பெறுகிறது. இவைகளுள் 33184 திருக்கோயில்கள் அரசாங்கத்தின் கண்காணிப்பில் இருந்து வருகின்றன. இவ்வாறு அறுபதினுயிரத்திற்கு மேற்பட்ட திருக்கோயில்களைக் கொண்ட ஒரு நாடு இவ்வுலகில் எங்குமே இல்லை எனலாம். மேலும் இவை இறை உயிர் தளை என்ற முப்பொருள் உண்மையை விளக்கும் நிலையங்களும் ஆகும்.

மக்கள் இத்தகு திருக்கோயில்களின் பயனை உணர வில்லையானல் நாட்டில் அன்பு பக்தி ஞானம் வைராக்கியம் முதலிய நற்பண்புகள் மறைந்து, எவ்வழியேனும் பொருளைச் சேர்ப்பதே வாழ்வின் குறிக்கோளாகவும், வஞ்சனை, சூது, அநீதி இவைகளே இதனைப் பெறுதற்குரிய முறையாகவும் கொண்டு, இறுதியில் மனித இனமே இதற்குப் பலியாகும் நிலை தோன்றலாம். இத்தகைய நிலை தோன்ருமல் காக்க வல்லவை திருக்கோயில்களே.

திருக்கோயில்கள் சிறந்து விளங்கவும் காலப்போக்கில் பொதுமக்களுக்கு இயல்பாகத் தோன்றும் சமய உணர்வின் தளர்வைப் போக்கவும் துணைபுரிவன திருக்கோயில் திருப்பணிகளும் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாக்களும் ஆகும்.

மேற்கூறிய வகையில் பாண்டிய நாட்டுப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்ருன பிரான்மலை என வழங்குகின்ற திருக்கொடுங்குன்றம், குன்றக்குடி ஆதீனத் திருக்கோயில்களுள் ஒன்ருக விளங்குவது பாரி வள்ளலின் பறம்பு மலையாகப் போற்றப் பெறுவது; சித்திரைப் பெருவிழா ஏழாம் நாள் "பாரி விழா" வாக தமிழகத் தவப்பயனும் அடிகளார் பரம்பரை அறங்காவலராக இதனைச்சிறப்புற நடத்தி வருவது யாவரும் அறிந்ததே.

ஞானசம்பந்தப் பெருமான் பாண்டி நாட்டு யாத்திரை மேற்கொண்டு நதிகளையும் காட்டு வழிகளையும் கடந்து இப்பதியை அடைந்து இங்கு எழுந்தருளியுள்ள கொழும் பவளச் செழுங் குன்றை வணங்கி "வானிற் பொலி" எனத் தொடங்கும் பதிகம் அருளிச் செய்த பதியும் இதுவே.

தவத்திரு அடிகளார் அவர்களால் அருள்மிகு திருக்கொடுங்குன்றீசர் திருக்கோயிலும், அருள்தரு மங்கைபாக சுவாமி திருக்கோயிலும் முழுமையாகத் திருப்பணி செய்யப் பெற்று திருக்குட நன்னீராட்டு விழா நடைபெறயிருப்பதும், இதன் தொடர்பாக ஒரு மலர் வெளிவர உள்ளதும் பெருமகிழ்ச்சியைத்தருகிறது.

விழா நன்கினிது நடைபெறவும், மலர் நன்கு மலர்ந்து நலம் பல பயக்கவும் தவத்திரு அடி களாரின் தமிழ்த் தொண்டும், சமயத் தொண்டும் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பழம் பெரும் மரபுப்படி உலகெங்கும் பரவி உலக அமைதியை நிறுவவும் திருவருளைச் சிந்திக்கின்ருேம்.

உ
சிவமயம்
ஸ்ரீ பாலசித்த குருவே நம:

☎ மயிலம்: 223
புதுவை: 24208

திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம்
மயிலம் & பொம்மயபாளையம்.

எண்: 5

தேதி: 3—2—92

ஆசியுரை

''ஆலயம் தொழுவது சாலவும் நன்று''. வழிபாடு ஒன்றே மனித வாழ்வைப் னிதவாழ்வாக்கும் திறனுடையது. உலகியலுள் உழலும் மனத்தை நன்னிலைப் டுத்தி, இறையருளுக்கு இலக்காக்குவதன் மூலமாக, மனிதன் இகபர நலன்களை எய்துமாறு செய்யவல்லது வழிபாடு ஒன்றேயாகும். இவ்வழிபாட்டுக்குத் துணை புரியும் கருவி கரணங்களையும் பொருள்களையும் எல்லாம் வல்ல இறைவனே படைத் தளித்துள்ளான். வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும், தாழ்த்த சென்னியும் தந்த தலைவனைச் சூழ்த்தமாமலர் தூவித் துதித்தல் வேண்டும் என்பார் அப்பரடி கள். அவரே, மேலும்.

''கற்றுக் கொள்வன வாயுள நாவுள;
இட்டுக் கொள்வன பூவுள நீருள;
கற்றைச் செஞ்சடை யானுளன் நாமுளோம்;
எற்றுக் கோநம னான்முனி வுண்பதே''.

என்று பாடியுள்ளமை, வழிபட்டு உய்யும்நெறியை வளமாகக் காட்டுவதாகும். விலங்கு முதலிய உயிரினங்களும் வழிபட்டுப் பேறு பெற்றமையைப் புராண இதிகாசங்கள் புலப்படுத்துகின்றன. இவ்வழிபாடு, தனிவழிபாடு, கூட்டு வழிபாடு, ஆன்மார்த்த வழிபாடு, பரார்த்த வழிபாடு எனப்பலதிறத்தன.

எங்கும், எதிலும், எப்போதும் நிறைந்தும், உறைந்தும் மறைந்தும் உள்ள இறைவன் வழிபடும் மக்களின் அன்பு அறிவு, ஆர்வம், அனுபவம் ஆகிய நிலைகளுக்கு கேற்ப அவரவர் வேண்டும் இடங்கள், வடிவங்களில், பெயர்களில் வெளிப்பட்டுத் தோன்றி அருள்புரிகின்றான். இவ்வகையில் ஆகமமுறைப்படி அமைக்கப் பெற்ற திருக்கோயில்களில் அமைந்துள்ள மூர்த்தங்கள் யாவும், நம் கருமேனி கழிக்க வந்த கருணைத் திருமேனிகளாகும். அவை, இறைவனின் இலக்கணங்களையும், அருள் தன்மை, ஆற்றல் நிலைகளையும் வெளிப்படுத்துவன வாகும்.

சங்கத் தொகை நூல்கள் எட்டனுள் ஒன்றாகிய பரிபாடலுக்கு உரைவரைந்த பரிமேலழகர் தம் உரையில், ''ஊன்கணார்க்குப் படிமையிலும், அந்தணர்க்கு வேள்வியிலும், யோகிகட்கு உள்ளத்திலும், ஞானிகட்கு எவ்விடத்தும் இறைவன் வெளிப்படுவான்'' எனக்குறிப்பிடுகின்றார். அவ்வகையில் திருக்கோயில் வழிபாடு இறையருள் பெற எல்லோர்க்கும் ஏற்றதும் எளியதும் ஆகும்.

எல்லாம்வல்ல பரம்பொருள், சக்தி ஐக்கியத்தோடு பிரம்ம, விஷ்ணு, உருத்திர மூர்த்தங்களையும் உள்ளடக்கிய சிவலிங்கமாக் காட்சிதந்து அருள்புரிகின்றான். இச்சிவ வழிபாடே, தொன்மை வழிபாடாகும்.

"விரிவிலா அறிவனார்கள் வேறொரு தெய்வஞ் செய்தே
எரிவினாற் சொன்ன ரேனும் எம்பிராற்கு ஏற்ற தாகும்."

என்னும் அப்பரடிகளின் அமுதவாக்கும்.

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்", என்னும் சிவஞான சித்தியாரின் செவ்விய மொழியும், சிவவழிபாட்டின் சீர்மையினைச் செப்புவனவாகும்.

எனவே, சைவத்திருக்கோயில்கள் கலைகளின் இருப்பிடங்களாகவும், சமூக நல மையங்களாகவும், பண்பாட்டுச் சிகரங்களாகவும், நீதி மன்றங்களாகவும், தத்துவ விளக்கங்களாகவும், இறையருள் சுரக்கும் ஊற்றுகளாகவும், பண்டுதொட்டுத் திகழ்ந்து வருகின்றன. தென்னகத் திருக்கோயில்களின் சிறப்பினை ஓர்ந்தே எங்கும் நிறைந்த சிவபரம்பொருள் தென்னாட்டில் உறைவதாக மணிவாசகர் "தென்னாடுடைய சிவனே போற்றி" எனப்பாடியிருப்பதும். நாம் கருதத்தக்கதாகும். இத்தகைய தொன்மைத் திருக்கோயில்களைப் பழுதுபார்த்துத் திருக்குடமுழுக்குச் செய்தல் தலையாய அறப்பணியாகும்.

திருமடங்கள், திருக்கோயில்கள், மூர்த்தங்கள், திருக்குளங்கள் ஆகியனவற்றைப் பழுதுபார்த்துத் திருப்பணி செய்வோர், அருண் நூல்கள் ஓதுவோர் அடையும் பயனைக்காட்டிலும் ஆயிரம் மடங்கு பயன்பெறுவர் என்று ஓர் அருட்பாடல் உணர்த்தும் உண்மையை ஓர்தல் நலம். அத்திருப்பாடல் வருமாறு :

"மாதவர் மடங்கள் ஆதி வரதன்மந் திரங்கள் ஆதி
நாதமாம் இலிங்கம் ஆதி நளினபுட் கரணி ஆதி
சேதமுற் றிடின்முன் போலச் செய்கின்றோர்க் குறும்பலந்தான்
ஓதுமுன் செய்தோர் தம்மில் ஆயிரம் குணிதம் ஆகும்."

— சிவபுண்ணியத் தெளிவு

இந்தியத் திருநாட்டில் தொன்மைச் சிறப்புமிக்க சைவத்திருத்தலங்கள் 274 உள்ளன (1. சோழநாடு — காவிரிக்கு வடகரை - 63 தலங்கள், தென்கரை — 127, 2. ஈழநாடு — 2; 3. பாண்டியநாடு — 14; 4. மலைநாடு — 1; 5. கொங்குநாடு — 7; 6. நடுநாடு — 22; 7 தொண்டை நாடு — 32; 8. துளுவநாடு — 1; 9. வடநாடு — 5.)

அவற்றுள் பாண்டியநாட்டுத் திருத்தலங்கள் பதினான்கனுள் ஒன்றே திருக்குட முழுக்கு விழாக்காணும் திருக்கொடுங்குன்றம் ஆகும். இத்திருத்தலம் பிரான்மலை எனவும் அழைக்கபெறுவது. திருஞானசம்பந்தரின் பதிகம் ஒன்றைப் பெற்றது. அருணகிரிநாதரின் திருப்புகழ்ப்பாடல் இரண்டினைப் பெற்ற சிறப்பும் இத்தலத்துக்கு உண்டு. இறைவன் திருப் பெயர்: கொடுங்குன்றீசர்; அம்மையின் திருப்பெயர்: குயிலமுதநாயகி ஞானசம்பந்தர் இவ் வம்மையைத் தாம்பாடிய திருப்பதிகத்துள் "தேனிற்பொலிமொழியாள்" என்று பரவுகின்றார் இத்திருக் கோயிலும் அருள்மிகு மங்கைபாகசுவாமி திருக்கோயிலும் திருக்குட முழுக்குப்பெரு விழா காண இருப்பது குறித்து அகமிக மகிழ்கிறோம்.

இந்திருக்கோயில்களைப் புரந்துவரும் குன்றக்குடி ஆதீனத்தின் குருமணி தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள், விஞ்ஞானத்தின் வழியாக மெய்ஞ்ஞானத்தையு சமயசாத் திரநெறிவழியாக இறைநினைவையும், எண்ணம், சொல், செயல் யாவற்றாலும் திருநெறிய தமிழுணர்வையும் சமயவாழ்வையும் சமுதாயத்துக்கு ஊட்டி வருபவர்கள். "பாரம் ஈசன் பணியலது ஒன்றிலார்; ஈர அன்பினர்; யாதும் குறைவிலார்" என்னும் தெய்வச் சேக்கிழார் வாக்குக்கு விளக்கமாகத் திகழ்பவர்கள் திருவருள் துணையுடன் அடிகளார் அவர்களின் சீரிய முயற்சியில் நடைபெறும் இத்திருக் கோயில்களின் திருக்குடமுழுக்கு விழா சிறப்பாக நடை பெறவும் அதன் சார்பாக வெளிவரும் சிறப்புமலர். கலைப்பெட்டகமாகவும் கருத்துக் கருவூல மாகவும் திகழவும், அம்மலர், பயில்வோர் வாழ்வைப் பண்படுத்தும் வகையில் ஞானமணம் வீசிச் சிறக்கவும், எங்கும் இன்ப அன்பு நிறையவும் எல்லாம் வல்ல மயிலம் தண்மர்மலை வாழ் வாகும் முருகப்பெருமான் திருவருளையும், ஸ்ரீபாலசித்தர் குருவருளையும் சிந்தித்து வந்திந்து வாழ்த்துகிறோம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ஸ்ரீலஸ்ரீ
காசிவிசுவநாத ஞான தேசிகர்
கோவிலூர் ஆதீனம்
கோவிலூர் - 623 319
மானகிரி வழி (ப. தே. மாவட்டம்)

உ
சிவமயம்

தொலைபேசி : காரைக்குடி 2646

புராதனப் பெருமையும் வரலாற்றுப் புகழும் கொண்ட பிரான்மலை தொன்மையான ஆலயங்களை சீர்னோத்தாரனம் செய்து அஷ்ட்ட பந்தன குடமுழுக்கு விழா செய்வது சாலச்சிறப்புடையதாகும். புதிய ஆலயங்களை நிர்மானிப்பதைக் காட்டிலும் தொன்மையான ஆலயங்களைச் செப்பனிட்டுச் செய்வது போற்றுவதற்கு உரியது. சைவ சமயத்தில் உயர்ந்த தொண்டுகளை மக்களுக்கு விளக்கும் முயற்ச்சி சிறப்புடையது. குடமுழுக்கு விழா தொடர்பாக திருமலர் வெளியிடயிருப்பது அறிந்து மிக்க மகிழ்கின்றோம். சைவமணமும் ஆன்மீக இலக்கியங்களும் கமழும் பசும்பொன்மலராகப் பொலிவுடன் வெளிவர எம்மை ஆட்கொண்ட கொற்றவாளீஸ்வரர் திருநெல்லைத் தாயின் திருவருளால் விழா இனிது நிகழ்ந்தும் நாடும் மக்களும் சகல நலன்களும் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்து வர வாழ்த்துகின்றோம்.

— காசிவிஸ்வநாத ஞானதேசிகர்

பெறுநர் :—

குன்றக்குடி அடிகளார் அவர்கள்
குன்றக்குடி - 623206

உ
சிவமயம்
"சைவத்தின் மேல் சமயம் வேறில்லை

ஸ்ரீ - ல - ஸ்ரீ சங்கரலிங்கதேசிக
பரமாச்சார்யசுவாமிகள்
ஆதீன கர்த்தர்,
ஸ்ரீ கந்த பரம்பரை ஸ்ரீ சிவாக்கிரயோகிகள் ஆதீனம்
சூரியனார்கோயில்
திருமங்கலக்குடி அஞ்சல் அ. கு. எ. 612 102.
தஞ்சை மாவட்டம்.

To

தவத்திரு குன்றக்குடி அடிகளார்,
குரு மகாசந்நிதானம்,
திருவண்ணாமலை ஆதீனம்,
குன்றக்குடி - 623 206.
ப. மு. தே. மாவட்டம்

தேதி: 13—4—92

வாழ்த்துரை

திருக்கொடுங்குன்றம் அருள்தரு மங்கை பாகர் திருக்கோவில், அருள்தரு கொடுங்குன்றநாதர் திருக்கோயில் திருக்குட நீராட்டுப் பெருவிழா அழைப்பிதழ் வரப்பெற்றோம். மகிழ்ச்சி.

திருக்கொடுங்குன்றம், பொய்யா நாவிற் புலவோர் புகழும் வாய்பெருமையும் வரலாற்றுச் சிறப்பும் மிக்கது. ஞானத்தின் திருவுருவாம் ஆளுடைப்பிள்ளையின் நலம் கொள் தமிழ் மாலை பெறும் மேன்மையினது. இத்தலத் திருக்கோயில்கள் நம் போற்றுதலுக்கும் பாராட்டுதற்கும் உரியவர்களாகிய தவத்திரு அடிகளாரின் திருவுளம் மகிழத் திருப்பணிகள் கொண்டு திருக்குட நீராட்டுப் பெருவிழா பெறுவது பெருமகிழ்வைத் தருகிறது.

விழா இனிது நிகழவும், வழிபடும் அன்பர்கள் இருமை நலன்களும் எய்தி இன்புறவும் தவத்திரு அடிகளாரின் அருளாட்சி நீடு நிலவி சைவத் தமிழுலகின் பொலிவு பெருகவும் நமது வழிபடு மூர்த்தி அருள்தரு ஞானப்பூங்கோதையம்மை உடனாகிய அருள்தரு காளத்தீசப் பெருமாள் திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

குருவே துணை

தொலைபேசி : 850425

தவத்திரு. சுந்தரசுவாமிகள்
ஆதீனகர்த்தர்
கௌமார மடாலயம்
சின்னவேடம்பட்டி அஞ்சல்
கோயமுத்தூர் - 641 006

Phone : 49445

Thavathiru SUNDARA SWAMIGAL
MANAGING TRUSTEE
RAMANANDHA ADIGALAR FOUNDATION

28/2, North-South Rondy's Street,
R. S. Puram, Coimbatore - 641 002.

வாழ்த்துப்பா

செந்தமிழ்த்தென் பாண்டியினில் தேவாரப் பாடல்பெற்ற
விந்தைமலி திருத்தலமாய், வியன்பாரி வள்ளலவர்
சந்தமுற ஆட்சிசெய்த தகைப்பரம்பு மாமலையாய்
எந்தைபிரான் எழுந்தருளி இலங்குதிருக் கொடுங்குன்றம்.

குன்ருத வளக்குன்றக் குடித்தலத்தில் விளங்குகின்ற
மன்ருகும் திருவண்ணு மலைஆதீ னத்தாட்சி
ஒன்ருகும் பரம்புமலை ஒளிர்கின்ற பிரான்மலையாம்
என்றுபுகழ் மங்கைபங்கர் எழுந்தருளும் கொடுங்குன்றம்!

நல்லநீர்ச் சுனைச்சிறப்பும் நாடுகின்ற மலைவளமும்
எல்லாமும் அமைந்ததுடன் எழில்மயில்வேள் தலமாகி
வல்லஉமை பங்காளன் மலைத்தலத்தும் நிலத்தினிலும்
சொல்லுருவாம் லிங்கமதாய்த் தோன்றுதிருக் கொடுங்குன்றம்

தமிழ்நெறியும் திருச்சைவத் தகைநெறியும் தரணியிடை
அமிழ்தெனவே போற்றிடச்செய் அடிகளார் என்ருலே
இமிழ்திரைப்பார் தெரியுமியல் இசைதெய்வ சிகாமணியார்
தமதார்வத் தால்இதனைத் தகையாகச் செய்தனரே !

பற்பலவா றித்தலத்தைப் பாங்குபெறப் பணிசெய்தே
அற்புதமார் திருக்குடநீர் ஆட்டுவிழாச் செய்கின்ருர்
உற்றுவந்தே சேவிப்போர்! உரியபணி தலைநிற்போர்
பெற்றிமிகும் இறையருளால் பெருநலமாய் வாழியவே!

கோவை - 641006
14 — 2 — 1992

சுந்தரசுவாமிகள்
கௌமாரமடாலயம்

உ
சிவமயம்
சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன் திருவடி வாழ்க

திருக்கயிலாய பரம்பரை, திருக்கோவலூராதீனம்

ஸ்ரீமத் ஞானியார் மடாலயம்

88 - 90 சந்நிதி வீதி,
திருப்பாதிரிப்புலியூர்
கடலூர் - 607002

சுபம்

தேதி: 14 — 2 — 92

குருநாதர் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் அருளுரை

வடகடல் படுநுகத் துளையுள், தென்கடலில் மிதக்கும் கழி ஒன்று கோத்து ஓர்நுகத்தடி சமைந்தாலொத்த அருமையுடையது மானிடப்பிறவி. இப்பிறவி உள்ள போதே மெய்யுணர்வு கைகூடப் பெற்று. இஃப்பிறவாவகை இறைகழலடி யடைய வழிகாண்பதே பகுத்தறிவால் உற்ற சிறப்பாம் 'வாய்த்தது நந்தமக்கு ஈது ஓர் பிறவி' என்ற அப்பர் அருள் மொழியையும், இப்பிறவி தப்பினுல் எப்பிறவி வாய்க்குமோ? என்ற நிலை உணர்ந்து சிந்தித்தலும், மகோதர மகரிஷியும் நாகரராசனும் பூசித்துப் பேறுபெற்ற தலமாமென்பதையும், அவ்வருமைப் பாட்டினை உணர்ந்த பாண்டிய மன்னரும், விசயநகர மன்னரு முதலாம் மன்னவரேயன்றி, கொன்றை சேர்முடியான் முதலி நாயக கல்லூருடையான் இருவரும் "பூசைக்குந் தாழ்வு செய்யாதான் சந்தி" எனப் பெயரிட்ட அர்த்தயாம பூசைக்கு ஆம் நிவந்தம் அளித்தமையும், குலசேகரன்பட்டினத்துக் கொடுங்குன்றமுடையானது, திருஞானசம்பந்தர் ஆலய நிறுவனம். நிவந்தங்களும் அவ்வவர் பொருளாற்பெற்ற பயன் எய்திப் பேறு பெறு முயற்சி வழி காட்டியாக உள்ள தலம் "பிரான்மலை" என வழங்கப் பெறும் திருக்கொடுங்குன்றம்.

குறிஞ்சியும் முல்லையும் திகழும் இத்திருநகர்க்காட்சி, திருஞான சம்பந்தப் பெருமானை, அந்நிலங்கட்குரிய முதல் - கருப்பொருள்கள் அமைய இறைவனைப்பாடுவித்த சிறப்பினது.

திருச்சிற்றம்பலம்

"வானிற்பொலி வெய்தும்மழை மேகம் கிழித்து ஓடிக்
கூனற்பிறை சேருங்குளிர் சாரற்கொடுங்குன்றம்,
ஆனிற்பொலி ஐந்தும் அமர்ந் தாடிஉல கேத்தும்
தேனிற்பொலி மொழியாளொடு மேயான் திருநகரே"

திருச்சிற்றம்பலம்

எனும் பாசுரத்தை முதலாக உடைய பதிகம் ஒன்றே கிடைக்கப்பெறுகிறது. இதனை ஓதி வழிபடுவோர், "ஊனத்தொடு துயர்தீர்த்து உலகேத்தும் எழிலாரே' ஆவர் என்கிறது திருக்கடைக் காப்பு.

அருணகிரி நாத சுவாமிகளது; "அனங்கன் அம்பொன்......" "எதிர் பொருது......" என்ற இரு திருப்புகழ்ப்பாக்களைப் பெற்றுள்ள இத்தலத்தில் வீரபத்திரப் பெருமானின் திருக்கோலமும் அரியமன எழுச்சியை உண்டாக்குவன.

குன்றக்குடி ஆதினத்திற்கு உரிமையுடைய இத்தலம் இயற்கைச் சூழலிலே செயற்கை வண்ணப் பொலிவுடையதாய், இயற்கைப் பகுத்தறிவால் உணர்வு பெற்றூர் திருவுளத்திலே இறைவன் விரும்பி உறையும் இடம் போலத்திகழ்கிறது.

இத்தலத் திருப்பணியில் ஈடுபடுவோர் யாவரும், ஊனத்தொடு துயர் தீர்த்து உலகேத்தும் எழிலாளராவர் எனற்கு ஐயமில்லை.

பொருளாலும், உடலுழைப்பாலும், கொடுங்குன்றீசன் திருப்பணியில் ஈடுபடுவோரும் தலதரிசனப்பேறு பெற்றோரும் - யாவரும் எம் முதற்குரு நாதர் திருவருளாலும், வள்ளி மணாளப் பெருமான் திருவருளாலும் பன்னலமும்பெற்றுப் பல்லாண்டு வாழ்க எனவாழ்த்துதும்.

தொலைபேசி ; 26479

தவத்திரு
சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள்
தலைவர் - பேரூராதீனம்
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி
பேரூர் - அஞ்சல்
கோயமுத்தூர் - 641 010

Telephone : 26479

THAVATHIRU
SANTHALINGA RAMASAMY ADIGALAR
Thavathiru Santhalinga Adigalar
Tamil Kalluri
Perur (Post)
COIMBATORE

4—2—92

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க!

வாழ்த்துப்பா !

செம்பொருள் காணும் அன்பால் சிந்தனை சிறந்து மேலாம்
எம்மருட் தந்தை யென்று இயற்றமிழ் நெறியோர் போற்றும்
மெய்ம்மை சேர்அடிகள் குன்றக்குடி வளர் மேலோர் கோயில்
நம்பிரான் மலைசேர் கோயில் நற்பணி வளர்க வாழி

நாடுசெய் தவத்தால் தோன்றி நற்றமிழ் நெறியில் அன்பால்
பீடுற செய்தே மக்கள் வாழ்வினில் பெருமை சேர
காடுடன் கழனி எல்லாம் கவினுறப் பணிகள் செய்வார்
ஈடுஇணை இல்லாக் குன்றக் குடித்திட்டம் இயங்கச் செய்தார்

கற்பணி செய்த கோயில் கவின்மிகு சிற்பத்தோடு
பற்பலவாக நாட்டின் பழமையைக் காட்டும் அங்கே
புற்புதர் மண்டிப் போன போக்கினை மாற்றித் தெய்வ
நற்பணி வளர்க்கும் பாரி நன்மலை யாளர் வாழி.

பெறுநர் ;

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள்,
குன்றக்குடித்திருவண்ணாமலை ஆதீனம்
குன்றக்குடி.
பசும்பொன் முத்துராமலிங்க மாவட்டம் - 623 206

போ. இராமராஜு, பி. எஸ்ஸி., பி. எல்.,
துணை ஆணையர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
மதுரை - 1.

வாழ்த்துரை

"பாண்டி நாடே பழம்பதி" என்னும் வாய்மைக்கு இணங்கப் பாடல் பெற்ற தலங்கள் பதினான்கு இப்பகுதியில் அமைந்துள்ளன. அவற்றுள் ஒன்றாகிய பறம்புமலை என்னும் பிரான்மலை திருஞானசம்பந்தப் பெருமானால் பாடப்பெற்ற சிறப்புடையது. கொடுங்குன்றம் என்னும் திருப்பெயரால் விளங்கும் இப்பகுதி இயற்கை வளமும் இறை உணர்வும் மிகுந்த தலமாகத் திருவண்ணாமலை ஆதீனத்தின் ஐந்து கோயில்களில் ஒன்றாக ஒளிர்கின்றது. இறைவன் மங்கை பாகர் திருவுருவில் அன்பர்களுக்கு வேண்டும் நலங்களெல் லாம் விரைந்து நல்கும் விருப்புடன் காட்சி தருவது காண வேண்டிய காட்சியாகும். ஏறக்குறை ஈராயிரம் ஆண்டுப் பழமையுடைய இத்திருக்கோயிலில் சிறந்த திருப்பணிகள் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்களால் நிகழ்த்துவிக் கப்பட்டு குடமுழுக்கு விழா நிகழவுள்ளதை அறிந்து பெருமகிழ்வு அடைகின்றேன்.

குடமுழுக்கு சிறப்புற நிகழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

போ. இராமராஜு
14 — 2 — 92

உ
முருகா
"வேலை வணங்குவதே வேலை"



கிருபானந்தவாரி,
107, சிங்கண்ண செட்டித்தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.

மலருக்கு வாழ்த்து

நேரிசை வெண்பா

கொடுங்குன்றம் மேவும் குமரனடி சார்ந்தோர்
அருங்கவலை எல்லாம் அகல்வார் — ஒடுங்குமுளம்
எய்தி சிவயோக இன்பநலம் மேவி
உய்தி பெறுவார் உயர்ந்து.

அன்புள்ள

கிருபானந்தவாரி

ம. பொ. சிவஞானம்
ஆசிரியர்: "செங்கோல்"

15, சி. பி. இராமசாமி ஐயர் சாலை,
ஆழ்வார்பேட்டை, சென்னை – 600 018

தேதி: 6 — 2 — 92

"குன்றக்குடி ஆதீனம்" என்றாலே, என் மனத்துள் இன்பம் எழுச்சி பெறுவதுண்டு. அதற்குக் காரணம், வணக்கத்துக்குரிய தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆதீன கர்த்தராக இருப்பதுதான். சமயத் தொண்டுக்கு மட்டுமின்றி, சமுதாயத் தொண்டுக்கும் ஆதீனத்தைப் பயன்படுத்த அவர் ஒருவர் தானே முன்வந்திருக்கிறார்.

சைவ ஆதீனங்கள் சமுதாயத் தொண்டை மறந்ததால்தான் தனி மனிதர் வாழ்விலே ஆன்மீக ஒளி குன்றி விட்டது. குன்றக்குடி ஆதீனத்தைச் சார்ந்த அருள்தரு திருக்கொடுங் குன்றீசர் திருக்கோயிலும், அருள்தரு மங்கைபாகசுவாமி திருக்கோயிலும் திருப்பணி செய்யப் பெற்றுத் திருக்குட நீராட்டு விழா பெறவிருப்பது அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். விழாவையொட்டி வெளிவரும் சிறப்பு மலர் அந்த நிகழ்ச்சியை வருங்காலத் தலைமுறைகளுக்கு அறிவிக்கும் ஆவணமாக அமையும்.

தமிழ் நாட்டு இளைஞர்கள் ஆன்மீகத் துறையில் ஒளி பெற ஆர்வமற்றவர்களாக இருப்பது நினைவுக்கு வரும்போதெல்லாம் என் மனம் வேதனையடைவதுண்டு. இதற்கு, பெற்றோருடைய தவறுதான் காரணம். சைவம் நிலை பெற்று வாழவும், வளரவும் இளைஞர்கள் ஆன்மீக ஒளி பெற வேண்டும். இந்த உண்மையை உணர்த்தத்தான் சீர்காழிப் பதியில் ஞான சம்பந்தரை இறைவன் அறிமுகப்படுத்தினார் போலும்!

திருஞான சம்பந்தர், தாம் அருளிய தேவாரப் பதிகங்களில் தெய்வ பக்தியையும், தமிழ்ப் பற்றையும் குழைத்துக் கொடுத்திருக்கிறார். தம்மையே 'தமிழ் ஞான சம்பந்தர்' என பதிகந்தோறும் குறிப்பிடுகிறார்.

தமிழில் பக்தி இலக்கியங்கள் படைத்த அடியார்களிலே, தமிழ்ப் பற்றை வளர்ப்பதில் திருஞான சம்பந்தரே அதிக அளவில் அக்கறை காட்டியுள்ளார். அவரது திருப்பதிகத்தைப் பெற்றுள்ள திருக்கொடுங்குன்றம் என்னும் பிரான் மலையில் கோயில் கொண்டுள்ள அருள்தரு திருக்கொடுங்குன்றீசர் திருக்கோயிலும், அருள்தரு மங்கைபாக சுவாமி திருக்கோயிலும் தவத்திரு அடிகளாரின் திருத்தொண்டால் குடமுழுக்கு விழா காண்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. விரைவில் முழு அளவில் கண்ணொளி பெற்று விழாவைக் காண முடியுமென்று நம்புகிறேன். சிறப்பு மலர் தெய்வ மணம் பெற வாழ்த்துகிறேன்.

ம. பொ. சிவஞானம்

சுகவனேஸ்வர், ஐ. ஏ. எஸ்.,
COMMISSIONER
Hindu Religious and Charitable
Endowments Administration
Department

MADRAS – 600 034

வாழ்த்துரை

"பிரான் மலை" என இக்காலத்தில் அழைக்கப் பெற்று வரும் திருக்கொடுங்குன்றம், பாண்டி நாட்டுப் பாடல் பெற்ற பதினான்கு சிவத்தலங்களில் ஒன்றாகும். திருஞான சம்பந்தர் பதிகம் பாடி போற்றியுள்ள இக்கொடுங்குன்றமே, சங்க காலத்தில் முல்லைக்குத் தேர் தந்த வள்ளல் பாரி ஆண்டிருந்த பறம்பு மலையாகத் திகழ்ந்து சிறப்புற்றிருந்தது என்பதை வரலாற்று அறிஞர்கள் தெளிவுபடுத்துகின்றனர். திருஞான சம்பந்தரும் இத்திருக் கொடுங்குன்றம் பழமைச் சிறப்புடைய ஒரு வளநகர் என்பதைத் "திருநகர்" "பெருநகர்" "நெடுநகர்" "பழநகர்" எனத் தம் பதிகத்துள் சுட்டியிருப்பது கொண்டு தெளியலாம்.

ஆதிசேடன் மேருமலையைச் சுருட்டிக் கொள்ள, வாயு தன் பலம் கொண்டு அம்மலையை மோத, மேருமலையின் சிகரம் தூள் தூளாகச் சிதறிப் பல இடங்களிலும் சென்று விழுந்து லிங்கமாக உருப்பெற்றது என்று புராணம் கூறும். வாயுவினால் உருவான மலையே 2450 அடி உயரமுள்ள இப்பிரான் மலையாகும். மலையின்மேலும், மலையின்மேலும், அடிவாரத்திலும் சிவாலயங்கள் திகழ்கின்றன. 30 ஏக்கர் பரப்பளவில் மலையடிவாரத்தில் உள்ள மாபெருங் கோயிலில் அருள்மிகு மங்கை நாயகர், அம்பிகை தேனாம்பிகையுடன் திருமணக் கோலத்தில் எழுந்தருளி அருள் பாலித்து வருகின்றார்; அகத்தியருக்காக சிவபெருமான் திருமணக் கோலம் காட்டியருளிய திருத்தலங்களில் திருக்கொடுங்குன்றமும் ஒன்றாகும். ஆன்மாக்களுக்கு இன்பங்களையும் முடிவில் முக்திப் பேற்றையும் தந்தருளும் கோலம் இதுவாகும்.

"இணை விழைச்சின் சுகமதனை உயிர்கள் எய்த
இருந்த திருக்கோலமென எழில்கொள் வேதம்
பணையுரைக்கும் அபிராம விமலன் தன்னைப்
பாரதெல்லாங் கொண்டாடும் பால் வெண்ணீற்றுத்
துணையிரட்டை கொளுந்தோளில் துலங்கா நின்ற
தும்பை நாறு மலருடனே தோன்றி நின்ற
கணையிரட்டை யனையவிழி உமையோடுற்ற
கலியாணசுந்தரனைக் கருதி வாழ்வாம்

உருவத் திருமேனியுடன் அம்மையும் அப்பனுமாக மங்கை பாகமுடைய நாயகராக இத் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவர், லிங்கத் திருமேனியாகவும் திருக்கொடுங்குன்ற நாதராக தனிச் சந்நிதியில் கோயில் கொண்டுள்ளார். இவரது அம்பிகை அமுதேஸ்வரி எனவும், குயிலமுதநாயகி எனவும் திருநாமம் கொண்டு விளங்குகின்றார். அடிவாரக் கோயிலுக்குள் அமைந்து விளங்கும் முருகர் சந்நிதி அருணகிரி நாதரின் திருப்புகழ் பெற்ற சிறப்பு வாய்ந்தது. மேற்கு முகமாக வள்ளி தெய்வ யானையுடன் கண்கவர் வனப்புடன் காட்சியளிக்கின்றார். அருணகிரி நாதருக்கு நடனக் காட்சி தந்தருளிய முருகப் பெருமான் சந்நிதிமுன், மயிலுக்குப் பதிலாக யானை விளங்குவது இத்தலத்திற்குள்ள மற்றுமொரு சிறப்பாகும்.

மலையின்மேல் வயிரவர் கோயிலும், மற்றுமொரு சிவன் கோயிலும் அமைந்து விளங்குகின்றன. மலைமேலும், மலை அடிவாரத்திலுமாக 108 புண்ணிய தீர்த்தங்கள் அமைந்து விளங்குகின்றன. குஷ்ட நிவாரண தீர்த்தம், மதுபுஷ்கரணி தீர்த்தம், அக்கினி தீர்த்தம், சித்தாமிர்த தீர்த்தம், க்ஷீர தீர்த்தம், பைரவ தீர்த்தம், சித்த தீர்த்தம், இராம தீர்த்தம், ஆதித்திய தீர்த்தம் முதலான பல புண்ணிய தீர்த்தங்கள் உடல் நோயுடன் உள்ள நோயும் தீர்த்துப் பிறவி நோய்க்கும் அருமருந்தாக அமைந்து விளங்குகின்றன.

குன்றக்குடி ஆதீனத்தால் நன்கு பராமரிக்கப்பட்டுவரும் இத்திருக் கொடுங்குன்றக் கோயில்கள் அனைத்தும் திருப்பணிகள் கண்டு, 20 — 4 — 92ல் திருக்குட நீராட்டுவிழா காண இருப்பது அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். "திருக்கோயில் பொருந்த ஓர் செங்கல் இடுவார், உலகாள்வார்" என்ற முதுமொழிக்கிணங்க, அருள்மிகு மங்கைபாகருக்கும், அருள்மிகு திருக்கொடுங்குன்றீசருக்கும் நடைபெறும் திருப்பணிகளில் அன்பர்கள் பெருமளவில் பங்கு கொண்டு, இகபர சுகங்கள் யாவும் எய்தி இனிதே வாழ்ந்திட, எல்லாம் வல்ல இறைவன் திருவருளைப் பிரார்த்தித்து வேண்டுகிறேன்.

அன்பே சிவம்,

சுகவனேஸ்வர்

26 — 2 — 92

நா. மகாலிங்கம்,
பி. எஸ்ஸி., எப். ஐ. இ.

தொலைபேசி: { அலுவலகம் : 2350814
இல்லம் ; 456898

101, மவுண்ட் ரோடு,
கிண்டி, சென்னை - 600 032

27 – 2 – 1992

வண. தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களுக்கு,

வணக்கம்.

குன்றக்குடி ஆதீனத் திருக்கோயில்களில் ஒன்றான பிரான்மலை திருக்கொடுங்குன்றீசர் திருக்கோயிலின் திருப்பணி செவ்வனே நடாத்தப் பெற்று, வரும் ஏப்ரல் மாதம் 20-ஆந் தேதியான நந்நாளில் திருக்குட நீராட்டு நடைபெற இருப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

பிரான்மலை அல்லது பறம்பு மலை அல்லது திருக்கொடுங் குன்றம் என்பது பாடல் பெற்ற திருத்தலமாகும். திருஞான சம்பந்தர் இத்திருத்தலம் பற்றிப் பதிகம் பாடியிருப்பது இதன் சிறப்புகளில் ஒன்று. பறம்பு நாடு எனப்படுவது பண்டைக் காலத்தில் முந்நூறு நாடுகளை உள்ளடக்கியிருந்தது. பாரி வள்ளலின் நாடு.

இத்தகைய சிறப்புகள் வாய்ந்த திருத்தலத்தின் திருப் பணியைத் தாங்கள் முன்னின்று முயற்சி எடுத்துச் சிறப்பாக முடித்துள்ளதை மனமாரப் பாராட்டுகிறேன்.

வாழ்க தங்கள் சீரிய முயற்சிகள்.

தங்கள் அன்புள்ள

நா. மகாலிங்கம்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள்
குன்றக்குடி. - 623 206
பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்

S. Madhavan,
B. Com., B. L.,
Member of Parliment
Rajya Sabha



17, Sixth Main Road,
Raja Annamalai Puram,
Madras - 600 028
Phone: 457056

வள்ளல் பாரி மன்னன் வாழ்ந்து வரலாறு படைத்த பறம்பு மலையின் சிறப்பை விளக்கி நிற்கும் திருக்கோயில் களில் நடைபெறும் திருக்குட நீராட்டு விழா சீரும் சிறப்புடன் அமைந்திட விழைகின்றேன்.

தமிழ் உலகம் போற்றும் தவத்திரு அடிகளார் அவர் களின் வழிகாட்டு நெறியில், திருக்கோயில்களின் திருப்பணி, அருளாளர்களின் இடைவிடாத முயற்சியால் சிறப்புடன் அமைந்துள்ளது மிகவும் மகிழ்ச்சியைத் தருகின்றது. வறுமை சூழ்ந்த பகுதியில் பழமைப்புகழ் பரப்பிடும் அருள்திரு திருக் கொடுங்குன்றீசர் திருக்கோயிலிலும், அருள்திரு மங்கை பாக சுவாமி திருக்கோயிலிலும், அருள் உள்ளம் கொண்டோர்களின் வள்ளல் தன்மையால் வாரி வழங்கிய நிதி கொண்டு, திருப் பணிகள் செம்மையாக நடைபெற்றிருப்பது ஓர் அரிய சாதனையாகும். இயற்கை பொய்த்தாலும், தமிழ் இன உணர்வு நிறைந்த ஆதினங்கள் வளம் குன்றி வாழ்ந்தாலும், தமிழ் மண்ணிற்கு உரிமை உடையவர்கள் திருக்கோயில் களை மறந்திடமாட்டார்கள் என்பதற்கு இங்கு நடை பெற்றுள்ள திருப்பணிகள் சான்றாக அமைந்துவிட்டன. தவத்திரு அடிகளார் தலைமையில் அயராது உழைத்து திருப்பணிகளை வெற்றிகரமாக நடத்திட்ட அருளாளர்கள், கொடையாளர்கள், அனைவர்க்கும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செ. மாதவன்
1 – 2 – 92

பாரதிதாசன் பல்கலைக்கழகம்

பல்கலைப்பேரூர் - திருச்சிராப்பள்ளி - 620 024

ச. முத்துக்குமரன்

துணைவேந்தர்

சனவரி 21, 1992

வாழ்த்துரை

குன்றக்குடி ஆதீனத் திருக்கோயில்களில் ஒன்றாக விளங்குவதும் பாண்டிப் பதினான்கு திருத்தலங்களில் ஒன்றாகத் திகழ்வதுமாகிய திருக்கொடுங்குன்றம் என்னும் பிரான் மலையிலுள்ள அருள்மிகு திருக்கொடுங்குன்றீசர் திருக்கோயிலும் அருள்மிகு மங்கைபாகசுவாமி திருக்கோயிலும் திருப்பணி செய்யப்பட்டு எதிர்வரும் எப்பிரல் திங்களில் திருக்குட நன்னீராட்டு செய்யப்பட விருப்பதை அறிந்து மெத்த மகிழ்ச்சியுற்றேன். அது போழ்து இந்நிகழ்வினை நினைவு கூறும் வகையில் திருக்குட நன்னீராட்டு விழா மலர் ஒன்றும் வெளியிட விருப்பது சாலச் சிறந்த பணி. போற்ற வேண்டிய முயற்சி.

திருக்கோயில்களின் கண் உறையும் உமையொடு பாகனின் அருட்திருவிளையாடல் தன்னைச் சுட்டி, பேரின்பம் ஈயும் அந்தப் பெயர், உரு சோதி தன்னை பல்லோரும் உணரும் நல்ல பாங்கினைக் கூறுமாப்போல் உயரிய கருத்துக் கருவூலங்கள் விழா மலரில் இடம் பெற்று உயர்ந்து நிற்கும் என நம்புகின்றேன். தவத்திரு குன்றக்குடி ஆதீனத் தலைவர் அடிகளார் அவர்களின் சீரிய மேற்பார்வையில் நன்னீராட்டு விழா சிறப்புறத் திகழும் என்பதில் சற்றேனும் ஐயமில்லை. விழா மலரின் வெற்றிக்கு எனது உளமார்ந்த வாழ்த்துக்கள். திருவருள் பொலிந்து நிற்கும் கருவறை உறையுமந்த திருவருள் ஈசனாரின் திருவருள் எல்லோரும் பெற திருவடி வேண்டி போற்றி நிற்கும்.

ச. முத்துக்குமரன்

துணைவேந்தர்

டாக்டர் ஆ. ஞானம்
F. N. A., F. N. Asci
துணைவேந்தர்
புதுவைப் பல்கலைக்கழகம்
அலுவலகம் : 85-475
தொலைபேசி : 24681
இல்லம் : 23363
ஆர். வெங்கடராமன் நகர்,
புதுச்சேரி - 605 014

புப / து. வே / 92 / 36 ஜனவரி 27, 1992.

புப / து, வே / 92 / 36 ஜனவரி : 27, 1992

வாழ்த்துரை

பாரி புகழ் பெற்ற வள்ளல். கொழுகொம்பு இல்லாமல் வாடிய முல்லைக் கொடியின் துன்பத்தைக் கண்டு பொறாமல் தன் தேரையே கொழுகொம்பாக அளித்தவன் என்பது வரலாறு. அவன் ஆட்சி செய்த மலை - பறம்பு மலை. அம் மலையின்கண் உள்ள இறைவனுக்கும், இறைவிக்கும் திருப் பணி நிகழ இருப்பது வரவேற்பிற்கும், வணக்கத்திற்கும் உரியது.

தமிழ் சமுதாயத்தின் ஒப்புறவு இன்றும், திருக்கோயில் கள் கட்டுவதிலும், வழிபாட்டு முறையிலும் மட்டுமே காணப் படுகின்றது. அத்தகைய ஒப்புறவு சின்னங்களைப் போற்றி ஆன்மீக வழியில் ஒப்புறவை வளர்க்க இத்தகைய திருப்பணி கள் அவசியம்.

திருப்பணியை நிறைவேற்ற அருள்திரு குன்றக்குடி அடிகளார் முன் வந்திருப்பது மிகுந்த மகிழ்ச்சிக்கும் பாராட் டிற்கும் உரியது. இந்திய நாடே அடிகளாரின் சிற்றூர் வளர்ச் சித் திட்டத்தைக் கண்டு வியக்கும் அடிகளார் திருப்பணித் தொண்டுகளையும் விடாது தொடருகிறார் என்பது இனிப் பான செய்தி.

இறைவனின் ஆசியும், அடிகளாரின் முயற்சியும் முன் நிற்க, திருக்குட நீராட்டு விழா இனிதே நிறைவேற நெஞ்சார வாழ்த்துகிறேன்.

இங்ஙன்,

ஆ. ஞானம்

Dr. (Mrs.) Radha Thiagarajan
M. A., Ph. D.
Chairman & Managing Director

Thiagarajar Mills Ltd.,
Kappalur 626 709
MADURAI

Ph. Off : 88591
Res : 88334

30 — 1 — 1992

வாழ்த்துரை

பிரான்மலை என வழங்கும் திருக்கொடுங்குன்றத்தில், திருக்கொடுங்குன்றீசர் திருக்கோயிலும், மங்கைபாக சுவாமி திருக்கோயிலும் திருப்பணி நிறைவுற்றுக் குடமுழுக்கு விழா நடைபெறுவது மகிழ்ச்சிக்குரியது. இம்மங்கல விழாவின் தொடர்பாக வண்ணமலர் ஒன்று வெளிவருவது சாலவும் பொருத்தம் உடையதாகும். கொடுங்குன்றம் என்ற பறம்பு மலை வற்றா வளம் உடையதென, ஈற்றமிழ்ச் சங்கச் சான்றோர் கபிலர் பெருமானால் அன்பு கனியப் பாடப்பெற்ற சிறப்புடையது. இம் மாமலையின் இயற்கையழகுப் பொலிவைத் திருஞானசம்பந்தர் எழிலுறப் பாடியுள்ளார்.

இத்தகைய பழம்பெருந் திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்தும், அவற்றைப் பேணிப் பாதுகாத்தும் தமிழ் நாட்டின் பழம் பெருமைக்குப் பெருங்கிழமைப் புரவலராகத் திகழும் தவத்திரு அடிகளார் அவர்களைப் பாராட்டி வணங்கி, இச்சிறப்பு மலர் அறிவு மணம் பரப்பு வாழ்த்துகின்றேன்.

Radha Thiagarajan

Dr. K. NAGAPPAN
Vice - Chancellor

Office : 3284
Resi : 3052
Alagappanagar
KARAIKUDI-623 003

Alagappa University

நாள் : 10 — 01 — 1992

திருமிகு தமிழ்மாமுனிவர் குன்றக்குடி அடிகளார் அவர்கட்கு,

வணக்கம். தங்கள் மடல் கிடைத்தது. பிரான்மலைக் கோயிலுக்கும், மங்கைபாகசுவாமி கோயிலுக்கும் குடமுழுக்கு நிகழ இருப்பது அறிந்து மகிழ்கிறேன். ஆலய வழிபாடு உயிர்களுக்கு அமைதியையும், இன்பத்தையும் தருவது. "ஞாலம் நின் புகழ் மிகவேண்டும்" எனத் தேவார ஆசிரியர்கள் பாடினர் "பொன்னும், பொருளும், போகமும்" தருகிற மங்கைபங்கனை வாழ்த்தி, வணங்க வாய்ப்பாக இருப்பதும், தேவாரப் பாடல் பெற்றதுமான இப்புண்ணிய கோயில்களுக்கு நன்னீராட்டு விழா நடத்துவது, எண்ணிச் செய்யும் தங்களைத் தவிர வேறு எவரால் இயலும்? தங்களின் சீரிய முயற்சி சிறந்து இனிது நிறைவேறவும், "மலர்" அறிவு மணங் கமழவும், எனது இனிய நல்வாழ்த்தைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

நன்றி,

தங்கள் அன்புள்ள,
கா. நாகப்பன்

பெறுநர்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்,
குன்றக்குடி — 623 206.
பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.

D. INDIRA DEVI, B.A.,
Rani of Ramnad.

MEMBER,
Tamil Nadu Temple Administration Board

Palace :

Ramanathapuram.
Pin – 623 501.
Phone No. 303

Date : 4 — 2 — 92.



பெறுநர்,

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள்,
குன்றக்குடி.

பெருமதிப்பிற்குரிய அடிகளார் அவர்கட்கு,

வணக்கம் !

தங்களுடைய 20 — 1 — 92 நாளிட்ட கடிதம் கிடைக்கப் பெற்றேன், மிக்கமகிழ்ச்சி.

"வானிற் பொலிலெய்தும் மழைமேகம் கழித்தோடி
கனற் பிறைசேரும் குளிர்சாரல் கொடுங்குன்றம்'' என

திருஞானசம்பந்தசுவாமிகளால் பாடப்பெற்ற திருத்தலமான "திருக்கொடுங்குன்றத்தில்'' எழுந்தருளியிருக்கும் "ஈசர் திருக்கோயிலும்'' அருள்தரு மங்கைபாக சுவாமி திருக்கோயிலும்'' தங்களின் அளப்பரிய முயற்சியால் திருப்பணி செய்யப்பெற்று, 20 — 4 — 92 ஆம் நாள் திருக்குட நீராட்டு விழா நடைபெற இருப்பது கண்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

தங்களின் திருக்கோயில் திருப்பணி முயற்சிக்கு எனது பாராட்டுக்கள். விழா பல்லாற்றுலும் சிறக்க எனது நல் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

என்றும் இறையருள் துணைநிற்க.

த. இந்திராதேவி

இராம. அருணகிரி
முன்னாள் பெருந்தலைவர்

ஊராட்சி ஒன்றியக் குழு
சிங்கம்புணரி-624 502
பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்
தொலைபேசி :
அலுவலகம் 28
இருப்பிடம் 69

நாள் : 11 — 2 — 92

பெறுநர்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள்,
குன்றக்குடி ஆதீனம்,
குன்றக்குடி.

பறம்புமலை !

வள்ளல் பாரி ஆண்ட மலை! தோலா நாவின் மேலோராகிய கபிலர் பெருமகனார் பாராட்டிய மலை.

பின்னாளில் — சமய காலத்தில் — திருக்கொடுங்குன்றமாகி திருஞான சம்பந்தப் பெருமான் பாடிப் பரவிய மலை.

"கொடுக்கிலாதானைப் பாரியே எனக் கூறினும் கொடுப்பாரிலை" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் புகழ்ந்த மலை.

இடைக்காலத்தில் சிவபிரான்மலையாகி —— தற்காலத்தில் பிரான்மலை என வழங்கும் பெற்றியது. பிரான்மலை — திருக்கொடுங்குன்றம் — பாண்டிய நாட்டுத் திருத்தலங்கள் பதினான்கு. அதில் ஐந்தாவதாக அமைந்த சிறப்புக் குரியது, பசும்பொன் மாவட்டத்தில் உன்னதமான வரலாற்றுச் சிறப்புடைய — இலக்கிய பெரும்புகழ் பெற்ற ஒரே மலை.

அருள் தரு மங்கை பாகர் அருள்பாலிக்கும் மலை. அன்னைகுயில முதநாயகி அறம் வளர்க்கும் அழகு மலை.

திருக்கொடுங்குன்ற நாதர் திருவளிக்கும் மலை, அகோர வீரபத்திரர் பைரவர் — காத்தருளும் அற்புத மலை. இத்தெய்வங்கள் அமர்ந்திருக்கும் ஆலயங்கட்குத் திருக்குட நன்னீராட்டு விழா நடப்பது கண்டு மிகவும் மகிழ்கிறேன். பல ஆண்டுகளுக்குப் பிறகு ஆலயங்கள் பழுதகற்றி, செப்பம் செய்யப் பெற்று வேதம் வல்ல சிவாச்சாரியர்களைக் கொண்டு திருக்குட நன்னீராட்டு விழா நிகழ்கிறது. இந்த விழா சிறப்புற என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குன்றக்குடி திருவண்ணாமலை ஐந்து கோவில் தேவஸ்தானத்தின் பரம்பரை த்தரும கர்த்தா தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் ஆட்சிக் காலத்தில், அவர்களின் சீரிய முயற்சியால் இத்திருக்கோயில் புதுப்பொலிவு பெற்று திருக்குட நன்னீராட்டு பெறுவது மிகவும் பெருமைக்குரியதாகும். இந் நன்முயற்சி சிறப்புற நிகழ்வதற்கு எல்லாம் வல்ல நல்ல மங்கை பாகனின் திருத்தாள்களை வழுத்துகிறேன்.

அன்புடன்,

இராம. அருணகிரி

N. AR. NAGARAJAN,

Arumugam Maaligai
Tiruppattur - 623 211
P. T. T. District

Phone: 24 & 64
Grams: "ARUM"

Date: 14—2—92

பறம்பு மலையில் எழுந்தருளியுள்ள அருள்தரு திருக்கொடுங்குன்றீசர் திருக்கோயிலும், அருள்தரு மங்கைபாக சுவாமி திருக்கோயிலும் திருப்பணி செய்யப் பெற்றுத் திருக்குட நீராட்டுவிழா நடைபெறுவது கண்டு பெரிதும் மகிழ்கின்றேன்.

சங்க இலக்கியத்தில்
"பயில்பூஞ் சோலை மயிலெழுந் தாலவும்
பயிலிருஞ் சிலம்பிற் கலைபாய்ந் துகளவும்
கலையுங் கொள்ளா வாகப் பலவும்
கால மன்றியு மரம்பயம் பகரும்
யாணர் அறா"

பறம்பு மலையாகவும், தேவாரத்தில்
"வானிற் பொலிவெய்தும் மழைமேகங் கிழித்தோடிக்
கனற் பிறை சேருங் குளிர் சாரல்"

கொடுங்குன்றமாகவும் விளங்கும் பிரான்மலை, வரலாற்றுச் சிறப்புமிக்க திருத்தலம்.

பொற்குடத்திற்கு அமைந்த பொட்டுப் போன்று, மாரியன்ன வண்மைப் பாரியின் கோநகருக்குத் திலகமாக இலங்கும் திருக்கோயில்களை எடுத்து நிறுத்தித் திருப்பணி செய்து நிகழ்த்தும் திருக்குட நீராட்டுவிழா சீரும் சிறப்புமாக நடைபெற வாழ்த்தி மகிழ்கிறேன்.

என். ஏஆர். நாகராஜன்

பெறுநர்

டாக்டர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள்,
குன்றக்குடி ஆதீனம்,
குன்றக்குடி - 623 206.

உ

சிவ சிவ

தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே.

தவத்திரு
குன்றக்குடி அடிகளார்

குன்றக்குடி - 623 206
பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்
தொலைபேசி: குன்றக்குடி 327

வாழ்த்துரை

பறம்புமலை! இனிய உணர்வுகளை, மாந்தருக்குரிய உணர்வுகளை வழங்கும் மலை! வளமான மலை! நந்தம் குலமுழுதும் வளமோடு வாழ வந்தினி-தருளும் மங்கைநாயகர் எழுந்தருளியுள்ள மலை!

பொன்னும் மெய்ப்பொருளும் போக்கும் தந்தருளித்திருவும் தந்தருளும் தமிழர்தம் குலதெய்வம் மங்கை நாயகர். ஆம்! மங்கைநாயகர், எருக்கம் பூவே யாயினும் சூட்டுபவர் உள்ள நலம் கருதி ஏற்பர்! வள்ளல்பாரி, கொடைமடம் பட்ட புகழ் மரபினன்! பிரான்மலை கருணைமலை! ''உக்கிரகிரி'' யல்ல! வளைந்துகிடக்கும் மலையாதலால் கொடுங்குன்றம் எனப் பெயர் பெற்றது.


இன்று, இத்திருக்கோயில் திருப்பணி செய்யப் பெற்று புதுமையும் திருவருட் பொலிவும் பெற்றுத் திகழ்கிறது! இப்பணியின் தொடர்ச்சியாகப் பறம்புமலையையும், பறம்புமலையின் சுற்றுப் புறத்தையும் மரங்கள் வளர்த்து வளப்படுத்தினால் மீண்டும் நமது பறம்புமலை, சங்ககாலத்துப் பறம்புமலையாகத் தோன்றும்! மக்களும் வளர்வர்! நாடும் வளரும்!

இப்பணிக்கெல்லாம் உற்றதுணையாக இருக்கும் அரிவையூர் நகரத் தாருக்கும், உதவிக் கரங்களாக விளங்கும் முத்துராசாக்கள் சமூகத்தாருக்கும் ஊரவருக்கும் நன்றி! கடப்பாடு!


இன்ப அன்பு


அடிகளார்

திருக்குட நன்னீராட்டுத் திருக்காட்சிகள்












திருக்குட நன்னீராட்டுத் திருக்காட்சிகள்

யாகசாலை





திருக்குட நன்னீராட்டுத் திருக்காட்சிகள்



இடமிருந்து வலம் :

தவத்திரு சுந்தர சுவாமிகள்,
தவத்திரு பேரூர் அடிகளார்,
கோவிலூர் ஆதீனகர்த்தர்,
திருவாவடுதுறை மகாசந்நிதானம்



இடமிருந்து வலம் :

தருமபுரம் மகாசந்நிதானம்,
தவத்திரு அடிகளார்,
திருப்புகலூர் வேளாக்குறிச்சி
ஆதீனகர்த்தர்



இடமிருந்து வலம்

தவத்திரு அடிகளார்,
திருவாவடுதுறை மகா சந்நிதானத்துடன்

கவி மணம்

பைந்தமிழ்ப் பறம்புமலை

'கவிஞர் கோ' சிற்பி பாலசுப்பிரமணியம்

நெற்றி நிறைந்த திருநீறு
நெஞ்சில் சிந்தனை பலநூறு
குற்றாலத்து வெள்ளருவிக்
கற்றை நடுவில் குமிண்சிரிப்பு
உற்ற தமிழர் நலம் பேணும்
ஓயா உழைப்பின் தவக்கோலம்
முற்றும் மனித நேயமது
முதிர்ந்து விளைந்த திருவடிவம்

காவி உடையில் பொதிந்திருக்கும்
தமிழ்மா முனியாம் ஞானமணி
பூவினும் மெல்லிய இதயத்தில்
புரட்சி வைரமணி கனல்விடும்
மேவிய குன்றக் குடியில் புதுச்
சரித்திரம் செதுக்கிய அறிவுமணி
நாவினில் நெஞ்சில் குறள்மறைபோல்
நவில மணக்கும் தெய்வ சிகாமணி

ஆயிர மாயிரம் கவிமலரால்
அடிகளார் திருப்பதம் சூடுகின்றோம்
தாயினும் இனிய நாயகர்க்குத்
தமிழ் கொண்டு பல்லாண்டு பாடுகின்றோம்.

★

நிறங்கள் அணிவகுக்கும்
ஓவியனின் தூரிகை போல்
பறம்பின் வளம்பாட
அரங்கில் அணிவகுத்தவரே!
அனைவருக்கும்
வணக்கங்கள்

★

பச்சை மலை பவளமலை
பனிதூங்கும் இமயமலை
கொச்சி மலை குடகு மலை
குளிர் தூங்கும் பொதிகை மலை
வெள்ளி மலை கொல்லி மலை
வேங்கடத்துச் செல்வமலை
வள்ளிமலை மருதமலை
ஆனைமலை பழனிமலை
எத்தனையோ மலைகள் இந்த
எழில் நாட்டில் இருந்தாலும் – தமிழன்

ஈரமுள்ள இதயத்தின்
இலக்கியமாய் அமைந்த மலை
இந்தப் பறம்பு மலை.

முன்னொரு நாள்
முன்னொரு நாள்
முளைப்பாரி வைத்ததுபோல்
முத்துமுத்தாய் அருவி
பொழிந்த திந்தப் பாரிமலை
மலையோர மூங்கில்களில் தலைசாயும் நெற்கதிர்கள்

அள்ளுகிற மண்ணில் வள்ளிக்கிழங்குகள்
குட்டிகளைக் கட்டிப் பிடித்த தாய்க்
குரங்குகள் போல்
அடிமரத்தில்
தடித்து வெடித்த பலாப்பழங்கள்
கபிலர் பிரான் கவிதைகள்போல்
அடை உடைந்து மடை பெருகும்
ஆனந்தத் தேன் பெருக்கு
இயற்கை பெருவளத்தை
வரம்பின்றிச் சுரக்க வைத்த பறம்புமலை

புலனழுக்கற்ற அந்தணாளன்
புகழ்த் திருஞான சம்பந்தப் பெருமான்
மங்கை பாகர் பிரானை
வாழ்த்திய பெருமைசால் பிரான்மலை
வளமோடு வரங்களெல்லாம்
கொடுக்கும் குன்றம் பெயர் மருவிப்போன
திருக்கொடுங் குன்ற மலை

பைந்தமிழ்ப் பாவாணர்
உச்சிமேல் வைத்து
உகந்தமலை இந்தச் சிறந்தமலை

பாரி
நடை கற்ற போதே
கொடை கற்றுக்
கொடுத்த மலை இந்தமலை

வானத்திலிருந்து
உதிர்ந்து விழுந்த நட்சத்திரங்கள் போல்
பாறையைக் கீறி
ஊறி வரும் சுனைகள்
கல்லாக இதயம் இருந்தாலும்
கசிந்துருகக் கற்றுக்கொள் என்று
சொல்லாமல் சொல்லிக் காட்டின.

மரக்கிளையின் கெட்டிப் பலாச் சுளையும்
மண்ணில் ஒட்டிய வள்ளிக்கிழங்கும்
கொடை நலத்தைக் கற்பிக்க
வள்ளல் பாரிக்குப்
பள்ளிக்கூடம் நடத்தின.

அதனால்
ஈகை அவனுக்கு
இமைப்பது போன்று
இயற்கை ஆயிற்று

அவன்
தென்றலைப் போலத்
திரிந்தாலும் நடந்தாலும்
கொடை
மூச்சுக் காற்றைப் போல
முறைமை ஆயிற்று

மெய் வாய் கண் மூக்கு
செவி என்ற அவன் ஐம்புலனும்
ஒரு சுவையையே
நுகர்ந்தன

அயராது கொடுப்பதால்
வரும்
ஆராத இன்பம்,
பாணனின் நா அசைந்தால்
பாரியின் தண்பறம்பு நன்னாட்டு
முந்நூறு ஊர்களில்
ஓர் ஊர் குறையும்

விறலியின் இடை நெளிந்தால்
பாரியின் பொற்களஞ்சியத்தில்
எடை சரியும்
பட்டினி வயிறுகள்
அவனுக்குப்
பகைவரின் பாசறைகள் ஆகத்தெரிந்தன
ஒடுங்கிய விழிகள்
எதிரிகளின்
பதுங்கு குழிகளாகப் பட்டன.

பாரியின்
கொடை தளிர்த்த மண்ணில்
இழிவாய் ஒலிக்கும்
'ஈ' என்ற எழுத்தே
இல்லாமல் போயிற்று

வயிறும் மனமும்
நிரம்பி வழிந்ததால்

'ஐ' என்ற ஆச்சரிய எழுத்து
ஐந்து மாத்திரையாய்
நீண்டே ஒலித்தது!

★

ஒருநாள் வெயிலின் கிரணங்கள்
வீசும் கடுங்கோடை
அவன் தேர்
அசைந்தசைந்து மலைச்சாலையில்
அழகாய் வந்தது.

கபிலரின் கவிதையில்
அவன் உதடசையும்
அவன் நெஞ்சின் அலைகளென
நேசக்குதிரைப் பிடரி மயிரசையும்
அவன் புகழை இசைப்பதென
தேரின் மணி நா அசையும்
அசைந்து வந்த தேர்
சட்டென்று
ஆச்சரியக் குறி போன்று
அசையாமல் நின்றது!
பாரியின் விழிகளில்
வினாக் குறிகள்!

பாதை நடுவில்
அனல்பட்ட புழுப்போல
அலைபாய்ந்து கிடந்தது ஓர்
காட்டு முல்லைக் கொடி
தன்னை மறந்தான் பாரி
தவிப்பொன்றே மனம் நிறைந்தான்
ஆடும் கொடியின்
அசைவில் கொழுகொம்பு
தேடும் பரிதவிப்பே
தெரிந்ததந்த மன்னனுக்கு!
வாட்டம் ஒன்றே பாரி
விழிவழியே தாக்கியது...

பந்தலிட்டு காக்கப்
பரிசனங்கள் உண்டென்றும்
நீர்பாய்ச்ச ஆணையிட்டால்
நெடும்படையே உண்டென்றும்
நினைக்க வில்லை பாரி!
முல்லை
கனத்த துயர் முகமே
கண்ணை மனத்தை
கருத்தை நிரப்பியது...

சோக முல்லை வாய்திறந்து
சொல்லவில்லை - ஆனாலும்
பாசமுல்லை அவன் நெஞ்சில்
படரத் தொடங்கியது

கனகமணி நெடுந்தேரில்
காட்டுக் கொடி எடுத்துப்
பற்றிப் படர விட்டான்
பார்த்தான் - பூரித்தான்

பொருள்
அற்ற இளங்கொடியை
அழகான மணவாளன்
கரத்தில் கொடுத்துவிட்ட
தந்தையைப் போல்
குதூகலித்தான்

ஓர் உயிரின் துயரம்
ஆருயிரைக் கவ்வியதால்
பாரில் உயர்ந்த கொடைப்
பரிசு தந்து
சீருயர்ந்தான் பாரி

★

ஆனாலும் ஆனாலும்
முல்லைக் கொடிக்கும் அன்பு
முகம் காட்டும் வள்ளலுக்கு
வில் அம்பு கொலை வாளால்
வீழ்ச்சி தந்தார் மூவேந்தர்
நெக்குருகும் உள்ளம்
உடையான் உயிரைப்
பக்கென்று பருக ஒரு - தீவட்டிப்
பட்டாளம் கூடியது . . .

அருவிகளில் செந்நீர்
அலைகள் புரண்டோடும் !
பாரிமகளிர் என்ற
தங்கப் பதுமைகள்
வெற்றுப் புழுதியிலே
விழுந்து நிலைகுலையும் !
கபிலன் கவிதைகளில்
கண்ணீர் கரைபுரளும் . . . . .
எல்லாம் கொடுத்து இறுதியில்
உயிரும் கொடுத்தான்
பாரி என்ற கொடையாளி

★

என் இனிய தமிழ் இனத்தீர் !

வஞ்சனையின் நஞ்சு
அன்று வைக்கப்பட்டதால் தான்
நெஞ்சம் வெந்துபோய்ப்
பறம்புமலை மெல்ல மெல்ல
வறண்டமலை ஆயிற்று

ஒரு தமிழனின் உயர்வைப்
போற்றாத உடன்பிறந்த தமிழர்களால்
முகம் திருப்பிக் கொண்டு
முரண்படும் இயற்கை எனப்
பாரி வரலாறு
படிப்படியாய்ச் சொல்கிறது

அதனால் தான்
கோடி நலம் கொடுத்த இக்குன்றம்
ஆளுடைய பிள்ளை
சம்பந்தர் காலத்தில்
நலம்கோடி நலம் கோடிக்
கொடுங் குன்றம்
ஆயிற்றுப் போலும்!

மங்கைக் கொரு பாகம்
மாண்புறவே கொடுத்து
தங்களிடம்
உள்ள பொருள் மற்றவர்க்கே
உவந்தளிக்க என்று
சிவனாரும் இங்கே
சிறந்த கொடையழகைச்
செப்புகின்றார் போலும்!

இனியேனும்
சென்ற காலப் பிழையைச்
செய்யாதிருக்கக்
கோலக் குடமுழுக்கு நன்னாளில்
ஓர் உறுதி கொள்வோம்

குன்றக் குடிப் பெருமை
கோபுரத்தில் ஏற்றி வைத்த
சங்கத் தமிழனைய
சான்றோர் - நம் அடிகளார்
தமிழ் வாழத் தாம்வாழும்
தலைமகனார்
மானுடத்தின் சீர்மை
மகத்துவத்தைக் காக்கும்
சிந்தனையின் தேக்கம்
நம் செல்வம் அடிகளார்
எடுக்கும் முயற்சிகளுக்கு

இனிய துணையாவோம்
ஆதரவுக் கரம் கொடுப்போம்
அன்பால் அடிபணிவோம்
பாரி காலத்துப்
பண்டை நெடும் பழியைத்
துடைக்கத் துணையாவோம்
தூய தமிழ் நெறிசார்வோம்...

★

முல்லைக்குத் தேவை
வெறும் கொம்பு
முத்துப் பதித்துச் சித்திர வளப்புமிகு
மாணிக்கத் தேரல்ல

எனினும் அவன் மனவேகம்
இணையற்றுப் போனதனால்
விலை, மதிப்பு, பெறுவான் சீர்
என்றெதையும் கருதவில்லை

அடுத்த கணம் துயரம்
ஆற்றப்பட வேண்டும்
அது ஒன்றே
அவன் குறிக்கோள்...

வையம் முழுவதிலும் இந்த
வான் கொடைக்கு நிகராக
ஐயமுறக் கூட
ஆளில்லை...!

[19-4-92 சங்கத் தமிழ்விழாவில், நிகழ்ந்த கவியரங்க நிகழ்ச்சியின் தலைமைக் கவிதை]

பாரியும் பறம்பும்

'கவிஞர்கோ' ஆ. பழநி.

1 காரளித்த கையுடையான்;
கலையளந்த நெஞ்சுடையான்;
கருதும் மூன்னூ
றூரளித்த பெருங்கொடையான்;
உயிரளித்த சிறப்புடையான்
கபிலன் பாட்டிற்(கு);
யாரளித்த திக்கொடைதான்
எனவழியில் வினவுவரேல்
நறுமுல் லைக்குத்
தேரளித்த பாரிவள்ளல்
செய்தளித்தான் எனச்சொல்லும்
சீர்த்தி மிக்கான்

2 வாட்டுகின்ற பசிப்பிணியால்
வருந்திவரு வோர்க்கெல்லாம்
அன்ன வாசல்;
மீட்டுகின்ற யாழெடுத்து
மிகுபுலமைத் திறனுடைய
கவிக்கு யில்கள்
வேட்டெழுந்து வந்திடுமேல்
விரும்பிவர வேற்கின்ற
வேடன் தாங்கல்;
காட்டகத்து வெண்முல்லைக்
கவிஞனுக்கும் சிறப்புகளை
வழங்கும் தேரூர்.





3 வளர்ப்பவர்க்குப் பிள்ளைவிடும்
வழக்கத்தை இவண்தொடக்கி
வைத்தான் போலும்;
களைப்பறியா வாழ்க்கையினைப்
பாரியுற்ற துன்பத்தால்
கையி ழந்து
மலைப்புற்று நிற்கையில்என்
மக்களைநீ காக்கவென
மலையி ரண்டைத்
தலைச்சுமத்தி வைத்தானே
தமிழ்க்கபிலன் பட்டதுயர்
தாங்கொ ணாது

4 திறமைக்குப் பொருள்கொடுத்தல்
பாரியவன் செயலன்று;
தீயாய்ப் பற்றும்
வறுமைக்குப் பொருள்தரலே
வாழ்க்கைநெறி எனக்கொண்டான்;
கபிலன் பாட்டில்

பெருமையற்ற எருக்கினையும்
இறைவேனைத் தவறாவிலான்
என்ற பேச்சின்
பொருளென்ன? கடைக்கோடி
மனிதனையும் இவன்புறந்தல்
கழறத் தானே!

5 முல்லைக்கும் மல்லிகைக்கும்
பந்தலிட்டு முன்காக்க
முனைவோர் உண்டு;
கொல்லைக்குள் சாமந்திக்
குறுஞ்செடிக்கு நீர்வார்த்துக்
கொள்வார் உண்டே!
எல்லார்க்கும் வெறுப்பளிக்கும்
எருக்கிற்கு நீர்வார்க்க
எவர்நி னைத்தார்?
நல்லோர்க்குள் நல்லனிவன்
ஆதலினால் எருக்கனையார்
நலம்பெற் றுய்ந்தார்.



6 இரங்கத்தக்கார்க் காணின்
இருவிழிகள் அருள்சொரியும்;
இசைந்த செம்பொற்
சுரங்கத்தைத் திறந்ததுபோல்
சுடர்க்கைகள் பொன்சொரியும்
சூழ்ப கைக்கோ
உரங்கொத்தும் வெங்கணையோர்
ஆயிரத்தை வில்சொரியும்
இவற்கு நேரா
சரஞ்சரமா நீரென்றே
சொரிகின்ற அம்மாரி
சரியோ? இல்லை!



7 தொடுங்குன்றம் விண்ணைப்போய்;
தமிழ்குடிவாழ் தொல்குன்றம்,
புகழ்து லங்கும்
நெடுங்குன்ற மாயிருந்து
நிகழ்வுகளால் உருமாறிக்
குன்றிக் குன்றிக்
கொடுங்குன்றம் என்றபெயர்
கொண்டதுமேன்? பாரிக்குக்
கொடுமை நேர
இடங்குன்றம் ஆனதனால்
கொடுங்குன்றம் ஆனதுவோ?
இசைப்பீர் ஐயா!

8 தண்பறம்பு நன்னாடாம்;
தமிழ்க்கபிலன் மொழியறிவீர்;
தாவிச் செல்லும்
கண்வரம்பு படும்வரைக்கும்
பசுமைதரும் காட்சியிலை
கபிலன் சொன்ன
தண்மையிலை, பறம்புண்டு;
நன்மையிலை, நாடுண்டு;
தக்கோர் பாரி

விண்வரம்பு பட்டமையால்
வீழ்பறம்பாய்ப் போனதுவோ
விளங்க வில்லை

9 ஒருநிழலும் இல்லாத
நெடுவழியில் வருபவருக்
குதவும் நீழல்
பெருமரத்தைத் தனிமரத்தைப்
பெருவேந்தர் கொன்றார்கள்;
இன்றும் கூடச்
சிறுமரமும் ஈங்கில்லை;
எதனாலே இந்தநிலை?
இம்மூ வேந்தர்
வருமரபில் வந்தவர்கள்
மரம்வெட்டும் பழந்தொழிலை
மறவா மைதான்.

10 அங்கவையைச் சங்கவையை
அந்தப்பு ரம்வைக்கும்
ஆசை யரல்தான்





இங்குபெரும் போலிழுந்த
தெனும்தறிப்பை இசைத்ததுண்டே
கபிலன் பாடல்;
பொங்கிவரும் செங்குருதிப்
புதுக்குளத்தின் நடுவினிலே
வாழ்க்கைப் போது
திங்களென மலர்ந்திடுமா?
மலர்ந்தாலும் தேன்துளிகள்
சிந்தல் உண்டா?

11 பெண்ணுக்காகப் போர்நடத்தல்;
பெருமைக்காகப் போர்நடத்தல்;
பெரிய தான
மண்ணுக்காகப் போர்நடத்தல்
என்பதெலாம் மதித்தறிந்தால்
மனித நேயக்
கண்ணுக்குள் அம்புவிட்டுக்
கருவிழியைப் பழுதாக்கி
என்றும் ஆறாப்
புண்ணுக்கு வழிசெய்த
தல்லாமல் புகழுக்கா
வாழ்வ ளித்தார்

12 விலைமகளா நிலமகளா
விரும்புகின்ற போரொழித்தும்,
உயிர்கள் வாழத்
தலைமகளா நிலமகளின்
தாள்பணிந்து வாழ்த்துவதும்,
தக்கோன் பாரி
கலைமலிந்த வாழ்க்கைநெறிக்
கண்ணியத்தைப் போற்றுவதும்,
செய்யின் இந்த
மலைவளமும் நாளையிங்குப்
பெருகிவரும்; வாய்மையிது;
வணக்கம்! நன்றி!

பாரிமன்னன் ஆண்ட குன்றம்

கவிஞர் ம. கார்மேகம்

தேன்சொரிந்து வளம்பெருக்கும் செல்வக் குன்றம்;
தீஞ்சுளையால் பழம்நிறைந்து திகழும் குன்றம்;
வான்சொரிந்த மழையாலே வளரும் குன்றம்;
வான்முட்டும் அளவுக்கு வளர்ந்த குன்றம்;
மீன்திகழும் வானம்போல் சுனைகள் தோன்றும்;
மெல்லியலார் பாடிவரின் அவர்க்கே குன்றம்;
நான்புகழ்ந்து கூறவில்லை; நாடே சொல்லும்;
நற்றமிழன் பாரிமன்னன் ஆண்ட குன்றம்!

வளத்தாலே உயர்குன்றம்; பாரி மன்னன்
மனம்போலே உயர்குன்றம்; வறியோர்க் கீயும்
உளத்தாலே வளர்குன்றம்; தமிழைப் போற்றும்
உயர்வாலே வளர்குன்றம்; உடன்ற மன்னர்
களத்தோடு செருக்கழியக் காட்டும் வீரக்
கழலுடையான் புகழ்பாடும் குன்றம்; கண்ணீர்க்
குளத்தினிலே தினந்தோயும் குடும்பப் பெண்டிர்
கொண்டமன உறுதியைப்போல் வலிய குன்றம்!

எங்குநின்று பார்த்தாலும் இனிய காட்சி
எழிலோடு திகழ்குன்றம்; எந்த நாளும்
பொங்கிவரும் அருவியினால் பூமி காத்துப்
புதுவருவாய் காண்கின்ற பொழிலார் குன்றம்;
இங்குவந்து பாடுகின்ற எல்லோ ருக்கும்
ஈத்துவக்கும் வளம்தன்னை ஏந்தும் குன்றம்;
தங்குமுகில் பொழிகின்ற தண்ணார் குன்றம்;
தமிழ்ப்பாரி வாழ்ந்ததனால் தழைக்கும் குன்றம்!

—



உணர்வோம் உயர்வோம்...

கவிஞர்: ரா. பொன்ராசன்

மங்கை பாகன் மலரடியைப்
பணிவோம் - நம்
வாழ் வுயர்த்தும் வரம் அனைத்தும்
பெறுவோம்.
எங்கும் என்றும் பாரி புகழ்
பகர் வோம் - நம்
இதயம் எல்லாம் பெரு நிறைவு
பெறுவோம்.

பறம்பு மலை என்று சொன்னால்
போதும் - உள்ளம்
பறந் துயர்ந்து வானை முட்டத்
தா வும்
பெரும் பெரிய புலமை நெஞ்சம்
யாவும் - நன்றி
பெருகி வர பறம்பை வாழ்த்தும்
நாளும்

உல கிருக்கும் வரைக்கும் தமிழ்
இருக்கும் - தமிழ்
உள்ள வரை பாரி புகழ்
நிலைக் கும்!
உள மிருக்கும் எவரும் இதை
உணர் வார் - இந்த
உண்மை யினை உள்ளம் கொண்டால்
உயர் வோம்.

உ

மங்கைபாகர் போற்றிப் பதிகம்

கவிஞர் மரு. பரமகுரு

ஞானசம் பந்தப் பிள்ளை நறுமண மலர்வாய்ப் பொங்கு
கானசம் பந்த மான கனித்தமிழ் பாடல் துய்த்த
வானசம் பந்த மான மங்கைநா யகனே போற்றி!
ஊனசம் பந்த மான உயிர்களுக் கருள்வாய் போற்றி!

மணிநீலப் பூவும் செந்தா மரைப்பூவும் இணைந்தாற் போலே
மணக் கோல மாகி வீற்ற மங்கைநா யகனே போற்றி!
மணக்காத எருக்கம் பூவும் மகுடத்தில் ஏற்பாய் போற்றி!
குணக்கேடர் தமையும் காப்பாய், கொடுங்குன்றக் கடவுள் போற்றி!

செம்மணி மரக தப்பூஞ் செழுமணி சேர்ந்தாற் போலும்
அம்மைஅப் பன்தா னாகி அருள்கின்ற மூர்த்தி போற்றி!
இம்மைக்கோர் ஆணியாகி எழுமைக்கும் தோணி யானாய்!
எம்மையா ளுடையாய் போற்றி! எழில்மங்கை பாகா போற்றி!

செப்பரும் மங்கை பாகா! திருக்கொடுங் குன்ற நாதா!
அப்பனே அம்மையே, நும் அழகினைக் கண்ட கண்கள்
எப்படிப் பிரிந்து நிற்கும்? எழிலிலே உறைந்து நிற்கும்!
அப்பா, நின் வலத்தாள் போற்றி! அம்மா, நின் இடத்தாள் போற்றி!

எங்கள்நா யகனே! வாழ்க்கை இயக்கநா யகனே! போற்றி!
மங்கைநா யகனே! அன்பர் மனத்துநா யகனே! எங்கும்
தங்குநா யகனே! சொக்கத் தங்கநா யகனே! கூடற்
சங்கநா யகனே போற்றி! தமிழின்நா யகனே போற்றி!

முல்லைக்கு மணித்தே ரீந்து மூவாத புகழைப் பெற்ற
வள்ளல்வேள் பாரி வாழ்ந்த வான்மலை வைப்பே போற்றி!
சொல்லரும் பொருளே போற்றி! சுடர்மணிக் கொழுந்தே போற்றி!
இல்லக விளக்கே போற்றி! எழில்மங்கை பாகா போற்றி!

போகத்தை உயிர்கட் கெல்லாம் புணர்த்திவெவ் வினைகள் வீயப்
பாகத்தில் மங்கை வைத்தாய்! பால்வெள்ளை நீற ணிந்தாய்!
மேகத்தைச் சாரல் வைத்த வியன்கொடுங் குன்றத் தாய்நீ
தாகத்தைத் தணிவித் தாள்வாய், தயாபர போற்றி! போற்றி!

செந்தழல் புரையும் மேனி, செழுமுகில் வண்ண மேனி
அந்தமில் அழகு மேனி யாகிய மங்கை பாகா!
மந்திதன் குட்டி காக்க வயிற்றினில் தாங்கித் தாவி
அந்தரம் பாயும் குன்றத் தமர்ந்தருள் புரிவாய் போற்றி!

குயிலிசை பாட மேகக் குழாம்முழ வார்ப்பத் தோகை
மயில்நட மாடக் குன்றில் மணக்கோல மாக வீற்ருய்!
பயில்மனே யறத்தின் மேன்மை பாங்குடன் எடுத்துக் காட்டும்
கயல்விழி மங்கை பாகக் கடவுளே போற்றி! போற்றி!

கொடுங்குன்றிற் குடைந்த கோயில் கொண்டருள் புரிவாய் போற்றி!
சுடர்கின்ற கற்பூ ரத்துச் சோதியின் காட்சி போற்றி!
அடர்கின்ற துன்பம் தீர்க்கும் அம்மையே அப்பா! அன்பு
படர்ந்திந்த உலகம் வாழ்க! பரமனே போற்றி! போற்றி!

(இந்தப்பதிகம் 27 போற்றிகள் உள்ளது. நான்கு முறை ஓதினல் 108 ஆகும்)

தேடிவரும் கோடிசனம்!

பேரில்லா மரமும் பெரிய பிரான்மலேயும்
வட்டச் சுனேயும் வயிரவர் சன்னதியும்
குட்டைச் சுனேயும் கொடுங்குன்ற நாதரும்
சுற்றித் திருமதிலும் சூழ்ந்ததொரு நந்தவனம்
நாலுகால் மண்டபமும் நடராசர் சன்னதியும்
ஆறுகால் மண்டபமும் அடைய வளஞ்சானும்
ஆனேகட்டும் சாவடியும் தேனுடி தீர்த்தமும்
தேடிவரும் கோடி சனம் —

(பிரான்மலே வட்டகையில் வழங்கும் கிராமியப் பாடல்)

உரை மணம்

உ



அம்மையப்பர் வழிபாடு

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

பிறப்பில் உயர்ந்தது மானிடப் பிறப்பு. மானிடப் பிறப்பிற்குரிய குறிக்கோள் என்ன? குறைகளினின்றும் விடுதலை பெறுவது; நிறைவு பெறுவது; அறிவு பெறுவது; துன்பங்களிலிருந்து விடுதலை பெறுவது; இன்பம் பெறுவது; பிறப்பிலிருந்து விடுதலை பெறுவது; இன்ப அன்பினில் திளைத்தின்புறுவது. இவை வாழ்க்கையின் குறிக்கோள்!

மனித குலம் இந்த உயர்குறிக்கோளையடையத் தொடர்ந்து போராடி வருகிறது. உயிர்கள் எதனைச் சார்கின்றனவோ அதன் இயல்பை அடையும். இந்தப் புவியில் குறைவிலா நிறைவு எது? அறிவுப் பொருள் எது? ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பம் எது? அன்பு எது? அதுதான் எளிதில் பொறிகளால், புலன்களால் உய்த்தறிய - உய்த்துணர மாட்டாத கடவுள். நம்மைச் சுற்றி உள்ள உலகத்தைக் கூர்ந்து நோக்குக! எத்தனை வியத்தகு நிகழ்ச்சிகள்! நீரிடைத் தண்மை, அனலிடை வெப்பம்! மலரிடை மணம்! ஓரறிவுயிர்கள் முதல் ஆறறிவுயிர்கள் வரை ஆண் - பெண் அமைப்பு! மானிடப் பிறப்பு! இப்படி ஓர் அமைப்பிலும் சரி, இயக்கத்திலும் சரி ஒரு ஒழுங்கு—முறை பிறழாத நிகழ்ச்சிகளை நம்மால் ஆக்க முடியுமா? இந்த வியத்தகு அமைப்புக்களுக்கு மனிதனைவிட மேம்பட்ட ஏதோ ஒன்று காரணமாக அமைதல் வேண்டும் அது எது? அது வரம்பிலாற்றலுடைய பொருளாக இருத்தல் வேண்டும் என்று உய்த்துணர்ந்தனர். அதற்குக் கடவுள் என்று பெயரிட்டனர். அக்கடவுளை வணங்குவதன் மூலம் அக்க வுளின் ஆற்றலைப் பெற முடியும் என்ற நம்பிக்கையே கடவுள்வழி. அக்கடவுள், உயிர்களிடத்தில் ஒன்றாகவும் உடனாகவும் வேறாகவும் இருந்து இயங்குகிறான் என்று ஞானிகள் உணர்ந்து உணர்த்தினர். கடவுளை வழிபட, அகநிலைக் கருவிகளும், புறநிலைக் கருவிகளும் அதாவது புலன்களும் பொறிகளும் அனுபவிக்கத் தக்க வகையில் திருவுருவ வழிபாட்டைக் கண்டனர். திருவுருவ வழிபாட்டின் வளர்ச்சி, திருக்கோயில்களைக் காண்பதற்குக் காரணமாய் அமைந்தது.

தமிழ் நாகரிகத்தில் திருக்கோயில் நாகரிகம் தலைசிறந்தது. திருக்கோயிலை மையமாகக் கொண்டே தமிழர் நாகரிகம் வளர்ந்தது; வாழ்ந்தது. பண்டைக் காலத்தில் இன்றுள்ளது போல் அரசு, வாழ்க்கையின் அனைத்துத்துறைகளுக்கும் பொறுப்பேற்றதில்லை. அன்று தன்னாட்சியுள்ள சமூக அமைப்பு இருந்தது. அந்தத் தன்னாட்சிச் சமூகம் திருக்கோயில்களையே மையமாகக் கொண்டு விளங்கியது. குடிகள், திருக்கோயில்களைத் தழுவி வாழ்ந்தன. திருக்கோயில்கள் குடிகளைத் தழுவி நின்றன; இயங்கின.

தமிழ் மக்களிடத்தில் கடவுள் வழிபாட்டுணர்வு தோன்றிப் பல நூற்றாண்டுகளாயிற்று. இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தென்மதுரையில் நகரமனைய திருக்கோயில் இருந்ததாக வரலாறு கூறுகிறது.

''பணியிய ரத்தை நின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலம் செயற்கே''
(புறம்-6)

என்பது புறநானூறு.

தமிழ் நாகரிகத்தில் பெண்மை போற்றப்பெற்றது; பெருமைப்படுத்தப் பெற்றது பெண்ணைத் துறந்த துறவை, தமிழ் நாகரிகம் தொன்மைக்காலத்தில் தழுவியதில்லை. ஏன்? இந்திய நாகரிகமும் அப்படித்தான்! பண்டைய முனிவர்களின் மனையறம் பலபடப் பேசப்படுகிறது—சமய இலக்கியங்களில், புராணங்களில்!

தமிழ்மக்கள் ஆதியில் – தொன்மைக்காலத்தில் வழிபட்ட திருவுருவம் அம்மையப்பர் திருவுருவமேயாம் தமிழ்மக்களின் பொற்காலம் என்று போற்றப்படும் சங்ககால இலக்கியங்களில் அம்மையப்பன் போற்றப்படுவதைக் காணலாம். கற்றோர் ஏத்தும் கலித்தொகை,

"இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமை அமர்ந்து உயர்மலை இருந்தனனாக"
(கலி. 38)

என்று போற்றுகிறது. மேருவை வில்லாக வளைத்த செந்தண்மை மிக்க பரம்பொருளான இறைவன் உமையுடன் கூட மலையிலமர்ந்துள்ளான் என்பது கருத்து

"...... ....வெள்ளேறு
வலவயி னுயரிய பலர்புகழ் திணிதோள்
உமையமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வன்"
(திருமுருகாற்றுப்படை 151-154)

என்று திருமுருகாற்றுப்படை பரவுகிறது

"ஊர்ந்தது ஏறே; சேர்ந்தோள் உமையே
(அகம். கடவுள்வாழ்த்து)

என்று அகநானூறு வாழ்த்துகிறது. இங்ஙனம் தமிழ்மக்கள் பன்னெடுங்காலமாக வணங்கி வந்த கடவுட் படிமம் அம்மையப்பரேயாம்

"தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ!"

என்ற திருப்பாடலில் அம்மையப்பன் திருமேனியை அற்புதமாகஎடுத்துக்கூறுகிறார் மாணிக்கவாசகர். அம்மையப்பன் திருக்கோலம் "தொன்மைக்கோலம்" என்றும் கூறுவது அறியத்தக்கது. இப்பாடல் விளக்கும் அம்மையப்பன் திருவுருவம் ஒருருவால் அமைந்ததாகும். மங்கைபாகர் (அர்த்த நாரீசுவரர்) ஆன அம்மையப்பன் திருவுருவத்தில் வலப்பாகம் அப்பன்பாகம்—சிவன்பகுதி! இடப்பாகம் அம்மை பாகம்—உமைபகுதி! அம்மையப்பன் திருமேனியின் இடப்பாகத்தில் பட்டாடையும், தோடும், சந்தனமும், பச்சைக்கிளியும், வளையல் அடுக்கும் உடையது அம்மையின் தோற்றம்! வலப்பாகத்தில் தோலும், குண்டலமும், திருநீறும், சந்தனமும், சூலமும் பெற்றது இறைவன் தோற்றம்; சிவன் தோற்றம்! இத்திருக்கோலமே தமிழர் ஞானத்தில் கண்டுணர்ந்த திருக்கோலம்!

இந்த அம்மையப்பர் உலகத்திற்குத் தாய்; தந்தை. இதனைத் திருக்களிற்றுப்படியார்,

"அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்"

என்று போற்றுகிறது. இந்த அம்மையப்பரின் திருவடிவில்தான் மூவகை உலகமும் முகிழ்த்தது என்று ஐங்குறுநூறு பேசுகிறது.

"நீலமேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை யுலகும் முகிழ்த்தன முறையே!"
(ஐங்குறுநூறு. கடவுள்வாழ்த்து)

திருமுறைகள் முழுவதும் அம்மையப்பர் வாழ்த்தேயாம்.

"மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை இருந்ததே!"


என்று திருஞானசம்பந்தரும்,

''மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி
மயானத்தான்''

என்று அப்பரடிகளும்.

''உமை ஓர் கூறுடையாய் உருவே!''

என்று சுந்தர மூர்த்தி நாயனாரும் போற்றிப் புகழ்ந்தனர்.



இறைவன், மக்களின் பிரார்த்தனையை ஏற்றுக்கொள்ள எழுந்தருளி அருள்பாலிக்கும் பொழுதெல்லாம் அம்மையப்பனாகவே எழுந்தருளி அருள்பாலித்த வரலாறுகள் உணரத்தக்கன. அம்மையே அருளும் திருவுருவம். அப்பன் அம்மையோடு கூடியிருக்கும் பொழுதே அருளாளனாக விளங்கும் பெற்றிமையைச் சமய நூல்களால் அறிய முடிகிறது.

அம்மையப்பன் வழிபாடு இம்மைப் பேறுகளையும் நல்கும்; ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பத்தையும் வழங்கியருளும்!

பிரான்மலை 2000 ஆண்டுகள் வரலாற்றுப் பழைமையான மலை; சங்க இலக்கியங்களில் பாடப்பெற்றமலை. இம்மலையில் உள்ள குகையில் எழுந்தருளியுள்ள மங்கைபாகர் தம்மை நண்ணினார்க்கு நலம் செய்வான். பொன்னும் மெய்ப்பொருளும் தந்தருளுவான்; போகமும் திருவும்தந்தருளுவான். பிரான்மலை மங்கைபாகர் அருள்நலம் பொலியும் திருமேனி; எப்போதும் அருள்வழங்கும் சந்நிதி! நாள்தோறும் மங்கைபாகர் திருவடிகள் போற்றுமின்! இன்புறு நலன்கள் அனைத்தும் பெறலாம்! இன்ப அன்பினைப் பெறலாம்!

நாள் தோறும் திருக்கோயிலுக்கு வர இயலாதார் வீடுகளில் மங்கைநாயகர் திருவுருவத்தை அமைத்துத் திருவிளக்கேற்றி வழிபட்டுவரின் மனையறம் சிறக்கும்; மங்கலம் விளங்கும்; நனிசிறக்கும் நன்கலம். இல்லங்களில் எழில்மலர் மகளும், கலைமகளும் விளங்கித் தோன்றுவர்; புகழ்மகளும் கூடத் தோன்றி வளர்ப்பாள்!

பறம்புமலை

(திருக்கொடுங்குன்றம் - பிரான்மலை)

கவிஞர் **மரு. பரமகுரு**

தலமும் இருப்பிடமும்

திருக்கொடுங்குன்றம் (பிரான்மலை) பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், திருப்புத்தூர் வட்டத்தில் சிங்கம்புணரிக்கு அருகில் அதன் வடக்கில் உள்ளது. காரைக்குடியிலிருந்து மேற்கே 42 கி.மீ. தொலைவிலும் மதுரையிலிருந்து வடக்கே 63 கி.மீ. தொலைவிலும் புதுக்கோட்டையிலிருந்து தென்மேற்கே 45 கி மீ தொலைவிலும் உள்ளது. திருப்புத்தூர்—திண்டுக்கல் சாலையில் சதுர்வேதி மங்கலத்திலிருந்து (மட்டியூரிலிருந்து) வடக்கே 8 கி.மீ. தொலைவிலும் சிங்கம்புணரியிலிருந்து வடக்கே 12 கி.மீ. தொலைவிலு திருச்சிராப்பள்ளி—மதுரை பேருந்துச் சாலையில் உள்ள பள்ளபட்டியிலிருந்து கிழக்கே 6 கி.மீ தொலைவிலும் பொன்னமராவதியிலிருந்து தெற்கே 15 கி.மீ. தொலைவிலும் உள்ளது. மதுரை, புதுக்கோட்டை, திருசசிராப்பள்ளி, திருப்புத்தூர், பொன்னமராவதி முதலிய நகரங்களிலிருந்து பேருந்துகளும் சிங்கம்புணரியிலிருந்து நகரப் பேருந்துகளும் பிரான்மலைக்குச் செல்கின்றன. 2450 அடி உயரமுள்ளது இந்தமலை.

> 'ஈண்டுநின் றோர்க்கும் தோன்றும் சிறுவரை
> சென்றுநின் றோர்க்கும் தோன்றும்''

என்று கபிலர் பாடியவாறு நாலாபக்கமும் நெடுந்தொலைவிலுள்ளோர்க்கும் காட்சியளிக்கும் மாட்சியும் உயரமும் கொண்டு விளங்கும் மலை, இந்தப் பிரான்மலை

தலப் பெருமை

ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன், புலனழுக்கற்ற அந்தணாளராகிய கபிலர் பெருமான் வான்தடவி நிற்கும் பறம்புமலை உச்சியிலிருந்து தேன்தடவிய செந்தமிழ்ப் பாடல் ஒன்று பாடினார்.

> ''நல்லவும் தீயவும் அல்ல குவியிணர்ப்
> புல்லிலை எருக்கம் ஆயினும் உடையவை
> கடவுள் பேணேம் என்னா; ஆங்கு
> மடவர் மெல்லியர் செல்லினும்
> கடவன் பாரி கைவண் மையே!''
>
> (புறம்-106)

என்பது அத்திருப்பாட்டு, இப்பாட்டு வள்ளல் பாரியின் கைவண்மை போற்றும் பாடலேயாயினும், இறைவனின் எளிவந்த தன்மையை விளக்கும் பாடலாகவும் விளங்குகின்றது. சிவபெருமான் அன்பால் அருச்சிக்கும் எருக்கம் பூவையும் ஏற்றுக்கொள்ளும் பேரருளாளன் என்பதை இப்பாடல் சிவமணம் கமழ எடுத்துரைக்கின்றது. எனவே பறம்புமலையில் வள்ளல் பாரி காலத்திலேயே (ஏறத்தாழ கி.பி.120—160) சிவ சிந்தனை மலர்ந்துள்ளதை அறிகின்றோம். அக்காலத்தில் இத்திருமலையில் கட்டட அமைப்பில் சிவன்கோயில் இருந்தது என்று கூற முடியாதாயினும் சிவவழிபாடு இருந்தது என்பதை இப்பாடல் கொண்டு உய்த்துணரலாம்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டினராகிய திருஞானசம்பந்த சுவாமிகளின் தேவாரத் திருப்பதிகம் பெற்றது இத்திருத்தலம் என்பது அனைவரும் அறிந்த ஒன்றாம். அதே காலத்தில் வாழ்ந்த அப்பரடிகள் ''கொடுங்குன்றன்காண் கொல்லை ஏற்றினான் காண்'' எனத் திருவாரூர்த் திருத்தாண்டகத்தில் இத்தலத்தில் எழுந்தருளியுள்ள பெருமானை நினைந்துள்ளார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் ''கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை'' என்று வள்ளல் பாரியைப் புகழ்வதன் மூலம் இத்திருத்தலத்தை நினைந்துள்ளார். மாணிக்கவாசக சுவாமிகள் தாம் அருளிய திருச்சிற்றம்பலக் கோவையாரில் ''கொடுங்குன்றின் நீள்குடுமி மேற்றேன் விரும்பும் முடவனைப் போல்'' என்று பாடுவதன் மூலம் இத்தலத்தை நினைந்துள்ளார். இவ்வாறு நால்வர் பெருமக்கள் திருவுள்ளமும் நினைந்து போற்றிய திருத்தலம், திருக்கொடுங்குன்றமாகும்.

திருஞான சம்பந்த சுவாமிகள் "நன்றியில் நெறியில் அழுந்திய நாடும் நற்றமிழ் வேந்தனும் உய்ய"த் திருவுள்ளம் கொண்டு சோழநாட்டிலிருந்து மதுரைமாநகருக்கு எழுந்தருளி வந்த காலத்தில் இத்தலத்திற்கு எழுந்தருளி அருந்தமிழ் பாடிப் பின் ஆலவாய்க்குச் சென்றார் என்பது வரலாறு. எனவே திருஞானசம்பந்தரால் முதன் முதலில் பாடப்பெற்ற பாண்டிப்பதி இதுவாகும்.

"கொடுங்குன்றத் தினிதமர்ந்த
கொழும்பவளச் செழுங்குன்றை
அடுங்குன்றம் உரித்தானை
வணங்கி அருந்தமிழ்பாடி
நெடுங்குன்றும் படர்கானும்
நிறைநாடும் கடந்து, மதி
தொடுங்குன்ற மதில்மதுரைத்
தொன்னகர்வந் தணைகின்றார்."

என்று இச்செய்தியை உளங்குளிர்ந்து பாடுவார் தெய்வச் சேக்கிழார் பெருமான்,

அருணகிரிநாதசுவாமிகள் திருப்புகழ்ப்பாடல்பெற்ற முருகன் எழுந்தருளியுள்ள திருத்தலமுமாகும் இது.

திருக்கயிலாயத்திற் போல அம்மையப்பர், மங்கைபாகராய்த் திருமணக் கோலத்துடன் இங்கு எழுந்தருளியிருப்பதால் தென்கயிலாயம் என்று போற்றப்பெறும் பெருமையுடையது இத்திருத்தலமாகும்.

திருக்கோயில் அமைப்பு

திருக்கொடுங்குன்றம், 50 கி.மீ. தொலைவில் எந்தத் திசையிலிருந்து பார்த்தாலும் காட்சி தரும் குன்றமாகும். இக்குன்றத்தை நோக்கிவந்தால் வருவோரை "வா, வா!" என்றழைப்பது போல் தோற்றம்தரும் அருள்மலை இது. இந்த மலையின் தென்மேற்கு அடிவாரத்தில் பிரான்மலைக் கிராமம் அமைந்துள்ளது. ஊரையொட்டி மலையின் அடிவாரச் சரிவில் 30 ஏக்கர் பரப்பளவில் அருள்திரு திருக்கொடுங்குன்றநாதர் திருக்கோயிலும் அதற்குமேலே அருள்திரு பைரவசுவாமி திருக்கோயிலும் அதற்குமேலே அருள்திரு மங்கைபாகசுவாமி திருக்கோயிலும் அமைந்துள்ளன. இந்த மூன்று திருக்கோயிற் பகுதிகளையும் உள்ளடக்கிக் கொண்டு மிகப்பெரிய சுற்றுமதில் உள்ளது. இது சுந்தரபாண்டியன் மதில் என வழங்கப்பெறுகிறது.

இத்திருத்தலம் பாதாளம், பூமி, கயிலாயம் என மூன்று நிலையாகச் சொல்லப் பெறுகிறது. அருள்திரு திருக்கொடுங்குன்றநாதர் திருக்கோயில் — பாதாளம், அருள்திரு பைரவசுவாமி திருக்கோயில் — பூமி, அருள்திரு மங்கைபாக சுவாமி திருக்கோயில் கயிலாயம் ஆகும்.

தலப்பெயர்கள்

இத்திருத்தலத்திற்குப் பல காரணங்களால் பல பெயர்கள் வழங்கப் பெற்றுள்ளன.

கொடுங்குன்றம், கடோரகிரி, பிரசண்டகிரி, உச்கிராசலம், தென்கயிலாயம் ஆகிய திருப்பெயர்களால் இத்தலம் அழைக்கப்பெறுகிறது.

மூர்த்திகள்

1. கீழ்க்கோயில் (பாதாளம்)

இறைவன் : திருக்கொடுங்குன்றநாதர், கொடுங்குன்றீசர், கடோரகிரீசர், உக்கிரகிரீசர், திருக்கொடுங்குன்றமுடைய நாயனார், திருக்கொடுங்குன்றத்து உடையார், குன்றாண்டார் என்னும் திருநாமங்களுடையவர்.

இறைவி : குயிலமுதநாயகி, அமிர்தேசுவரி என்னும் திருநாமங்களுடையவர்.

சேயோன் : சுப்பிரமணியர் என்னும் திருநாமமுடையவர், அருணகிரிநாத சுவாமிகள் திருப்புகழ் பெற்றவர்.

2. நடுப்பகுதிக்கோயில் (பூமி)

1. பைரவ சுவாமி
இவர் மிகச்சிறந்த அருளாற்றல் உடையவர்.

2. விசுவநாதர் — விசாலாட்சியம்மை.

3. மேற்கோயில் (கயிலாயம்)

இறைவன் : மங்கைபாகர் எனும் திருநாமம் உடையவர். திருஞானசம்பந்த சுவாமிகளால் "நல மங்கை பாகத்தவன்" என்று போற்றப்பெற்றவர். "தேடவண் கயிலாயத்து பரன் நயினார் நல்லமங்கை பாகர்" என்று கல்வெட்டில் குறிக்கப் பெறுகிறார்.

இறைவி : தேனம்மை.

தலவிருட்சம்

இத்திருத்தலத்திற்குரிய தலவிருட்சம் பலா. வேறு இரண்டு மரங்கள் சிறப்பாகச் சொல்லப் படுகின்றன. ஒன்று பேரில்லா மரம். மற்றொரு மரம் உறங்காப்புளி மரம்.

தீர்த்தங்கள்

இத்திருத்தலம் தீர்த்தச் சிறப்பு மிக்குடையது. திருக்கோயிற் பகுதியிலுள்ள தீர்த்தங்களன்றி மலைமேல் பல தீர்த்தங்கள் உள்ளன. தலபுராணத்தில் 108 தீர்த்தங்கள் சொல்லப்படுகின்றன. அவற்றுள் முக்கியமானவை.

தேனாடி தீர்த்தம் (மது புஷ்கரணி), குஷ்ட நிவாரண தீர்த்தம், அம்பாள் தீர்த்தம், சுப்பிர மணிய தீர்த்தம், பைரவ தீர்த்தம், சித்த தீர்த்தம், குரு தீர்த்தம், சோம தீர்த்தம், தண்டநீ தீர்த்தம் (வேளார்குளம்) ஆகியன ஆகும்.

சிற்பங்கள்

மங்கைபாகர் குடைவரைக்கோயில் :

இந்தக் குடைவரைக்கோயில் மூர்த்தியான மங்கைபாகர் திருவுருவம் மிகஅழகியது; உயிரோவியமாய்த் திகழ்கிறது.

தேவசபாமண்டபம் :

மங்கைபாகர் சந்நிதியில் உள்ளது; அழகிய கலைச்சிறப்புடையது. இந்த மண்டபத்தூண்களின் மேலே உள்ள போதிகைகள் அழகிய வேலைப்பாடுடையவை. இந்த மண்டபத்தின் மேற்பரப்பிலுள்ள பாவுகற்பலகையில் அட்டைகள் செதுக்கி ஓர் அடைக்கும் பிறிதோர் அட்டைக்கும் இடையில் தேவர்களின் சிலைகள் புடைப்பாகச் செதுக்கப் பெற்றுள்ளன. இந்தப் புடைப்புச் சிற்பங்களில் பல கரணச்சிற்பங்கள்; ஆடற்கலையின் முத்திரைகள் பல கொண்டு இலங்குகின்றன. நடுவில் உள்ள இலட்சுமி உருவம் அழகானது.

சுந்தரபாண்டியன் மண்டபம் :

தேவசபாமண்டபத்துக்குக்கிழக்கே உள்ள சுந்தரபாண்டியன் மண்டபத்தின் நடுவில் உள்ள சந்நிதி வரிசைத் தூண்கள் நல்ல வேலைப்பாடுடையவை. தூண்களின் மேலே உள்ள போதிகைகள் கண்டு மகிழத்தக்கவை.

திருக்கொடுங்குன்றநாதர் கோயில் திருச்சுற்று மண்டபங்கள் :

இந்தத் திருச்சுற்று மண்டபத் தூண்கள் கலைச் சிறப்புடையவை. தூண்களின் மீதுள்ள யாளி வடிவங்கள் போதிகைகள் வேலைப்பாடு நிறைந்தவை. நான்குபுறத் திருச்சுற்று மண்டபங் களும் இராமேசுவரத் திருச்சுற்றின் தோற்றப் பொலிவுடையவை. வடமேற்கு மூலையில் மேற்பரப்பிலுள்ள பாவு கற்களில் செதுக்கப்பெற்றுள்ள இராசிச்சக்கரம் அழகானது. இதற்கு வடக்கே

மூன்று வளையக் கற்சங்கிலியும், தெற்கே ஒரு கல் வளையமும் தொங்குகின்றன. இதற்கு தெற்கேயுள்ள மண்டபத் தூண்கள் இரண்டில் தூண்களின் கீழ்ப்பகுதி நெற்றியில் சிறுசாளரம் அமைத்து வெளியிலிருந்து விரலால் உருட்டி விடத்தக்கவாறு சாளரத்துக்குள்ளே கல்லுருண்டைகள் உருவமைக்கப் பெற்றுள்ளன.

வழிபட்டோர்

இத்திருத்தலத்தை வழிபட்டுப் பயன் அடைந்தோர்:

உமாதேவி, நந்தி, உபமன்யு, சப்தமாதர், வியாக்ரபாதர், புண்டரீகர், குருபத்தினி, இலக்குமி, சந்திரன், சரசுவதி, பிரமன், திருமால், நரசிம்மமன்னன், நாகராஜன், மகோதரமுனிவர், உக்கிரபாண்டியன் ஆகியோர் ஆவர்.

வள்ளல் பாரி விழா

வரலாற்று நாயகர்களை நினைவு கூர்வது எதிர்கால வரலாற்றுக்கு எழுச்சியும் ஏற்றமும் தரும் என்பது அருள் நெறித் தந்தையவர்களின் திருவுள்ளம். எனவே, தமது ஆதீன நிர்வாகத்தில் உள்ளதும், முல்லைக்குத் தேரீந்த வள்ளல் பாரி வாழ்ந்திருந்ததுமாகிய இப் பறம்பு மலையில் சித்திரைத் திருவிழாக் காலத்தில் வள்ளல் பாரி விழா நடத்தத் திருவுள்ளம் கொண்டார்கள். 1954 முதல் இவ்விழா இரண்டு நாள் விழாவாக இங்கு சிறப்பாக நடைபெற்று வருகிறது. இது புகழ்பெற்ற சங்க இலக்கிய விழாவாகும்.

இன்றைய திருப்பணி

திருவருள் திரு மகாசந்நிதானம் அவர்கள் மிகப்பெரிய கோயிலான இதனை முழுமையாகத் திருப்பணி செய்யத் திருவுள்ளம் கொண்டார்கள். ஆதீனத் திருக்கோயில் பொறுப்பில் சிறுக, சிறுக சில ஆண்டுகளாகத் திருப்பணி வேலை நடைபெற்றுக் கொண்டேயிருந்தது. இந்த நிலையில் அருவியூர் வடக்குவளவு நகரத்தார்களும், அருவியூர் தெற்குவளவு நகரத்தார்களும் மங்கைபாகர் திருக்கோயில் திருப்பணி புதியஇராஜகோபுரத் திருப்பணிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர். பைரவசுவாமி திருக்கோயில் திருப்பணிப் பொறுப்பை பிரான்மலை—மதகுபட்டிக் கிராமம் முத்துராஜா சமூகத்தினர் ஏற்றுக்கொண்டனர். இந்துசமய அற நிலையத்துறை இயன்ற உதவி செய்தது. மேலும் ஆதீனத்திருக்கோயில் இவையல்லாத எல்லாத் திருப்பணிகளையும் ஏற்றுத் செய்தது. பிரான்மலை ஊரார்கள் திருக்கோயிலைச் சேர்ந்த கிராமத்தார்கள் பல மெய்யன்பர்களின் நல் உதவிகளும் சேர்ந்தன. இந்த மாபெரும் திருப்பணியில் மெய்யன்பர்கள் ஆர்வச்செழிப்புடன் ஈடுபட்டுச் செய்துள்ளனர். எல்லாரும் சேர்ந்து இறைபணியாற்றியதால் அவர்கள் யாவரும் இன்று சிவகணங்களாகித் திருவருளுக்குரியவராகித் திகழ்கின்றனர்.

திருவருள் பெறுவோம்

20-4-1992 திங்கட்கிழமை ஒரு புண்ணிய நாள். அன்று காலை 9.30 — 10.30 மணிக்குட்பட்ட நேரம் எல்லா உலகிற்கும் அம்மையும் அப்பனும் உயிர்கள் மாட்டுக் கொண்ட பெருங்கருணை, அமுதப் பேராறாகப் பொங்கித் ததும்பி எங்கும் நிறையும் புண்ணிய நேரம்! அந்த அருளாரமுத வெள்ளத்தில்திளைத்து எல்லா நன்மையும் எய்திடச்சேர வாரும் செகத்திரே!

மரவத்தொடு மணமாதவி மௌவல்லதுவிண்ட
குரவத்தொடு விரவும்பொழில் சூழ்தண்கொடுங்குன்றம்
அரவத்தொடு மிளவெண்பிறை விரிவும்மலர்க்கொன்றை
நிரவச்சடை முடிமேலுடன் வைத்தா னெடுநகரே.

—திருஞானசம்பந்த சுவாமிகள்

சங்ககாலப் பறம்பு நாட்டு வளம்

வள்ளல் பாரி வாழ்ந்திருந்த பறம்புமலை—வளங்கொழிக்கும் மலையாக—வள்ளல் பாரியின் வளம் நிறைந்த மணம் போல இயற்கை வளத்தை அள்ளித்தரும் மலையாக இருந்தது, பலாவும், மாவும், வாழையும், மாதுளையும் பருவமல்லாது பயன் வழங்கின. வேங்கையும் நாகமும் பூத்து நிறைந்து தாங்காமல் முற்றிய செந்நெற் பயிர் போல் தலை தாழ்ந்திருக்கும். குரவம், புன்னை, ஆரம் முதலிய மரங்கள் பருத்து ஓங்கி வானத்தை இடிப்பது போல வளர்ந்திருக்கும். பறம்புமலையில் வாழும் குறத்தியர் காய்ந்த சந்தனக் கட்டைகளையே அடுப்புக்கு விறகாக எரிப்பர், அவ்வாறு குறத்தியர் எரிக்கும் போது எழும்புகை பொன்போல் மலர்ந்திருக்கும் வேங்கைமரக் கிளைகளினூடே படர்ந்து மணம் வீசும். மழைக்காலத்தின் மாலைப் பொழுதில் காட்டுப்பூனை சிரித்தால் போன்ற முல்லையின் பசிய அரும்புகள் முறுக்குடைந்து மணம் வீசும். பூஞ்சோலைகளில் மயில்கள் தோகைகளை விரித்து விறலியர் போல் ஆடும். கார்காலம் கழிந்ததும் பொன்னை மெருகிவிட்டது போல அழகிய காட்சி பல நல்கும். அப்போது களிற்றின் முகத்திலுள்ள புகரைப் போலத் தெறுழ் மலர்கள் மலர்ந்திருக்கும். வயல் நிறையப் புதல்பூக்கள் பூத்திருக்கும்.

பசுக்கள் கூட்டம் மேயுமாறு புல் வெளிகள் பரந்திருக்கும். மலைச்சாரலில் மான்கள் துள்ளித் திரிந்து விளையாடும். குரங்கினம் வான்முட்ட ஓங்கி வளர்ந்துள்ள மூங்கில்களில் தாவிப்பாய்ந்து மகிழும். நெடியசிகரம் தோறும் அருவிகள் முழங்கும்.

மூங்கில் நெல், சுவைமிகுந்த பலாப்பழம் வள்ளிக்கிழங்கு, தேன் ஆகிய நான்கு உணவுப் பண்டங்கள் உழவர் உழுது பயிரிடாமலே கிடைக்கும் இயல்புடையது பறம்புமலை,

இப்பறம்பு நாட்டுப் புன்செய் நிலங்களும் நிறைந்த பயன் வழங்கின. அண்மையில் ஈன்ற பெண் மயிலைப் போல் வரகுப்பயிர் கரியதண்டு நீண்டு அதன் அடியிலிருந்து முடிவரை கதிர் விரித்து விளைந்திருக்கும். தினைக்கதிர்கள் கொடுவாளைப் போல் வளைந்து முதிர்ந்திருக்கும். எள்ளின் இளங்காய்கள் முற்றிக் கறுத்திருக்கும். அவரைக் கொடிகளிலே குலைகுலையாய்க் காய்கள் காய்த்திருக்கும்.

பறம்புமலையில் உள்ள சுனைகளில் பூத்த நீலமலர்களில் தேன், மழையில்லாக் காலத்திலும் அருவியாக வழிந்து கொள்ளுப் பயிருக்கு உழுத நிலத்தினூடே பாய்ந்து ஓடும். பறம்புமலை வானளாவிய உயரமும் அகலமும் உடையது. மலையில் உள்ள எண்ணற்ற சுனைகள் விண்மீன்களைப் போல விளங்கும்.

இவ்வாறு சங்ககால இலக்கியங்கள் பறம்பின் இயற்கை வளங்களைச் சொலலோவியமாக்கியுள்ளன. இத்தகு அழகும் வளமும் பொருந்தியிருந்த பறம்புமலையைப் போல இளமகள் ஒருத்தி, பெருங்கவினெய்தி அரிய காவலையுடையவளாயுள்ளாள் என்று செந்நாப்புலவர் கபிலர் பாடியுள்ளார்.

——

பறம்புப் போர்

டாக்டர் வ. சுப. மாணிக்கம்,

சங்க இலக்கியங்கள் தனியிலக்கியங்கள் அல்ல, கலப்பிலக்கியங்கள். அரச வரலாறும் போர் வரலாறும் சமுதாய மரபும் கலையியலும் அறிவியலும் பின்னிப் பொலியும் பதிவிலக்கியங்கள். இந்நூல்கள் இலக்கியவடிவில் எல்லையிலாப் பொருள் களைச் சொல்லிக் கொண்டிருக்கின்றன. பல தலைப்புக்களில் வகுத்தும் தொகுத்தும் திரட்டுமளவிற்குக் கருத்துக்கள்சொற்செறிவில் உறைந்துகிடக்கின்றன. 'கடலினுள் நாய் நக்கியாங்கு'' எனவும் 'வெள்ளத்துள் நாவற்றி யாங்கு' எனவும் மொழிந்தாற் போல, சங்க இலக்கியப் பரவையில் இதுவரை நடந்திருக்கும் ஆராய்ச்சி தவச்சிறிதென்க.

பண்டை வரலாற்ருய்வுக்குப் புறநானூற்றின் ஒவ்வொரு பாட்டும் ஒரு கல்வெட்டே வரவறிஞர் இடைக்காலக் கல்வெட்டுக்கு நல்குகின்ற மதிப்பினுங் கூடுதலாகச் சங்கப் பாடல்களுக்கு நல்கவேண்டும். ஏன்? இடைக் காலம் கற்பனை ஓங்கிய இலக்கியக் காலம் ஆதலின் கல்வெட்டுக்களிலும் கற்பனைக் கூறு ஓடியுள்ளது. சங்ககாலம் தன்மைக்காலம் சங்கப்பாடல்கள் வரலாற்று நிகழ்வுகளைப் பட்டாங்குக் காட்டும் தன்மைப்பாடல்கள். ஆதலின் அவற்றை அடிப்படையிலேயே நம்பி ஆராய்ச்சி கட்டலாம். சங்க மெய்ப்பனுவல்களை இலக்கியத் திறன்களுக்கேயன்றி வரலாறு முதலான பல்பொருள் ஆராய்ச்சிக்கும் விரிவாகப் பயன்படுத்த வேண்டும் என்பது என் உட்கிடை.

1. வேந்தர்கள் பாரியின் பறம்பை முற்றிய போரைப் பற்றிக் கபிலர் புற-நானூற்றில் பல பாடல்கள் யாத்துளார் பாரிமகளிரின் பாடலும் (புறம். ககஉ) நக்கீரரின் பாடலும் (அகம். எஅ) இப்போரைக் கூறுகின்றன. ஔவையாரின் பாடலும் (அகம். நகந) கபிலரின் பதிற்றுப்பத்துப் பாடலும் (௬க) இப்போர்க் குறிப்பு உடையன.

பறம்புப்போர் பற்றிப் பாரிகாதை பாடிய இராகவையங்கார் நுண்ணுராய்ச்சி செய்திருக்கின்ருர். வேங்கடசாமி நாட்டாரும் வேங்கடராசுலு ரெட்டியாரும் பாரி வரலாற்றைக் கபிலர் வரலாற்ருெடு இணைத்துத் தொகுத்துள்ளனர் (1) பறம்புப் போருக்குக் காரணம் பாரி தன் மகளிரை மணஞ்செய்து கொடுக்க மறுத்தது (2) சேர பாண்டிய சோழராகிய முடியுடை வேந்தர் மூவரும் இப்போரில் ஈடு பட்டனர். (3) பாரியை இரந்து பெற்று வஞ்சித்துக் கொன்றனர். இம்மூன்று கருத்துக்களும் கபிலர் பாரி வரலாறுகளில் தவருது இடம்பெறக் காண்கின்ருேம்; தீர்ந்தமுடிபுபோலப் பாடநூல்களிலும் உரைகளிலும்வழிவழி எழுதிவரக் கற்கின்ருேம். இவ் வரலாற்றை ஆயுந்தோறும் ஐயங்கள் கிளைக்கின்றன. திரிபுகள் பல்குகின்றன.

பலவற்றுக்கு அமைதிபடக் கூறலாமேயன்றி அறிவுபடக் கூறுமாறில்லை. மேற் சுட்டிய மூன்று கருத்துக்களுமே மறுவாராய்ச்சிக்கு உரியவை யெனினும் இக் கட்டுரையில் பாரியை வஞ்சித்துக் கொன்றனரா என்ற ஒருசெய்தியை ஆராய்வோம்.

2. 'வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றுங் கொண்டார்யாம் எந்தையும் இலமே'' (புறம். ௧௧௨)

என்ற பாரிமகளிர் செய்யுட்கு, ''ஒருவனை மூவேந்தரும் முற்றியிருந்தும் வஞ்சித்துக் கொன்றமையின், 'வென்றெறி முரசின் வேந்தர்' என்றது ஈண்டு இகழ்ச்சிக்குறிப்பு'' என உரையாசிரியர் அணிபடக் கூறியுள்ளார்.

''விரையொலி கூந்தல்நும் விறலியர் பின்வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடும் குன்றும் ஒருங்கீ யும்மே'' (புறம். ௧0௧)

''யாமும் பாரியும் உளமே
குன்றும் உண்டுநீர் பாடினிர் செலினே'' (ஷை ௧௧0)

என்பன கபிலர் பாடற் பகுதிகள். போரால் பெற முடியாது, இரவால் பெறலாம் என்று கபிலர் மொழிந்தனையே ஒரு சூழ்ச்சியாக மேற்கொண்டு மூவேந்தரும் கூத்தராய் வேடம் பூண்டு பாரியைப் பரிசிலாகப் பெற்று வஞ்சித்துக் கொலை செய்தனர் என்று கருதுவர் இதுவரை ஆய்குநர்.

''நெஞ்சிற்றுப் போகாமல் நின்றேவேள் பாரியினை
வஞ்சித்துக் கொன்றார் மறமன்னர்.'' (பாரிகாதை-௪0)

மேலைக்கருத்துக்குப் புறநானூற்றிலிருந்தோ பிற சங்க நூல்களிலிருந்தோ சான்று காட்ட வழியின்மையின், பழைய வுரைகாரர்; 'இகழ்ச்சிக் குறிப்பு' என எழுதிய தனையே சான்றாகக் காட்டினர் பாரிகாதையார். மூவேந்தர்கள் தாமே பாணவேடம் பூண்டு படையாளன் ஒருவனை இரவலனாக விடுத்துப்பாரியைப் பெற்றுக்கொன்றனர் என்று மூவேந்தர்க்குப் பெருமை தோன்றக் கதை புனைந்தார் ஆசிரியர் இப்பகுதிக்கு ''வஞ்சித்து கொன்ற திறம்'' என்பதுபெயர். ''அவனை வஞ்சத்தாற் கோறல் கருதினர் அதற்கொரு சூழ்ச்சியும் புரிந்தனர். நஞ்சனையார் புரிந்த வஞ்சனை இன்னதென யாரால் இயம்பலாகும்'' என்பது நாட்டார் விளக்கம். (கபிலர் ௪௧) இன்னவகை வஞ்சனை என்று நாட்டார் தெளிவிக்கா விட்டாலும் வஞ்சகத்தாற் கொன்றனர் என்பதனை உடன்படுவர். ''பாரியொடு பொருது தோற்றோடிய வேந்தர் அவனை வஞ்சனையாற் கொல்ல எண்ணிச் சூழ்ச்சி செய்தனர்'' என்று எழுதிய செட்டியார் புறப்பாட்டின் (௧௧௨) உரையே அடிக்குறிப்பில் சான்று காட்டினர். புறநானூற்று விளக்கவுரை ஆசிரியர் ஔவை துரைசாமிபிள்ளை ''வேள் பாரியைப் போருடற்றி வேறல் அரிதென உணர்ந்த தமிழ்வேந்தர் இரவலர் வடிவிற்போந்து அவனையே இரந்து நிற்ப'' (புறம் ௧0அ) என்று விளக்குவர். ''தமிழ் நாட்டு வேந்தர் மூவரும் போரில் வெல்ல வொண்ணாமையின் வஞ்சித்துக் கொன்றனர் என்பர்'' என்பது டாக்டர் உ. வே. சா. வின் கருத்து (புறநானூறு-பாடப்பட்டோர் வரலாறு).

3. ''வென்றெறி முரசின் வேந்தர்'' என்ற பகுதிக்குப் பழையவுரைகாரர் 'வஞ்சித்துக் கொன்றமையின்' என்று எழுதிய குறிப்புப் பொருந்துமா? அக்குறிப்பினை

மூலச் சான்றாகத் தழுவித் தமிழறிஞர்கள் பாரி வஞ்சனையாற் கொலையுண்டான் என்று எழுதிக்கொண்டு வரும் மரபு பொருந்துமா?

முதன்முறை போரிட்டகாலை நாடும் குன்றும் பாரிவயின் இருந்தன. அவற்றைக் கைப்பற்ற மாட்டாமல் முதற்போரில் வேந்தர்கள் தோற்றோடினர் என்ற செய்தி ''ஏந்து கோட்டு யானை வேந்தர் ஓட்டிய கடும்பரிப் புரவிக் கைவண்பாரி'' (அகம் ௭௮) என வரவுப் புலவர் நக்கீரரால் தெளிவாக்கப்பட்டது. 'பகைவர் ஓடு கழற் கம்பலை கண்ட செருவெஞ் சேஎய் பெருவிரல் நாடே' (புறம் ௧௨௦) என்ற கபிலர் பாட்டாலும் பாரி முதல் வென்றி பெறப்படும். இப்போருக்குப் பின் முந்நூறு ஊர்கள் கொண்ட பறம்பு நாட்டினை இரவலர்களுக்கு வழங்கிவிட்டான் பாரி. எஞ்சியிருந்தது குன்று ஒன்றே. முதற்போருக்கு முன் ''நாடும் குன்றும் ஒருங்கீயும்மே'' என்று மொழிந்த கபிலர் மறுமுனை வந்த வேந்தரை விளித்து, ''யாமும் பாரியும் உளமே, குன்றும் உண்டு நீர் பாடினிர் செலினே'' என்று குன்றை மட்டும் குறிப்பிட்டார். நாடு போயிற்றே என்று கருத வேண்டா; அதற்கு ஈடாக 'யாமும் பாரியும் உளமே' என்று கூடுதல் காட்டினர். முடிவாக மறுபோரில் வெற்றிபெற்றுக் குன்றைக் கொண்டனர் என்ற கருத்தை 'வென்றெறி முரசின் வேந்தர்' என்ற பகுதி குறிப்பதாகக் கொள்ளலாம்.

> ''கடல்கண் டன்ன கண்ணகன் றானை
> வென்றெறி முரசின் வேந்தர்'' (புறம். ௩௫௧)

> ''விசும்புகண் புதையப் பாஅய் வேந்தர்
> வென்றெறி முரசின் நன்பல முழங்கி'' (குறுந். ௩௮௰)

என்ற அடிகளில் வந்தன போன்ற மரபடையாகவும் கருதிப் போகலாம்.

4. பாரியை வஞ்சித்துக் கொன்றனர் என்பதற்குச் சங்கமூலம் எதுவும் இல்லை போர் நடக்கும் காலத்துப் பாடல் மூன்றே பாடிய கபிலர் பாரி இறந்தபின் இருபத்திரண்டு பாடல்கள் பாடியுளார். வஞ்சனைக் குறிப்பு என்னும் இல்லை வஞ்சக் கொலையாயின் இருங்கோவேளை இகழ்ந்தது போல வேந்தர்களையும் இகழாதிருப்பாரா? பெண் கொலைபுரிந்த நன்னனைத் தூற்றிப் பாடியது போலப் பிற சங்கச் சான்றோர்கள் இழித்துப் பாடியிருக்க மாட்டார்களா? ''விரையொலி கூந்தல் நும் விறலியர் பின்வர ஆடினிர் பாடினிர் செலினே'' என்று துணிவாக இளக்கமாக மூவரையும் முன்னிறுத்தி மொழிந்த கபிலர் வஞ்சனைக் கொல்கையாயின், மறைக்கவேண்டிய காரணம் என்னே? 'எந்தையும் இலமே, என்று பாரி மகளிரும் இயல்பான சாவுபோல ஏன் கூறவேண்டும்? பகைவர் பாரியை இரந்து பெற்றிருப்பாராயின், அக்கொடைமடத்தை எதனினும் புகழ்ந்தன்றோ பாடியிருப்பார் கபிலர்? யாமும் பாரியும் உளமே என்று பெருமிதமாகச் சொல்லிய தஞ்சொல்லைச் சூழ்ச்சிக்குப் பயன்படுத்திப்பாரியைக் கொடையால் கொன்றிருப்பார்களாயின், தஞ்சொல்லின் இன்னா விளைவையுணர்ந்து கபிலர் புலம்பியிருக்கமாட்டாரா? ஆதலின் வஞ்சித்த கொடைக்கொலை என்பதற்கு தனிமூலம் இல்லை எனவும் பழையவுரைகாரர் பின்னுள்ளோர்க்குப் பிழைபட வழிகாட்டி விட்டார் எனவும் அறிய வேண்டும். இவ்வுரைகாரரும் இன்ன வகையால் வஞ்சித்துக் கொன்றனர் என்று எழுதாமை காண்க.

> 5. ''நட்டனை மன்னே முன்னே இனியே
> பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று
> நீர்வார் கண்ணேம் தொழுதுநிற் பழிச்சி'' (புறம். ௧௧௩)

என்ற பாடலில் **பாரிமாய்ந்தென** என்றே பாடுகிறார் கபிலர். மாய்த்தென என்று பிறவினையாகப் பாடவில்லை. ஆதலின் வேந்தரொடு இறுதிவரை போரிட்டுப் போர்க்களத்துப் பெருவீரனாக மாய்ந்தான் பாரி என்றுகொள்ள வேண்டும்.

''புலர்ந்த சாந்திற் புலரா ஈகை
மலர்ந்த மார்பின மாவண் பாரி
முழவுமண் புலர இரவலர் இனைய
வாராச் சேட்புலம் படர்ந்தோன்'' (பதிற்று. கூக)

என்றும் கபிலர் செய்யுளில் 'மலர்ந்த மார்பின்' என்று வீரமாகக்குறிப்பிடல்நோக்கத் தகும். ஏறைக்கோனைக் குறமகள் இளவெயினி 'சிலை செல மலர்ந்த மார்பின்' (புறம். கருஎ) என்று பாடுதலை ஒப்புநோக்குக.

புறநானூற்றின் உ௲சு ஆம் பாட்டு கபிலரின் இறுதிப்பாடல் என்று சொல்லத் தகுவது. பாரியின் பெரும் பிரிவைப் பொருது வடக்கிருக்கும் கபிலர் பாடியது. இச் செய்யுட்கு, ''வேள்பாரி துஞ்சியவழி அவன் மகளிரைப் பார்ப்பார்ப்படுத்து வடக்கிருந்த கபிலர் பாடியது'' என்று நிகழ்விடம் குறிக்கப்பட்டுளது. பாரியை வஞ்சித்துக் கொல்லவில்லை என்பதற்குத் துஞ்சுதல் என்ற இவ்வினையைவிட வேறு சான்று வேண்டுங்கொல்? குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன், வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி, கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை என்றதுஞ்சலாட்சிகள் நாம் அறிந்தனவே. எனினும் ஒரு வேறுபாடு. இன்ன இடத்துத் துஞ்சிய என்று சுட்டியதுபோலப் பாரிக்குத் துஞ்சின இடம் சுட்டவில்லை. உள்ளூர்ப் போர்க்களமாதலின், 'வெள்ளிமான் துஞ்சியபின்'(புறம். உ0எ, உ௲அ) 'வெளிமானுழைச்சென்றாக்கு அவன் துஞ்ச' (ஷை உ௲எ) என வரும் இடங்களை ஒப்பிடும்போது, பிறிதொரு மரபும் புலப்படும்போலும். துஞ்சிய இடஞ் சுட்டுதல் வேந்தர்கள் அளவிலே காணப்படுதலின் அம்மொழி மரபு குறுநில மன்னர்க்கு உரியதில்லைபோலும்.

6. ''யாமும் பாரியும் உளமே
குன்றும் உண்டுநீர் பாடினிர் செலினே'' (புறம். கக0)

என்று வேந்தரிடம் வீறுமொழிந்த கபிலர், பாரி போருக்கு இறுதியாகப் புறப்படுங் காலை, தாமும் அருஞ்சமத்துக்கு உடன்போக எண்ணினர். துணையாக நின்று வாழ்தல் அல்லது பொருகளத்தே அவனொடு சாதல் எனத்துணிந்தார் முன்னினும் தானை பெருக்கி மறு போருக்கு மூவரும் வந்துளராதலின் இம்முறை எதிர்க்கும் பாரியின் இறுதி கபிலருக்குத் தெளிவாயிற்று. நண்பனைச் செருக்களத்துக்குப்போக விட்டுத் தாம் அவனது இல்லத்து இருக்க விரும்பவில்லை; 'யாமும் பாரியும் உளமே' என்று சொல்லியாங்கு ஒன்றிய காட்சியைப் படுகளத்துக்கும் உடன் சென்று காட்டத்துடித்தார் பாரி அவர் வரவுக்குச் சிறிதும் உடன்பட்டானில்லை. அறவே மறுத்துவிட்டான் மறுத்துத்தானே போய்ப் பொருது மடிந்தான்.

''பெருந்தகு சிறப்பின் நட்பிற் கொல்லாது
ஒருங்கவரல் விடாஅது ஒழிகெனக் கூறி
இனையை'' (புறம் உ௲சு)

என்பது கபிலரின் வடக்கிருப்புப் பாடல்.

மாய்ந்தென, மலர்ந்த மார்பு, துஞ்சியவழி என்று இருத்தலானும், கபிலர்தம் பிற்றைப்பாடல்களிலோ, செய்யுட்களின் நிகழ்விடக் குறிப்புக்களிலோ, வஞ்சித்துக் கொன்றமை சிறிதும் சுட்டப்படாமையானும் கொடையாளனாகிய பாரி மூவரையும் முற்றப் பொருது நன்னடையாளனாகவே மாய்ந்தான்; மாய்ந்து வாராச் சேட்புலம் படர்ந்தான்என்று கொள்வோமாக. 'வஞ்சித்துக் கொன்றமையின்' என்ற உரைகாரர் குறிப்பை எவ்வகை மூலமும் இன்மையின் கொள்ளாமாக.

கல்வெட்டுகளால் அறியப்பெறும் பறம்பு மலை

கரந்தை பேராசிரியர் - சி. கோவிந்தராசனார்

தமிழகத்தில், பசும்பொன் முத்து இராமலிங்கம் மாவட்டம் என்று இப்பொழுது பெயர் பெறும் இராமநாதபுரம் மாவட்டத்தின் வட மேற்குப் பகுதியில் இருக்கும் பெரிய குன்றம், முற்பட்ட காலங்களில் பறம்புமலை, கொடுங்குன்றம் என்றெல்லாம் வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ளது. பிற்கால வழக்கில் பிரான் மலை என்ற பெயரால் வழங்கப்படுகிறது.

தமிழக வரலாற்றில் சிறப்பிக்கப்பெறும் இக்குன்றத்தினைப் பற்றியும், குன்றின் தென்பகுதியின் அடிவாரம் முதலாக மேல் இரண்டு தடங்கள் ஆக மூன்றிடங்களில் கட்டப்பட்டுள்ள கோயில்களிலுள்ள கல் வெட்டுகளால் அறியப்பெறும் அரிய செய்திகளையும் கூறுவதாகும்.

கற்றளிகள், கல்வெட்டுகள்

குன்றின் அடிவாரத்தில் கொடுங்குன்ற நாதர் கோயிலும், அதனைச் சார்ந்து மலையின் ஏற்றமாகும் உயர்நடு தடத்தில் விசுவநாதர், பைரவர் கோயில்களும், மேல் தலைப்பாகவுள்ள பாறையில் குடையப்பட்டு உள்ள கருவறையில் சிவன் உமையோடு மணக்கோலத்திலுள்ள குடைவறைக் கோயிலும். மண்டபங்களும் உள்ளன. கோயில்களிலும் மண்டபச் சுவர்களிலும் முப்பதுக்கும் மேற்பட்ட கல் வெட்டுகள் உள்ளன. அவற்றுள், பிற்காலப் பாண்டியர்கள் கல்வெட்டுகளும், விசய நகர ஆட்சியின் மண்டலத் தலைவர்களின் கல்வெட்டுகளும், கி. பி. பனிரெண்டாம் நூற்றாண்டில் தமிழகத்தில் நிலவிய பதினெண்விஷயத்தார்கள் என்னும் சிறப்புப் பெயருடன் விளங்கிய வாணிபக் குழுவினரின் சமையப் பிடிபாடு பற்றிய வரலாறுதரும் கல் வெட்டும் உள்ளன. (இக்கல்வெட்டு குன்றின் அடிவாரத்தில் தனித்துள்ள சொக்கநாதர் கோயிலில் உள்ளது.) கல்வெட்டுகள் அனைத்தினையும் தவத்திரு அடிகளாரின் அருளாசியோடு படிபெடுத்துள்ளேன்.

பறம்பு மலை

குன்றத்தினை மலையென்று குறிப்பிடுவதும் வழக்கில் தொடர்ந்துள்ளது. கடைச் சங்க காலத்தில் விளங்கிய வள்ளல்களிற் சிறந்த பாரிவள்ளல் இம்மலையிலிருந்து, அதனைச் சார்ந்தும் சூழ்ந்தும் இருந்த முன்னூறு ஊர்களைப் புரந்துள்ளான். காடும் கறம்பும் மலையுமாக இருந்த நிலவியற்கையினால் பாரியின் நாடு பறம்பு நாடு என்றும், மலை பறம்பு மலை என்றும் பெயர் கூறப்பட்டுள்ளது. பிரான்மலை என்று இன்று குறிக்கும் மலையே அன்று பாரி வள்ளல் வாழ்ந்திருந்த பறம்பு நாட்டுப் பறம்பு மலை என்பதை இயற்கைச் சூழல்களாலும், தொன்று தொட்டு மக்கள் வழக்கில் சுட்டப் பெறுவதாலும், புற நானூற்றுப் பாடல்கள் தரும் செய்திகளாலும் அறியமுடிகின்றது. மற்றும், இம் மலையில் பாடல்களில் குறிக்கப்பெறும் சுனை வளமும் நிலவளமும் சூழல்களும் இன்றும் ஒரளவு இருப்பது குறிப்பிட தக்கதாகும்.

பறம்பில் - பாரீசுவரம்

மலையில் மூன்று தடங்களில் உள்ள கோயில்களிலும் மண்டபங்களிலும் உள்ள கல்வெட்டுகளுள், மூன்று கல்வெட்டுகளில் 'பாரீசுவரம்' என்ற பெயர் குறிக்கப்பெறுகின்றது. இப்பெயர் ஓர் ஊர்பெயராகவோ அல்லது ஒரு கோயிலின் பெயராகவோ குறிக்கப்பட்டிருக்கலாம்.

மலையின் மேல் தளத்தில் சுந்தரபாண்டியனால் கட்டப்பட்ட மண்டபச் சுவர்க் கல்வெட்டில், ''சுரபிநாட்டு திருக்காய்குடி பற்றில் கொற்றமங்கலமும், இன்னாட்டு அறுநூற்றுவன் ஏரிப்பற்றில் பாரீஸ்வர மும்'' என்று பாரீசுவரம் குறிக்கப்பட்டுள்ளது. மலையின் நடுத்தளத்திலுள்ள விசுவநாதர் கோயில் அடிப் படைக் கட்டுமான ஜகதிப் படையின் மேற்கு தெற்கு ஆகிய இரண்டிடங்களில் உள்ள கல்வெட்டுக்களில், ''உடையார் திருக்கொடுங்குன்றமுடைய நாயனாற்கு துவராபதி வேளார் கட்டின பூபால புரந்தரன் சந்திக்கு அமுதுபடி சாத்துபடி உள்ளிட்ட நித்தநிமந்தங்களுக்கு உடலாக விட்ட சுரபி நாட்டு திருக்காய்குடிப் பற்றில் கொற்றமங்கலமும், இன்னாட்டு அறுநூற்றுவனேரிப் பற்றில் பாரீசுரமும்—தேவதானமாக குடுத்த படியாலே'' என்று பொறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டுகளில் குறிக்கப்பெறும் 'பாரீசுவரம்' என்ற பெயர் கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுகளில் குறிக்கப்பெற்றுள்ளன. இப்பெயர், பாரி + ஈசுவரம் என்ற இரண்டு சொற்களைப் பெற்றதாகும். பாரி என்பது வள்ளல் பாரியை நினைவு செய்கிறது. ஈசுவரம் சிவனுறையும் ஊர் அல்லது கோயிலைக் குறிக்கின்றது. ஈசுவரம் என்ற பெயர் தேவார காலத்திற்கு முற்பட்டதாகவே வழக்கில் உள்ளதாகும்.

இரவலர்க்கும் புரவலருக்கும் வாரி வழங்கிய பாரி வள்ளலின் நினைவாக, பரம்பு நாட்டில் வழிவழி வந்த மக்களோ அல்லது மன்னரோ நிறுவிய ஊர் அல்லது கோயில் அப்பகுதியில் இருப்பதனைக் கல்வெட்டுகள் குறிக்கின்றன.

தமிழகத்தில் பல்லவ மன்னர்களும், சோழ மன்னர்களும் நிறுவிய பள்ளிப் படைக் கோயில்கள் உள்ளன. அக்கோயிலமைப்பில், அருவுருவான சிவலிங்கமே கருவறையில் நிறுவப்பட்டுள்ளது, எனவேதான் ஈசுவரம் என்ற பெயரால் குறிக்கப்பட்டுள்ளன.

முதல் இராசராசன் தனது பாட்டனார் அறிஞ்சய சோழன் தொண்டை நாட்டில் ஆற்றூரில் இறந்த பின்னர், தனது ஆட்சியில் நினைவு செய்து ஆற்றூரில் அறிஞ்சிகை ஈசுவரம் என்ற பெயரால் பள்ளிப்படைக் கோயிலைக் கட்டியுள்ளான். இதை, ''ஆற்றூர்த் துஞ்சின தேவர்க்குப் பள்ளிப் படையாக, உடையார் ஸ்ரீ இராசராச்தேவர் எங்கள் நகரத்தில் எடுப்பித்தருளின திருஅறிஞ்சிகை ஈசுவரத்து மகாதேவர்''

(தெ. கல். தொ-3, எண். 15, 16, 17) என்னும் கல்வெட்டுப் பகுதியால் அறிய முடிகின்றது. இது கோயிலாக அமைக்கப்பட்ட பள்ளிப் படைச் சின்னமாகும். இதைபோன்றே குலோத்துங்க சோழன் ஆட்சியில் விக்கிரம சோழன் பெயரால் பள்ளிப்படை ஊர் நிறுவப்பட்டுள்ளது. கல்வெட்டில்,

'' இந்நாட்டுப் பள்ளிப் படையான விக்ரம சோழ நல்லூர்'' (தெ. கல். தொ-12)
என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்முறையிலேயே பறம்பு நாட்டில் அறுநூற்றுவனேரிப் பற்றில் பாரியின் நினைவாகப் பாரீசுவரம் நிறுவப்பட்டுள்ளது. வரலாறு தரும் பறம்பு நாடாகும் ''சுரபி நாட்டில் அறுநூற்றுவன் ஏரி உள்ளது.'' என்று கல்வெட்டுகள் குறிக்கின்றன. (எ. ஆர். எண். 141-1903.)

ஏரிப்பாசனம் பெறும் நன்செய் புன்செய் நிலங்களோடு கூடிய சிற்றூர் பற்று என்று பெயர் பெறும். எனவே, ''அறுநூற்றுவனேரிப் பற்றில் பாரீசுவரமும்'' என்று குறிக்கும் ஏரியும் தடமும் பரம்பு மலை (பிரான் மலை) யைச் சூழ்ந்த பகுதியிலோ, மட்டியூர் அளவிலுள்ள புலத்திலோ இருக்கவேண்டுமென்பது புலப்படுகின்றது.

இவ்வாறால், பாரி வள்ளல் வாழ்ந்திருந்த பறம்பு மலையே பிற்காலத்தில் பிரான்மலை எனப் பெயர் பெற்றுள்ளது என்பது அறிய தக்கதாகும். வள்ளல் பாரியின் செப்புப் படிமம் ஒன்று கோயில் வழிபாட்டில் இங்கு இருந்து வருவதும் சான்றாகும்.

கொடுங்குன்றம்

பாரி வள்ளலுக்குப் பின்னர், பறம்புமலை என்ற பெயர் கால வழக்கில் தளர்ந்துள்ளது. பின்னர் வானளாவி எழுந்துள்ள மலையின் மேற்புறம் மேற்காகத் தொடர்ந்து நீண்டு முகட்டிற்குத் தாழ்ந்து வளைந்துள்ள இயற்கை தோற்றத்தினால் வளைந்த முகட்டினை உடைய குன்றம் - 'கொடுங்குன்றம்' என்று குறிக்கப்பட்டுள்ளது.

கி. பி. ஏழாம் நூற்றாண்டிரான திருஞான சம்பந்தர் கொடுங்குன்றம் சிவத் தலமாமாக விளங்கியுள்ளதனைத் தமது பதிகத்தில், ''வானிற்பொலி வெய்தும் மழைமேகங்கிழித்தோடி
கூனற்பிறை சேருங்குளிர் சாரல் கொடுங்குன்றம்'' என்று குறிப்பாராயினர்.

கி பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் சேக்கிழாரும், பெரிய புராணத்தில், ''கொன்றை நறுஞ்சடை முடியார் மகிழ்ந்த திருக் கொடுங்குன்றம்'' என்றே குறிப்பாராயினர்.

'' பாண்டியர் காலக் கல்வெட்டுகளில், திருமலை நாட்டு திருக்கொடுங்குன்றத்து உடையார் திருக் கொடுங்குன்ற நாயனார்''

''பாண்டி மண்டலத்து திருமலை நாட்டு திருக்கொடுங்குன்றத்து உடையார் திருக்கொடுங்குன்றமுடைய நாயனார்''

என்று கொடுங்குன்றம் குறிக்கப்பட்டதுடன் அடிவாரப் பெருங்கோயிலில் எழுந்தருளும் சிவபிரான் திருக்கொடுங்குன்றமுடைய நாயனார் என்றும் குறிக்கப்பெற்றார்.

கொடுங்குன்றம் என்ற பெயர் கி.பி.15-ஆம் நூற்றாண்டிலும் வழக்கில் இருந்துளது. அக்காலத்தில் விசய நகர ஆட்சி இப்பகுதி அளவும் நிகழ்ந்துள்ளது அப்பொழுது பாகாணத் தலைவர்களான, சாளுவ இம்மடி நரசிம்மராயர், தேவராய மகாராயர் ஆகியோர் கொடுங்குன்றத்திலுள்ள கோயில்களுக்கு பல நிவந் தங்கள் செய்துள்ளனர். நிவந்தங்களைக் குறிக்கும் கல்வெட்டுகளில், ''பாண்டி மண்டலத்து திருமலை நாட்டு திருக்கொடுங்குன்றம்'' என்றே மலையின் பெயர் குறிக்கப்பட்டுள்ளது.

பிரான்மலை

கி.பி.15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கொடுங்குன்றம் எனப் பெயர் மாற்றம் பெற்று 'பிரான்மலை' என்ற பெயர் கூறப்பட்டுள்ளது. அப்பொழுது விசய நகர ஆட்சியின் கீழ் எப்புலி நாயக்கர் என்பவர் இப் பகுதியைக் கண்காணித்துள்ளார். இக்காலம் கி.பி 1500 ஆகும். நாயக்கர் கோயிலுக்குப் பல தானங்களைச் செய்துள்ளமையினைக் கல்வெட்டுகள் புலப்படுத்துகின்றன. கல்வெட்டில்,

''பிரான்மலைச் சீமையில் தென்வரம்பியான திப்பராசபுரம் ஏம்பல் ஒன்றும், நஞ்சை புஞ்சை குளப்பரப்பு'' ஆகியவற்றை நாயக்கர் தானம் செய்துள்ளார்.

இக்கல்வெட்டில்தான் கொடுங்குன்றம் பிரான்மலையாக மாறியுள்ள பெயர் மாற்றம் காணப்படுகிறது.

மலையின் அடிவாரம், மேல்தளம், உச்சிதளம் ஆகிய பகுதிகள் அனைத்தும் சிவனுக்குரிய கற்றளி யாக இருப்பதைக் கண்ட நாயக்கர், மலையை 'சிவபிரான் மலை' என்றே குறித்தார் போலும். கல்வெட்டில் தானம் செய்யப்பட்ட ஏரியும் 'சிவபிரான் ஏம்பல்' என்றே குறிக்கப்பட்டுள்ளது.

எனவே, சங்ககாலத்தில் பரம்புமலையெனப் பெயர் பெற்று, பின்னர் கொடுங்குன்றமாகி கி. பி. 15-ம் நூற்றாண்டின் இறுதிவரையில் தொடர்ந்திருந்த பெயர், பின்னர் பிரான் மலை எனப் பெயர் மாற்றம் பெற்றுத் தொடர்ந்து வழக்கில் உள்ளது என்பது அறியத்தக்கதாகும்.

குடைவறைக் கோயில்

கொடுங்குன்ற நாதர் கோயிலைச் சார்ந்து உயர்ந்து செல்லும் பாறைத் தடங்களின் உச்சியாக அமைந்த இடத்தில் பெரும் பாறையொன்று உளது. அப்பாறையில் சிறிய குடைவறைக் கோயிலொன்று குடையப் பெற்றுள்ளது இதன் கருவறையில் சிவபெருமான் உமா தேவியைக் கைப்பற்றியமர்ந்துள்ள திருமணக் காட்சியினைச் சிற்பி அற்புதமாக அமைத்துள்ளான். மங்கையுடன் இறைவன் இருப்பதால் 'மங்கைப் பாகர்' என்று இறைவன் பெயர் பெற்றுள்ளார்.

இக்குடைவரைக் கோயில் முன்மண்டபச் சுவர்களிலுள்ள கல்வெட்டுகளிலும், பிற கல்வெட்டுகளிலும் 'மங்கை நாதர்', 'மங்கை நாத சுவாமி', நல்லமங்கை பாகர்' 'நல்லமங்கை பாக சுவாமி, என்றெல்லாம் இறைவன் குறிக்கப்பட்டுள்ளார்.

திருஞான சம்பந்தர் தமது பதிகத்தில்,

''நாகத்தோடு இளவெண்பிறை சூடிந்நல மங்கை
பாகத்தவனிமையோர் தொழ மேவும் பழநகரே''

என்று இறைவனை நல்லமங்கை பாகத்தவன் என்று குறிப்பிடுகின்றார். எனவே இச்சிறிய குடைவறைக் கோயில் கி. பி. ஆறாம் நூற்றாண்டளவில் பாண்டிய நாட்டுக் குடைவரைக் கோயில்கட்கு மூலமாக குடை விக்கப்பட்டுள்ளது என்ற கருத்து உருவாக்கம் பெறுகின்றது.

மண்டபங்கள் :

பாண்டிய மன்னர்கள் இங்குள்ள அடிவாரக் கோயிலாகும் கொடுங்குன்ற நாதர் கோயிலையும் மலைக் கோயில்களையும் கற்றளியாகக் கட்டியதுடன் மண்டபங்கள் பலவற்றையும் கருங்கற் பணியாகவே அமைத்துள்ளனர்.

உச்சித் தளக் குடைவறையைச் சார்ந்துள்ள பெருமண்டபம் 'சுந்தரபாண்டியன் மண்டபம்' எனக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. இம் மண்டபத் தூண் ஒன்றில் சுந்தர பாண்டியனின் படிமம் சிற்பமாக உள்ளது. பாண்டி மண்டலத்துடன் சோழ நாட்டினையும் சேர்த்து ஆட்சி செய்த பெருவீரன் மாறவர்மன் சுந்தர பாண்டியன் மண்டபத் திருப்பணியைச் செய்துள்ளான்.

இம் மண்டபத்தின் மேற்குப் பகுதியில் இணைந்த பாங்கில் உயர்தளமிட்டு அழகிய சிறு மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இம் மண்டபமே இலக்குமி மண்டபமாகும்.

இம்மண்டபங்கள் குடைவறைக் கோயில் ஆகியவற்றிற்குத் தென்புற இறக்கத்தில் பாறைத் தடத்தின் மேல் பெருவாயிலுடன் மதில் அமைக்கப்பட்டுள்ளது. வாயிற் கதவுகள் பெரிய அளவில் மர வேலைப்பாட் டுடன் வலிமையாகச் செய்யப்பட்டுள்ளன. கதவுகளின் சட்டக் கோப்புகளில் பதித்து இறுக்கமாக்கியுள்ள

பித்தளை உலோகத்தாலானதும் பல்வேறுபட்ட சித்தரிப்பு முகப்புகளில் வார்த்து உருவாக்கப்பட்டுள்ளதுமான குமிழ் முகப்பாணிகள் காணத்தக்கவைகளாகும். இக்கதவின் அமைப்பால் பாண்டிய நாட்டின் மர வேலைப்பாட்டின் திறனும், உலோக வார்ப்புக் கலையின் சிறப்பும் புலப்படுவதாகும்.

வணிகக் குழுவின் சமயப் பிடிபாடு - கல்வெட்டு

கொடுங்குன்றத்தின் அடிவாரப் பகுதியில் உள்ள சொக்கநாதர் தனிக் கோயிலில் வணிகக் குழுவினரின் கல்வெட்டொன்று பெரிய அளவில் உள்ளது. கல்வெட்டில் இக்கோயில் அழகிய திருச்சிற்றம்பலமுடையார் கோயிலென்று குறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டில் கி.பி.11-12ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் நிலவிய 'ஸ்ரீ ஐம்பொழில் பரமேஸ்வரிக்கும் பூமிதேவிக்கும் மக்களாய் விளங்கும் பதினென் விஷயத்தார்கள்' என்னும் பல்வேறுபட்ட வாணிபக் குழுவினர் தங்களால் ''திருக்கோயிலும் திருக்குளமும் மடமும் மடவளாகமாக'' செய்யப்பட்ட ''கோயிலின் முன்னர் திருக்காவணத்தில் நிறைவாக நிறைந்து, குறைவறக் கூடி அமையப் பேசி, இசையச் செய்த தன்ம காரியம்'' விளக்கப்பட்டுள்ளது.

வாணிக் குழுவினர் அழகிய திருச்சிற்றம்பலம் பலநாயனார் கோயிலுக்குரிய அனைத்து செலவினங்களுக்கும் மூல வருவாயாக வாணிகப் பொருள்களின மீது வரிவிதித்துப் பெறும் திட்டத்தினை உறுதி செய்துள்ளனர். இதுவே பிடிபாடாகும்.

தானியங்கள், பட்டு நூல் ஆடைகள், கற்பூரம், புனுகு, அகில் சந்தனம் முதலான வாசனைப் பொருள்கள், யானை, குதிரை, பொதி மாடு, ஆகிய வாகனங்கள் ஆகிய 42 பொருள்களுக்கும் அவற்றின் தரத்திற்கும் அளவிற்கும் ஏற்ப வரிகள் விதிக்கப்பட்டுள்ளன.

பொருள்கள், பொதி, தலைச் சுமை, வண்டி, குடம் ஆகிய அளவுகளில் மதிக்கப்பட்டுள்ளன. யானை, குதிரை, சுமை மாடு ஆகியவை தரத்திற்கேற்ப வரிகள் விதிக்கப்பட்டுள்ளன.

எடுத்துக் காட்டாக : ''உப்பு பொதி ஒன்றுக்கு காசு ஒன்றும், பாக்கத்துக்கு காசு அரையும், (பகுதி அளவு) வண்டி ஒன்றுக்கு காசு பத்தும்''
''நூல் தலைச் சுமைக்கு காசு இரண்டும்'
''தேன் குடம் ஒன்றுக்கு காசு முப்பதும்''
''சுமை மாடு ஒன்றுக்கு காசு இரண்டும்''
''குதிரை ஒன்றுக்கு அச்சு இரண்டும்''
''யானை ஒன்றுக்கு அச்சு அரையும்''
(அச்சு - பொன் நாணயம்)

''மற்றும் எப்பேர்பட்ட சரக்குகளுக்கும் இம்மரியாதிகளிலே கொள்வதாக சமயப் பிடிபாடு பண்ணிக்குடுத்தோம் திசை விளங்கு திசையாயிரத்தைஞ்நூற்றுவரோம்'' ,,இப்பதினெண் விஷையத்தார் பணிக்க இம்மமை வெழுதினான் இந்நாயனார் கோயில் கணக்கன்'', ''கொற்றனூர் உடையான் மண்டலச் சுவாமி குதிரைச் செட்டிகளில் வணிக நாராயணன் எழுத்து.''


இக்கல்வெட்டில் பதினென் விஷயத்தார்கள் என்னும் வாணிபக் குழுவினர் யாவர் என்பது விளக்கப்பட்டுள்ளது. வடக்கே உத்திரமேரூர் கல்வெட்டிற்காணும் வணிகக் குழுவினரைப் பற்றிய செய்திகட்கு இக்கல்வெட்டு மேலும் விளக்கம் தருகின்றது.

மற்றும், கொடுங்குன்றத்தின் அடிவாரம் வாணிபத் தாவளங்களில் ஒன்றாக இருந்துள்ளதனையும் அங்கு கோயில் குளம் முதலானவற்றை அவர்கள் செய்துள்ளார்கள் என்பதையும் இக்கல்வெட்டால் அறிய முடிகிறது.

விசுவநாதர் பைரவர் கோயில்கள்,

மலையின் நடுத்தடத்தில் இக்கற்றளிகள் சிறிய வடிவிலேயே கட்டப்பட்டுள்ளன. விசுவநாதர் கோயில் அடைப்படையில் ஜகதிப் படையிலுள்ள கல்வெட்டில் 'பாரீசுவரம்' குறிக்கப்பட்டுள்ளது. இக். கற்றளிக்கு முன்னருள்ள பைரவர் கோயில் முகமண்டபத்துடன் கட்டப்பட்டுள்ளது. செப்புத் திருமேனியாக பெருமிதத்துடனுள்ள பைரவர் திருமேனி அருள்மிகு காட்சியாகும்.

இதுவரையில் கூறியுள்ள ஆய்வுரைகளால், சங்ககாலத்தில் வள்ளல் பாரி இருந்து ஆட்சி செய்த பறம்பு மலையே இக்காலத்தில் பிரான் மலை என்று குறிக்கப்பெறும் குன்றமென்பதும், குன்றத்தில் சிவத்தளங்கள் மூன்று நிலைகளிற் கட்டப்பட்டுள்ளனவென்பதும். நல்லமங்கை பாகர் குடைவறைக் கோயில் கி.பி ஆறாம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டுள்ளது என்பதும் மலை அடிவாரத்தில் அக்கால வாணிபக் குழுவினர். கோயில் குளங்களைப் படைத்துள்ளதோடு வாணிபம் நிகழ்த்தும் தாவளத் தடத்தினையும் நிறுவியுள்ளனர் என்பதனையும், இங்குள்ள கல்வெட்டுகள் பிற சான்றுகள் ஆகியவற்றால் அறியப்பெறுவதாகும்.



நல்லமங்கைப்பாகர் கோயில் - குடவறை
விமானம்



வள்ளல் பாரி
படிமம்



குடவறைக் கோயில்
திருமேனிகள்
நல்லமங்கைப் பாகர்



பாரீசுரம் - கல்வெட்டு

ஒரு பாட்டு -
ஓர் எடுத்துக்காட்டு!

— குன்றக்குடி பெரியபெருமாள்

சாலை ஓரத்தில் வளர்ந்து நின்ற ஒரு சாதாரண முல்லைக்கொடி, சரித்திரக் கொடியானது!

எப்போது?

பன்னூறு ஆண்டுகளுக்கு முன், பாரிவேள் பறம்பு நாட்டை ஆண்டபோது!

எல்லாக் கொடிகளையும் போலவே, இந்தக் கொடியும் மண்ணில் முளைத்து, மலர்களை விரித்து, மணம் பரப்பி நின்றது. என்றாலும், தாவிப் படரக் கொழுகொம்பு இல்லாது, தளர்வுற்றுத் தவித்து, மன்னன் பாரியின் மனத்தை நெகிழ்வித்தது.

அழகிய தேரில் ஆரோகணித்துச் சாலையில் வந்த பாரிவேள், அலைப்புண்டு தவிக்கும் முல்லைக் கொடியை, அருளோடு ஒருமுறை நோக்கினான். அகத்துள் இரக்கம் சுரந்தது! அழகிய தேர் அங்கே நின்றது!

பூட்டி நின்ற குதிரைகளைச் சாரதி அவிழ்த்தான். பாரிவேள் காட்டி நின்ற சாலையோரம் தேரினை இழுத்தான். அருட்கோமான் பாரிவேள் கொடி அருகே வந்து, கனிவோடு கொடியினைக் கரங்களிலே ஏந்தி, கறங்கு மணி நெடுந் தேரில் படர விட்டுக் கருணை செய்தான்! களிப்புற்றான்! பின், கால் கடுக்க அரண்மனைக்கு நடந்தே சென்றான்!

நின்ற தடமே நில்லாது போகும் நீர்மையுடைய ஒரு முல்லைக்கொடி, பாரிவேள் காட்டிய அருட் கருணையால் பைந்தமிழில் நின்றது! எனவே தலைமுறை தலைமுறையாகத் தமிழர்தம் கருத்தில் பதிந்து, காலங்களை வென்றது! ''சாகாவரம்'' பெற்ற சரித்திரக் கொடியானது!

கருத்தில் சுமந்த முல்லைக் கொடி போலவே, இதயக் கனத்தில் சுமக்கும் இரு பிள்ளைக் கொடிகளும் பாரி வேளின் பறம்பு நாட்டில் இருந்தன! அவை அருளரசன் பாரிவேளின் மரபுக் கொடிகள்! அப்பழுக்கற்ற அந்தணப்புலவன் கபிலரிடம், தப்பாது தமிழ் கற்ற பொற்கொடிகள்! புறப்பாட்டில் ஒரு பாட்டைப் புகன்றதனால், அவை புலமைக் கொடிகள்!

புலமைக் கொடிகளாய் புகழ்பெற்ற பாரிவேளின் புதல்விகள் இருவர், பாரியின் மறைவுக்குப் பின்னே, வழங்கிய ஒரு பாடல் - உணர்வைப் பெருக்கும்! உள்ளத்தை உருக்கும்! இன்னும்... உரைகாரர் பழித்த மூவேந்தரை, கட்டுக்கதைப் பழியினின்றும் விட்டு விடுதலையாக்கும்!

''சென்ற மாதத்து முழு நிலவில் எம் தந்தை பாரி வாழ்ந்திருந்தார். எமது பறம்பு நாட்டை ஆண்டிருந்தார். இதோ, இந்த மாதத்து முழு நிலவில் எம் தந்தையும் இல்லை! எங்கள் நாடும் இல்லை! பறம்பு நாட்டை வென்ற அரசர் கைக் கொண்டார்!'' எனப் பாரி மகளிர் பாடிய பாடல் கண்ணீர் பெருக்குவதுடன் தண்ணார் தமிழ் வளர்த்த மூவேந்தர், வஞ்சனையால் பாரியைக் கொன்றனரென்று வீணில் வளர்த்த பழியை வீழ்த்தவும் செய்கிறது! 'வென்ற அரசர்' என்றால் வீரத்தால் என்றே பொருள்படும்! 'வஞ்சனை' வெற்றியெனில், மகளிரின் நெஞ்சை உலுக்கி, உரிய வார்த்தைகள் பாட்டில் வெளிப்பட்டிருக்குமே?

பாடல் இது: அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவின்
எந்தையு முடையேம் எம் குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார்யாம் எந்தையும் இலமே!

(புறம் - 112)

இந்தப் பாட்டு — மூவேந்தர் பழி நீக்கும் ஓர் உரிய எடுத்துக் காட்டு! இல்லையா?

குறிஞ்சிப் பாட்டில் சமுதாய நலம்

தமிழாகரர் தெ. முருகசாமி
முதல்வர், இராமசாமி தமிழக்கல்லூரி,
காரைக்குடி - 623001.

உணர்வும் உணர்ச்சியும் உயிரினங்களின் இயல்பூக்கங்கள். இவையில்லா உயிர்கள் மலட்டுத் தன்மையுடையன. மலட்டுத் தன்மையற்ற நல்லுணர்வாலும் நல்லுணர்ச்சியாலுமே உலகம் மலர்கிறது. இந்நுட்பத்தை மேல்வரிச் சட்டமாக்கினார் தொல்காப்பியர்.

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும். (பொருளியல் 27)

தூய அன்பு உணர்வால் இன்பம் துளிர்க்கும் உணர்ச்சியில் பருவமடைந்த ஒருவனும் ஒருத்தியும் உள்ளத்தால் உணர்ந்து வாழ்க்கையில் உறவுகொள்ளத் துடிக்கும் நிலையை நெறிப்படுத்தி உணர்த்தும் நெடும்பாட்டே குறிஞ்சிப்பாட்டு.

இது பத்துப் பாட்டாழியுள் காணப்படும் பருமுத்துக்களுள் ஓர் ஆணிமுத்து. இதை இயற்றியவர் கபிலர். இவர் பாரியின் உற்ற தோழர். மிகுந்த கல்விப் பரப்புடையவர் சொல் லாட்சித் திறனாளர். தம்பாட்டுத்திறத்தாலே பைந்தமிழுக்கு வளங் கூட்டியவர். உரையாசிரியர்கள் இவரது பாடல்களை மேற்கோளாக எடுத்தாளும்போது "கபிலரது பாட்டு" என இவறொருவரை மட்டுமே சிறப்பித்துக் கூறுவர். இத்தகு பெருமைக் குரிய கபிலரின் காவியப் புலமைநலத்திற்கோர் எடுத்துக்காட்டானது குறிஞ்சிப்பாட்டு.

கூடிவாழும் சமூக அமைப்பிற்கு அடித்தளம் வகுப்பது குடும்பம். அது 'பெண்ணின் நல்லாளுடன் பெருந்தகையிருந்ததே' என்ற தெய்வீகக் காட்சியோடு இல்லறம் என்ற பெயரைப் பெறும். இல்லறத்திற்கான ஆண்மையும் பெண்மையுமே உயிர்ப்பின் மூலங்கள்- இன விழைச்சியுடன் ஒன்றை ஒன்று ஈர்க்கும் காந்தத் தன்மையுடைய இந்த ஆண் பெண் மூலங்கள் ஆவிற்கு ஒரே காலத்தில் தோன்றும் இரு கோடுகள் போல ஓருயிர் ஈருடலாய்த் தலைவன் தலைவி என்ற பெயருடன் சமூகத்தின் அன்புப்பரிமாற்ற அடையாளக் கர்த்தாக்களாகத் தோன்றுகின்றன.

இந்த அன்பு எங்கும் எதிலும் நீக்கமற நிறைத்திருக்கின்றது. சுற்றுச் சூழலின் ஒவ்வோர் அசைவுகளும் அன்பை வாரி இறைக்கின்றன. இந்த அன்பு மழையில் நனைந்து சுமந்த ஒருவனும் ஒருத்தியும் இணைவதில் வியப்பில்லை. இந்த அன்புப்பரிமாற்றத் தொடர்ச்சியில் முந்தைய தலைமுறையான தந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவியதால் மக்கட்பேறாம் அடுத்த தலைமுறை உருவானது.

இப்படித் தலைமுறை இடைவெளியின்றிப் பெருகும் வழிவழியான அன்புத்துளிர்ப்புகள் அருள் என்னும் வார்ப்படங்களாகிய அகிலத்தையே உயிர்ப்பிக்கச் செய்கின்றன. இதனை 'அருளென்னும் அனபீன் குழவி' என்கிறார் திருவள்ளுவர். இக்கருத்தில் இல்லறவியலின பண்புகள் இருகூறாக்கப்பட்டுள்ளன. ஒன்று அன்பு; மற்றது அருள் அன்பு தாய் என்றால் அருள் குழவி. ஈண்டுத் தாயும் சேயும் சுட்டப்பட்ட தெனில் தந்தையும் சுட்டப்படுதல் வேண்டுமன்றோ? எது தந்தை என்பதற்காகவே வள்ளுவர்' அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை எனக்கூறு முகத்தான் அறத்தைத் தந்தைக்கு அடையாளமாகக் காட்டினார் எனக்கொள்ளலாம்.

இப்படியாக அன்பும் அறனும் அருளும் ஆகிய முக்கூட்டு மானுடக் கனபரிமான உணர்வுகளின் முகிழ்ப்பு இன்றேல் உலகம் இல்லை. இம் மூன்றும் ஒரே அச்சில் நின்று சுழலுவதால் உலகம் பிழைக்கிறது; பிறங்கி வளர்கிறது. இதனையே வேறு வகையாகக் கூறினால் அறம் அன்பை நெருட, அன்பு அருளாக நெகிழ்ந்து கொடுக்க, உலகம் வாழ்கிறது எனபதாம். இத்தகு நெகிழ்ச்சிக்கும் குறிஞ்சிப்பாட்டிற்கும் என்ன தொடர்பு என்பதை இனிக்-காண்போமாக.

பிறர்துன்பம் காணப் பொறுக்காத அருள் நெஞ்சினையுடைய ஓர் ஆண்மகன் தன்கண் முன்பாக ஒரு பெண்ணுக்கேற்பட்ட துன்பத்தைக் களைவதாகவும், அதனால் இருவரும் உள்ளத்தால் இணைவதாகவும் கபிலர் குறிஞ்சிப்பாட்டில் காட்டுகிறார். இங்ஙனம் காட்டு-வதிலிருந்து சமூகத்தின் அடித்தளக் கட்டுமானமாகிய அன்பு, அறம், அருள் ஆகியவற்றைப் புரிய வைப்பதே குறிஞ்சிப்பாட்டின் சமூகநலச்செய்தி என்பதாகத் தெரிகிறது.

குறிஞ்சிப்பாட்டின் செய்தி முழுவதும் தோழி தாய்க்குக் கூறுவதாக அமைந்துள்ளது. ஒருவர் மற்றொருவரிடத்தில் ஒரு செய்தியை எப்படிக்கூறவேண்டும் என்பதற்கு இக்குறிஞ்சிப் பாட்டின் அமைப்பே தக்க சான்றாகும். கூறும் செய்தியானது கூறுவோரின் அறிவுத்-திட்பத்தால் சிறப்புறும்.

தாய் மகளின் பல்வேறு மாற்றங்கண்டு தோழியிடத்தில் புலன் விசாரிக்கின்றாள். மாற்றத்திற்கான காரணத்தை நன்குணர்ந்தவள் தோழி இச்செய்தியை அவள் கூறுவதால் தலைவிக்கும் தலைவனுக்கும் ஏற்படுவனவற்றையும் தலைவியின் வீட்டார்க்கு ஏற்படும் தீங்கைப்பற்றியும் நன்குணர்ந்து அவைவாராவண்ணம் பக்குவமாக உணர்த்தவேண்டும் எனக்-கருதிப் படிப்படியே கூறத் தொடங்கினாள். திடுமெனச் செய்தியைக் கூறினால் தாய் கோபிப்-பாளே எனக்கருதி நடந்து விட்ட தவறுக்குத் தாங்கள் பொறுப்பில்லை எனத்தாய் உளங்-கொளுமாறு சுற்றி வளைத்துக்கூறும் பாங்கு இன்றைய நடைமுறை உலகில் அனைவரும் தெரிந்து கொள்ளவேண்டிய ஒன்றாகும்.

தோழி தாயிடம் சொல்லப் போகும் செய்தியாவது தலைவி ஒருவனைத்தானே மணாளனாகத் தேர்ந்துதெடுத்துவிட்டபதட்டமான செய்தியாகும், இதனைக் கூறுவதால் ஏற்படும் பின்விளைவுகளை எல்லாம் நன்குணர்ந்த தோழி அந்த அவலமான பின் நிகழ்வுகள் வாரா வண்ணமாகத் தாய்க்குக் கூறுவதால் குடும்பநலம் காக்கப் படுதலோடு பெண்ணின் பெருமையும் காதலின் சிறப்பும் கலங்கப்படாமல் காப்பாற்றப்படுகின்றன. என்பது தோழியின் எதிரதாக் காக்கும் அறிவுக் கூர்மையால் தான் எனத்தெரிகிறது.

எதிரதாக் காக்கும் அறிவினார்க்கில்லை
அதிர வருவதோர் நோய் (429)

என்பது வள்ளுவர் வாக்கு. இன்றைய நடப்பியல் உலகில் வரப்போவதை அறிந்து காக்கவல்ல அறிவு வல்லமை எல்லாத்தரப்பிலும் குறைந்து வருவதைக் காண்கின்றோம் சமூக நலங் கருதி எடுக்கப்படும் முடிவுகளில் நெகிழ்ச்சியும் தளர்ச்சியும் காணப்படுவதால் அன்றாட மனித வாழ்க்கையில் அச்சமும் அவலமுமே மிஞ்சுகின்றன.

கபிலர் பாரிக்குப் பக்கத்திலிருந்தவர். ஆதாயங் கருதி வாழ்வை நடத்தாக அப்பழுக்-கற்ற செந்தண்மையாளர். ஆதலால் பக்குவமாகக் கூறுவது எப்படி என அறிவுறுத்துவார் போலப் பாடலைக் கவிக்கூற்றாக அமைக்காமல் தோழிக் கூற்றாகத்தொடங்கி முடிக்கின்றார். போர் உணர்ச்சியோடு செயல்படும் இருபெரும் வேந்தரைச் சந்து செய்விக்கும் சான்றோரைப் போலத் தோழியின் கூற்று அமைந்துள்ளது.

இகல்மீக் கடவும் இருபெரு வேந்தர்
வினையிடை நின்ற சான்றோர் போல
இருபேர் அச்சமோடு யானும் ஆற்றலென் (27-29)

சந்து செய்விப்பதால் போர் நீக்கி நாடுகாக்கப் படுவதுபோல ஈண்டுத் தோழியின் பக்குவப் பேச்சால் குடும்ப நலம் காக்கப்படுகிறது. இது தோழியின் கூற்றாக அமைந்த குறிஞ்சிப்-பாட்டின் முழு அமைப்பில் காணும் சமூகநல முதற் செய்தியாகும்.

அடுத்த செய்தி வாழ்க்கைக்குத் தேவையான ஒழுக்கத்தைப் பற்றியதாகும்.

'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்பது வள்ளுவம். பகுத்தறிவு சார்ந்த மானுடத்திற்கே ஒழுக்கப் பண்பு உண்டு. இஃது சிறிது குன்றுமாயினும் அக்குற்றம் நீங்கத் தூய்மைப்படுத்தி மீண்டும் பழைய நிலைக்கு உயர்த்துதல் என்பது சான்றோராலும் இயலாதது. இதனையே ஆங்கில நாட்டு அறிஞர் ஒருவரும் கூறியுள்ளார். 'ஒழுக்கம் வெள்ளைத்தாள் போன்றது. அது ஒருமுறை கரைபட்டு அழித்தாலும் பழைய வெண்மையைக் காணமுடியாது.'

Character is like white paper, if once blotted it can hardly ever be made to appear white as before.

— J. Hawes

அகப்பொருள் அடிப்படையில் குறிஞ்சிப்பாட்டின் ஒழுக்கம் யாதெனில் ஒருவனுக்கு ஒருத்தி என்பதே ஆகும். களவில் சந்தித்தவனை மணம் முடித்தல் என்பது இதன் பொருளாகும். தலைவன் தன்னை உடலாலும் உள்ளத்தாலும் தொட்ட காரணத்தால் அறத்தொடு நின்று மணம் முடித்துக் கொள்ளத் துடிக்கும் தலைவியின் ஒழுக்க நிலையைக் கபிலர் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை
நேர்வரும் குறைய கலம்கெடின் புணரும்
சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்தல்

ஆசறு காட்சி ஐயர்க்கும் அந்நிலை எளிய என்னார் தொல்மருங்கு அறிஞர் (12 - 17)

முத்து, மணி முதலியவற்றால் செய்யப்படும் அணிகலன் கெடு மானல் மீண்டும் அத்தொழில் வல்லாரால் செப்பனிட்டுக் கொள்ள இயலும். ஆனால் ஒழுக்கம் சிறிது குன்றினால் அதைச்செப்பனிட யாராலும் இயலாது என்று தோழி கூறுவதிலிருந்து கறைபடா ஒழுக்கத்தின் சங்க காலப்பெண்ணின் உணர்வை உணர முடிகிறது.

இற்றைநாளில் மலரினும் மெல்லிதாய காதல் உணர்வைக் கொச்சைப்படுத்தி வெளுத்தாலும் நீங்காத கறையோடு விளங்கும் ஆபாசஎழுத்துக்களும் படக்காட்சிகளும் ஒழுக்கத்தைச் சீர்குலைக்கும் எமன்களாக உருவாகி உலா வருவதைப் பார்க்கின்றோம். இப்படிப் பால் உணர்ச்சியால் தூண்டப்படும் நிலையில் வளமான இளமைகள் முற்றிப் பழுக்காமல் பிஞ்சிலேயே வெம்பி வீழும் அவலத்தை என்னென்பது! ஆகவே ஒழுக்கம் இன்றேல் சமூகம் பாழ்பட்டு விடும் அதை ஒவ்வொருவரும் கட்டிக் காக்கப் பாடுபடவேண்டும்

கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்பதைப் போன்றதன்று சங்க காலக் காதல் அது புனித மானதாகவும் தெய்வீகமானதாகவும் கருதப்பட்டது. தலைவனும் தலைவியும் 'யாயும் ஞாயும் யாராகியரோ' எனச் சந்தித்து அன்புடைய நெஞ்சம் கலந்தாலும் 'நீரும் நிழலது இனிதே'' என்னாற்போலப் பெரியோர்கள் கூடி உறுதி செய்து அதன் வழியே வாழத் தலைப்படுதலை விரும்பிய நல்ல பண்பாடிருந்தனதக் குறிஞ்சிப்பாட்டால் உணரமுடிகிறது.

தலைவனும் தலைவியுமாகத் தங்கள் திருமணத்தைத் தீர்மானித்துக் கொண்டதால் தலைவிக்குத் தன்பெற்றோர் பற்றிய அச்சம் இருக்கவே செய்தது. முறையப்படி அப்பெற்றோர்களாலும் சான்றோர்களாலும் பொருத்தம்பார்த்துத் திருமணத்தைச் செய்து கொள்ள விழைகின்றாள் தலைவி

கொடுப்பின் நன்கு உடைமையும் குடிநிரல் உடைமையும்
வண்ணமும் துணையும் பொரீஇ எண்ணாது
எமியேம் துணிந்த ஏமம்சால் அருவினை (30 - 32)

பல பொருத்தங்கள் பெரியோர்களைக் கொண்டு ஒப்பிட்டுப் பார்த்துத் திருமணம் செய்து கொள்வதால் குடும்பநலம் பழுதின்றிப் பாதுகாக்கப்படும் என்பது திண்ணம். கண்காணாக் கோள் நிலைப் பொருத்தங்களைவிடக் கண்கண்ட பல்வேறு பொருத்தங்களை நுட்பமாகக் கண்டுரைக்கக் கூடியவர்கள் பெரியோர்களே என்பதால் தலைவியைப் போலவே தலைவனும் 'நாடறி நன்மணம் அயர்கம்' (232) எனக் கூறுவதாகக் கபிலர் காட்டுவது சமூக நலம் காக்கப்பட வேண்டுமெனில் சீரான குடும்பநலம் காக்கப்பட வேண்டும் என்பதை நினைவூட்டும் செய்தியாகும்.

ஒழுக்கம் நிறைந்த உலக வாழ்விற்குத் தன்னையிழந்த தியாகமும் அசைக்க முடியாத நம்பிக்கையும் மனித வாழ்வை மேம்படுத்த வல்லன. இந்த அடிப்படையில் தலைவன் தலைவியின் இணைப்பு கபிலரால் காட்டப்படுகிறது.

தலைவிக்கு யானையால் வரும் தீமையைத் தலைவன் போக்குகிறான். யானையோ பரியது கூர்ஸ் கோட்டது அதன் சினமோ சிங்கத்தினும் சீற்றம் மிக்கது. இடிபோல் முழங்கி மதநீர் ஒழுகி மையல் கொண்டு ஓடி வருகிறது. அதன் முன்னர் எவரே நிற்க ஒல்லும். ஆனால் அந்தத் தலைவனோ வீரத்தை முதலீடாக்கித் தன் உயிரைத் துச்சமெனக் கருதி யானையை விரட்டுகிறான். இப்படி யானையை விரட்டும் வீரத்தைத் தலைவனின் தியாக-

மாகக் கருதுகிறாள் தலைவி. இதனால் அவன் யானையை விரட்டும் போது தன்னைத் தொட்டு அரவணைத்ததை மனதார விரும்புகிறாள். அந்த அந்தரங்க உள் உணர்வை ஊடுருவிப்பார்த்த அவனும் அவளையே திருமணம் செய்து கொண்டு செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்க விழைவதாக மலைக் கடவுள் மீது ஆணையிட்டு அவ்வாணையைத் தலைவி நம்பும்படிச் செய்ய இனிய தெளிந்த அருவி நீரைக் குடித்துச் சூளுரைக்கின்றாள். இங்ஙனம் சூளுரைப் போர் பொய்க்க மாட்டார் என்பது பழங்கால நம்பிக்கை.

வசையில் வான்திணைப் புரையோர் கடும் பொடு
விருந்துண் டெஞ்சிய மிச்சில் பெருந்தகை
நின்னோடு உண்டலும் புரைவது என்றாங்கு
அறம்புணை ஆகத் தேற்றி, பிறங்குமலை
மீமிசைக் கடவுள் வாழ்த்தி, கைதொழுது,
ஏமுறு வஞ்சினம் வாய்மையின் தேற்றி
அம்தீம் தென் நீர் குடித்தலின் (205 - 11)

நம்பினோரை நட்டாற்றில் விடும் இக்கலிகாலத்தில் இக்குறிஞ்சித்திணை மரபு வியப்பைத் தருவதாகவே உள்ளது. ''அறிபவர் நெஞ்சத்துக் குறுகிய கரியில்லை'' என்பது கலித்தொகை காட்டும் நெஞ்சொடு பட்ட குடும்பநலச் செய்தியாகும்.

மேற்கண்டவறாகக் குறிஞ்சிப் பாட்டின் சாரமாக உணர்வன சில உள. அவையே குறிஞ்சிப் பாடல்தரும் அச்சாணியான சமூக நலச் செய்திகளாகும். 1) ஒருவர் மற்றொருவரிடத்தில் செய்தியைக் கூறும் பாங்கு. 2) அப்பழுக்கற்ற அன்புறு நெஞ்சம் கலந்த காதல் கலப்பால் ஒழுக்கம் சிதையாத தலையாய உணர்வு. 3) தன்னையிழக்கும் தியாகமும் ஐயமற்ற நம்பிக்கையும் இன்றியமையாதன.

இங்ஙனம் சமூக நலமேம்பாட்டிற்கான அடிப்படையாகும் குடும்ப உணர்வுகளைப் பதப்படுத்தி வைத்துள்ள தைலத்தோணியாக மிளிர்வது குறிஞ்சிப்பாட்டு. அதனைப் படித்தின்புறுவதாவது 'தான் இன்புறுவதுவது உலகின்புறக் கண்டலோடு ஒக்கும்' என்பதாம்

பாரி - பாவை அன்ன நல்லோள் கணவன்

பாரியின் மனைக் கிழத்தியைப் பற்றி நாம் ஏதும் அறிந்திலம் பதிற்றுப் பத்தில் :

''ஓவத்தன்ன வினைபுனை நல்லில்
பாவை அன்ன நல்லோள் கணவன்''

என்று பாரியின் மனைவி வாயிலாகப் பாரியைப் புகழ்ந்து பாடுகிறார் கபிலர்.

''செயிர்தீர் கற்பின் கொழுந்தாக'' விளங்கிய பாரியின் துணைவி, தன் கணவன் இறந்த செய்தியறிந்த உடனே, தன் இன்னுயிரை இழந்திருக்க வேண்டும். அல்லது நளிர் மலர்ப் பொய்கையெனக் கனல் எரியில் மூழ்கி உயிர் துறந்திருக்க வேண்டும். இவ்விரண்டினுள் ஏதோ ஒரு முடிவு நிகழ்ந்திருந்தால்தான், அவளைப் பற்றிய குறிப்பு அறவே விடப்பட்டது போலும்!

— அறிஞர் கு. ராஜவேலு

பறம்பு

டாக்டர் பழ. முத்தப்பன்
முதல்வர், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச்சிவபுரி-622 403.

சிறுவ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய பறம்பின் கோமான் பாரி புரந்தநாடு பறம்பு நாடு. பறம்பு நாடு பற்றிக் குறிப்பிடும்போது சங்க அக இலக்கியங்களும் புற இலக்கியங்களும் பறம்பு மலையின் இயற்கை வருணனையை இடம்பெறச் செய்தே சிறப்பிக்கின்றன. சங்க காலத்தில் பறம்பு என்னும் பெயரோடு பாராட்டப் பெற்ற பாரியின் மலை பின்னர் திருஞான சம்பந்தர் காலத்தில் கொடுங்குன்றம் என வழங்கப் பெற்றிருக்கிறது. பின்னர் 12 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்றில் 'புறமலை' என வழங்கப் பெற்றிருக்கிறது. கி. பி. 16 ஆம் நூற்றாண்டாம் இம்முடி நரசிங்கராயர் காலத்தில் 'பிரான்மலை' என வழங்கப் பெற்றிருக்கிறது. அப்பெயரே இக்காலத்திலும் வழங்கப் பெறுகிறது.

பறம்பு மலையைச் சுற்றியுள்ள முந்நூறு ஊர்களைப் பெற்று விளங்கியது பறம்பு நாடு எனக் கபிலர் குறிப்பிடுவர். மானிடர்கள் ஒரு இடத்தை விட்டுப் புறப்படும்போது அவ்விடத்தில் உள்ளார்பால் விடைபெறுவது இயற்கையாகும். ஆனால் பொய்யா நாவினை உடைய அந்தணாளன் கபிலரோ - பறம்பு நாட்டை விட்டுப் பிரியும்பொழுது பறம்பு மலையை நோக்கி சில பல கூறி- அதன்பால் விடை பெற்றுப் புறப்படுவதை நோக்கும் போது - பறம்பு மலையின் பெருமை தெற்றெனப் புலப்படுகிறது.

> "பெட்டாங்கு ஈயும் பெருவளம் பழுனி
> நட்டனை மன்னோ முன்னே யினியே
> பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று
> நீர்வார் கண்ணேம் தொழுது நிற்பழிச்சிச்
> சேறும் வாழியோ பெரும்பெயர் பறம்பே" (புறம் : பா. 113)

கபிலரின் இப்பாடல் பறம்பு மலை அக்கால மானிடர் வாழ்வொடு எத்தகைய நிலையில் பின்னிப் பிணைந்திருந்தது என்பதை வரலாற்று உணர்வோடு தெரிவிக்கிறது மானிடர் வாழ்வில் மலை இணைவதற்குக் காரணம் அதன்கண் விளையும் விளை பொருள்களே பறம்பு மலையின்கண் விளையும் விளைபொருள்களைப் பற்றிக் கபிலர் குறிப்பிடும் பொழுது உழவர் உழாதனவாகிய நான்கு பயன் உண்டு என்று குறிப்பிடு கிறார் (புறம்- 109) அந் நால்வகைப் பொருளில் தீஞ்சுளைப் பலாப்பழம் ஒன்றாகும்

பறம்பின் பலாப்பழம் பற்றிய கற்பனை மிகச் சிறப்பாகப் புறநானூற்றிலும், பதிற் றுப்பத்திலும் காணப்பெறுகிறது. செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பற்றிக் கபிலர் பாடிய பத்துப்பாடல்கள் ஏழாம் பத்தாகும். உயிரனைய நண்பன் பாரியை இழந்த பிறகு செல்வக் கடுங்கோ வாழியாதனைக் காண வந்த கபிலர் முதல் பாடலைத் தொடங்கும்போதே பாரியை நினைவூட்டித்தான் தொடங்குகிறார்.

> "புலர்ந்த சாந்தின் புலரா ஈகை
> மலர்ந்த மார்பின் மாவண் பாரி"

எனக்கூறி நினைவு கொள்கிறார் கபிலர். பாரியை நினைவு கொள்ளும்போது - முன்னே குறிப்பிட்டாங்கு தான் விடைபெற்ற பறம்பையும் நினைவு கொள்கிறார் பறம்பின் இயற்கை வளம் அவர் நினைவில் நிழலாடுகிறது. ஆம். பறம்பு முழுமையும் பலாப் பழங்கள், பழங்களும் நன்கு முற்றி - நேரத்திற்கு நேரம் வெடிக்கிறது. பழம் வெடித் ததால் சுளையின் விதைகள் கீழே விழுகின்றன. விதைகள் கீழே விழுந்துவிட்டதால் சுளையிலிருந்து தேன் ஒழுகுகிறது. தேன் ஒழுக ஒழுக - சுற்றியுள்ள காற்றுமுழு மையும் தேன்மணம் கமழுகிறது. பலாச்சுளைத் தேன்மணம் சுமந்த காற்று மலை முழுமையும் அத்தேன் மணத்தைத் தூற்றுகிறது. இந்த நிலையை அப்படியே கவிக் காட்சியாகத் தருகிறார்.

"பலாஅம் பழுத்த பசும்புண் அரியல்
வாடை தூக்கும் நாடு"

என்பது அக்காட்சியை நினைவூட்டும் அடிகள்.

இவ் அடிகளில் பலாப்பழம் நன்கு பழுத்து வெடித்திருப்பதை விளக்கக் கபிலர் கையாளும் தொடர் "பழுத்த பசும்புண்" என்பதாகும். பலாப்பழம் பழுத்து வெடித்த தோற்றம் பசும் புண்ணை நினைவூட்டுகிறது. பாரியெனும் வெற்றி வீரன்பால் வாழ்ந்த புலவருக்குப் போர்களத்தைக் காணும் வாய்ப்பு உறுதியாகக் கிட்டியிருக்கும். போர்க் களத்தில் வீரர்தம் மேனியில் விழுப்புண் பட்டுப் பெருமிதம் கொள்வதைக் கண்டு மகிழ்ந்திருப்பார் புலவர். பாரியின் வீரர்தம் மேனியெலாம் விழுப்புண் - புதிய புண்கள் நிறைந்திருப்பதைக் கண்டு வியப்புற்ற கபிலருக்கும் பறம்பின் பலாப்பழம் பழுத்து வெடித்ததைக் கண்டதும் பாடலில் வியத்தகு காட்சியை இணைக்கத் தோன்றியிருக்கிறது.

உரமுடைய வீரர்மேனியின் புதுப் புண்ணின் ஒழுகு குருதியும் - செழிப்புற்ற பலாப்பழத்தின் வெடிப்பிலிருந்து ஒழுகும் தேனும் கபிலருக்கு ஒரே காட்சியாக அமைந்திருக்கிறது. அது மட்டுமா? கபிலருக்குப் பழத்தின் வெடித்தவாய் - புண்ணின் வாயை நினைவூட்டுகிறது. புண்கூட சாதாரணப்புண் அல்ல - புதுப்புண், எனவேதான் பசும்புண் அரியல் என்கிறார் கபிலர். கபிலரின் இப்பதிற்றுப் பத்துத் தொடரோடு,

"புண் அரிந்து அரலை உக்க நெடுந்தாள் அசினி"

என்ற மலைபடுகடாம் 138ஆம் அடியும் ஒப்பு நோக்கத் தக்கதாகும்.

இவ்வாறு பரம்பின் வளம் கண்டு உவந்த புலவர் பெருமான் பாரி மாய்ந்த பின்னே பறம்பின் வறியநிலை கண்டு இரங்கிப் பாடும் போது நெஞ்சம் கையற்றுப் பாடியுள்ளார். அவரின் பாடல்களை இன்று படிக்கும் பொழுதும் அக்கையறுநிலை படிப்பவரின் உள்ளத்தில் அவலத்தை ஏற்படுத்தி விடுகிறது. பறம்பைப் பிரிந்து நாட்டு வழியே வருகிறார் புலவர். பறம்புநாடு காவலன் இன்மையால் களை இழந்து நிற்கிறது. வளம் அனைத்தும் அழிந்து போயின. வறண்டநிலையே காட்சி தருகிறது, உடனே கபிலரின் அவல நெஞ்சம் அடிகளை அடுக்குகிறது.

"அறையும் பொறையும் மணந்த தலைய
எண் நாள் திங்கள் அனைய கொடுங்கரைத்
தெள்நீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ" (பாடல் :118)

பாறையும்—சிறு வளைவுகளையும் உடைய சிறுகுளம் காவலன் இல்லை என்றால் நீர் பெருக்கெடுத்தகாலை உடைவது இயற்கை அவ்வாறு காவலன் இல்லாத குளக்கரை உடைந்துவிட்டால் நீர் வெளியேறி எவ்வாறு நீர்நிலை வறண்டுவிடுமோ, அதுபோலப் பறம்பு—பாரியாம் காவலன் இல்லாமல் பாலையாய்க் காட்சி தருகிறது.

இப்பாடலில் சிறுகுளம் கீள்வது என்ற தொடர் சிறப்பு மிக்கதாகும். குளத்தில் நீர்ப்பெருக்கு ஆரம்பித்ததும் முதலில் நிகழ்வது கரையில் கீறலே- அக்கீறலே நீர் பெருகப் பெருக-பிளவாகி-பின்னர் பெரிதாக உடையும் எனவே காவலன் இல்லாத பறம்புநாடு சிறுகச் சிறுகத் தன் வளம் குன்றிப்போய் விட்டது என்பதைக் கபிலர் அத்தொடர் மூலம் நினைவூட்டி விடுகிறார்.

பாரியுடன் வாழ்ந்தபோது பறம்பின் வளம் கண்ட புலவருக்கு - பாரி - மாய்ந்த பின்னர் அழிவையும் காணவேண்டிய அவலநிலை ஏற்பட்டிருக்கிறது. இக்கொடுமை பிற புலவர்களுக்கு இல்லை என்றே தோன்றுகிறது. இருப்பினும் ஈண்டு நின்றோர்க்குத் தோன்றிடும் சிறுவரையாம் பறம்பின் பெருமை கபிலரின் வாக்கால் இலக்கியத்தில் காக்கப் பெற்றிருக்கிறது என்ற நினைவு நம் நெஞ்சில் நிறைந்திருக்கிறது.

***

எழுவருள் ஈடிலாப் புகழ் பெற்றோன்

மகாவித்வான் **ரா. இராகவையங்கார்**

பண்டைத் தமிழ் வள்ளல் சரிதங்களை உண்மையா னுணர்தற்குப் பெருந் துணையாயின, தாக்ஷிணாத்ய கலாநிதி, மஹாமஹோபாத்யாய, டாக்டர் ஸ்ரீ உ. வே சாமிநாதையரவர்கள் தேடியாராய்ந்து நன்று அச்சிற் பதிப்பித்த சங்க நூற்றெகைகளே யாகும். இவர்கள் பெருநன்றியை இத்தமிழுலகம் என்ஞான்றும் பாராட்டுவதாகும். இவர்கள் கி. பி. 1889-ல் அச்சிட்டுதவிய பத்துப்பாட்டுச் சிறுபாணாற்றுப்படை நச்சினார்க்கினியருரையாற்றான் தமிழ் வள்ளல் எழுவர் வரலாறுகள் முதல் முதல் ஒருவாறு தெளியலாயின. இதன்பின் இவர்கள் வெளியிட்ட புறநானூறு, பதிற்றுப்பத்து முதலியனவும் பிறவும் இவ்வள்ளல்கள் வரலாறு ஆராய்தற்குப் பெரிதும் உதவியாயின. நல்லிசைப் புலவர் அன்பின் வழிந்த இன்பப் பாடல்கட்கு இலக்காகிய வள்ளல் எழுவரும் தலைசிறத்தற்குரிய காரணங்கள் பல இத்தொகை நூல்களால் நன்கு விளங்கின.

இவ்வெழுவரும் கொடையானும் படைவீரத்தானும் சிறந்தவரென்பது; இவர் கொடை கூறுமிடத்தெல்லாம் இவர் படை வன்மையும் உடன் கூறுதலான் அறியலாம்.

பாரிக்குக் கபிலரும், ஆய்க்கு ஏணிச்சேரி முடமோசியாரும், பேகனுக்குப் பரணர் முதற் சிலரும், அதிகற்கு ஔவையாரும், காரிக்கு வடமவண்ணக்கன் பேரி சாத்தனார், நப்பசலையார் முதலியோரும், ஓரிக்கும், நள்ளிக்கும், வன்பரணரும் நண்பினரென்பது அவரவர் பாடல்களாற் றுணியப்படுவது.

இப்புலவர் இவ்வெழுவர்க்கும் தனித்தனி மலையுடைமை கூறுவது நினையத்தகும். பாரிக்குப் பறம்பு மலையும், ஆய்க்குப் பொதியில் மலையும், பேகனுக்குப் பொதினி மலையும், அதிகற்குக் குதிரை மலையும், காரிக்கு முள்ளூர் மலையும், ஓரிக்குக் கொல்லி மலையும், நள்ளிக்குத் தோட்டிமலையும் உரிய வெற்புக்களாகும். பேகனுக்குப் பொதினி கூறியது அவன் குடி முன்னோனாகிய ஆவியின் மலையாதல் பற்றி யென்க. நள்ளி தோட்டிமலை, சேலஞ்சேகரத்தைச் சேர்ந்த ஒசூர்ப் புறத்துள்ள அங்குசகிரி என்பதாகும். பொதினிமலை இக்காலத்துப் பழனிமலைப் புறமாக நினைக்கப்படுவது.

இவருட் **பாரி** ஓரறிவுயிர்க்கு அருளுதலும் புலவர்க்களித்தலும், **பேகன்** மயிலுக்குப் போர்வையளித்தலும் மறுமை நோக்காது வறுமை நோக்கி நல்குதலும், **ஆயி** பய்ன் கருதாது அறஞ் செய்தலும் தனக்கரிதிற் கிடைத்த கலிங்கத்தைக் கடவுட் படிமைக்குப் போர்த்தலும், **அதிகன்** ஔவை சாதனீங்க அமுதுவிளை நெல்லிக்கனி யளித்தலும், **ஓரி** சுரத்திடை நின்றும் பொன்னு மணியும் பாணர்க்களித்தலும், **நள்ளி** தன் பெயர் சொல்லாமலே தன் கழுத்திலிட்ட ஆரத்தையும் தன்கைக் கடகத்தையும் இரவலர்க் கீத்தலும், இப்புலவர்கள் கண்ட சிறப்பியல்புகளாகும்.

இவ்வாறு கொடை, வீரம், செல்வ முதலிய பல்வகையினும் ஒத்த இவ்வள்ளல் எழுவருள் வேள்பாரியைத் தலைமையில் வைத்துப் பெருஞ் சித்திரனுர் முதலாய புலவர்கள் சிறப்பித்துப் பாடற்குக் காரணம்; "ஈத்த,திரங்கான், ஈத்தொறு மகிழான், ஈத்தொறு மாவள்ளியன்" எனக் கபிலர் உலகறியக் கூறிய அரிய பெரும் பண்புகள் பற்றியா மென்று துணியப்படும்.

கல்லில் வடித்த கயிலாய உலா

டாக்டர் இரா. கலைக்கோவன்

இயக்குநர்

டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்

திருச்சிராப்பள்ளி - 620 017

சுந்தரரின் அணுக்கத் தோழராய் விளங்கி, அவருடனேயே கயிலாயம் சென்ற சேரமான் பெருமாள் நாயனார் பாடியருளிய கயிலாய ஞான உலா ஆதியுலா எனும் பெருமையுடையது. தமிழிலக்கிய வரலாற்றின் முதல் உலாவாகப் பிறந்த இந்த ஞான உலாவைக் கயிலாயத்தின் வாயிலில் தடுத்து நிறுத்தப்பட்டபோது பெருமாக்கோதையார் பாடியதாக அபிதான சிந்தாமணி குறிப்பிடுகிறது. ஆனால் சேக்கிழாரோ சுந்தரரின் பரிந்துரையால் வாயில் நிலையிலிருந்து இறைவன் திருமுன்னுக்கு அழைத்து வரபட்ட சேரமானார், இறைவனை வணங்கி, "உன் அன்பால் திருஉலாப்புறம் பாடினேன் திருச்செவி சாத்திடப் பெற வேண்டுமென" வேண்ட, இறைவன் இசைவளிக்கத் தம் உலாவைக் கயிலாயப் பேரருளாளர்கள் கேட்டு மகிழும்படி பாடி மகிழ்ந்ததாகக் கூறுகிறார். இந்த அற்புதத் திருவுலாவைக் கயிலையில் கேட்ட மாசாத்தனார் இதை மக்களும் கேட்டு இன்புற வேண்டுமெனக் கருதியே திருப்பிடவூரில் எடுத்துரைத்தார்.

இந்த உலா இறைவனை நாயகனாய்க் கொண்டது. "எவ்வுருவில் யார் ஒருவர் உள்குவார் உள்ளத்துள் அவ்வுருவாய்த் தோன்றி அருள் கொடுப்பவனான" சிவபெருமான் சிவலோகத்தில் சிவபுரத்துத் திருகோயிலுள் இருந்து அலங்கரித்துக் கொண்ட பாங்கையும், காளை மீது எழுந்தருளி உலாப் போந்த அழகையும் அது போழ்து இறைவன் எழில் கண்டு மயங்கிய எழு நிலைப் பெண்களின் ஏக்கம் நிறைந்த தோற்றப் பொலிவுகளையும் நெஞ்சையள்ளும் விதத்தில் இவ்விலக்கியம் பதிவு செய்துள்ளது.

நந்தவன மலர், மந்தாகினியில் பூத்த செந்தாமரைகள் இவற்றாலான வாசிகை சூட்டி, திருமேனிக்குக் குலமகளிர் செய்த சந்தனம் பூசி பட்டுடுத்தி திருக்கால்களில் பொற்கழல்கள் பூட்டி, சூளாமணிசேர் முடி கவித்து சுட்டிசேர் நெற்றிப்பட்டம் கட்டி, செவிகளில் குண்டலங்கள் அணிவித்து எட்டுத் தோள்களிலும் கேயூரம் பெய்து உதர பந்தம் கங்கணம் கடிசூத்திரம் புனைந்து, வடிவுடைக் கோலம் கொண்டாராம் இறைவன். இந்த எழில் நாயகனை வாழ்த்தி அட்ட வசுக்கள் இருக்குரைத்தனர். எழுவர் இருடியர் ஆசி உணர்த்தினர். ஆதித்தர் பன்னிருவரும் பல்லாண்டு இசைத்தனர். அகத்தியர் யாழ் வாசித்தார். தீக்கடவுள் கமழ் தூபம் ஏந்த இயமன் மங்களச் சொல்லால் வாழ்த்த நிருதி முதலானோர் நிழற்கலன்கள் தூக்க வருணன் மணிக்கவசம் தாங்க, உலா செல்லவிருக்கும் வீதியெல்லாம் தூய்மையாகும்படி வாயு நனிவிளக்க மாமழை நீர் தெளித்துக் குளிர்வித்தது, எண் திசைக் காவலர்களுள் ஒருவரான ஈசானன் அடைப்பை கைக் கொண்டார். அசுவினி தேவர்கள் மந்திர முழக்கம் செய்து வாழ்த்த, உருத்திரர்கள் தோத்திரம் சொல்லக் குபேரனோ வழியெல்லாம் நிதி குவித்து நின்றான். கங்கையும் யமுனையும் கவரி வீச, பைந்நாகம் எட்டும் சுடர் எடுப்ப கைந்நாகம் எட்டும் கழல் வணங்க, மேகம் விதானமாய், மின்னல் சூழ் கொடியாய் முகிலோசை முழவொளியாய் தும்புரு, நாரதர் பாட்டொலிக்க கொழுகொம்பு போன்ற நுண்ணிடைப் பெண்ணியலார் ஆடி மகிழ்விக்க, விண்ணோர் பணிய ஒளி வீசும் வெண்ணிறத்து இள எருதின் மீது சிவபெருமான் ஏறியமர்கிறார்.

பூத கணங்கள் காவலுக்குவர மயில்மேல் முருகனும், யானைமேல் இந்திரனும் அன்னத்தின் மீதேறி நான்முகனும் கருடன்மேல் திருமாலும் இறைவனைச் சூழ வந்தனர். இவர்களுடன் மங்கையர்மேல் மலரம்பு எய்தி மன்மத நினைப்பூட்டிடும் காமன், புரவிமேல் வாமன், பிள்ளையார், எழுவர் மங்கையர் சூழ சிங்கத்தின்மேல் சூலி மற்றும் விச்சாதரர், இயக்கர், கின்னரர், கிம்புருடர், சாரணர், அரக்கர், அசுரர் ஆகியோர் உலாவில் பங்கேற்கின்றனர்.

இறைவன் புகழ்பாடி நகரும் இந்த இனிய உலாவை மங்கையர் வந்து காண்கின்றனர். பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்ற எழுநிலைப் பெண்டிரும் இறைவனின் ஒளியுருகண்டு மையல் கொண்டு மனமழிகின்றனர். 'பெண் ஆரவாரம் பெரிதன்றே விண் ஓங்கி மஞ்சு அடையும் நீற்குடுமி வாள் நிலா வீற்றிருந்த செஞ்சடையான் போந்த தெரு' என்ற உலாவின் முடிப்பு வரி முத்தாய்ப்பு வரியாகும்.

சிவபுரத்தில் இறைவன் செய்து கொண்ட அலங்காரம், அழகு முழுமையாய் நிறைந்த அருள்நெஞ்சராய் அவர் உலாவுக்குத் தயாராகும் பாங்கு, அவரை எதிர்கொள்ளும், வரவேற்கும், வாழ்த்துரைக்கும், சூழவரும் விண்ணவர்களின் செயல்கள், உலாவின் தொடக்கமும், தொடர்ச்சியும், அதுகண்டு கருத்திழந்து காதல் வயப்படும் பெண்கள் என அமையும் சேரமானரின் ஞான உலா ஒன்பது, பத்தாம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் நிலவிய ஒப்பனை முறைகள், அணிகலன் வரிசைகள், இசைக் கருவிகள் முதலியவற்றை மிகக் கருத்தாகப் பட்டியலிட்டுத் தருகிறது.

தஞ்சையில் தரணியே வியக்கும் வண்ணம் ராஜராஜீசுவரத்தைக் கட்டிய நித்தவினோதனான முதலாம் இராஜராஜனை இந்த உலா மிகவும் கவர்ந்திருக்க வேண்டும் அதனால் தான் தன் திருக்கோயிலில் இரண்டு இடங்களில் இவ்வுலா வரிகளுக்கு உயிர் தந்து சிற்ப அமைவுகளாய்ச் செதுக்கியளித்திருக்கிறான்! மையக் கோயிலின் உள்மண்டபத்துத் தெற்கு நுழைவாயில் படிக்கட்டுகளின் மேற்குப் பார்த்த கீழ்ப்புறப் பக்கச் சுவரில் உலாவின் முதற் பகுதி இடம்பெற்றுள்ளது.

சிவபுரத்தில் ஒப்பனை முடித்து வெள்ளெருது ஏற இறைவன் வரும் காட்சியை இங்குக் காணலாம் இக்காட்சியை மூன்று பிரிவுகளில் முடிந்தவரையில் பதிவு செய்துள்ளனர். சோழ நாட்டுச் சிற்ப வல்லுநர்கள் முதற் பிரிவில் நின்ற கோலத்தில் இடக்கையைக் கட்யவலம்பிதமாய்க் கொண்டு நால்வர் காட்சி தருகின்றனர். முதலாமவர் வலக்கையில் காப்பு முத்திரை காட்டி வாழ்த்தும் தக்கன் ஆட்டுத் தலையுடன் நிற்கும் அவரையடுத்து அகத்தியர் பெருமான் நீண்ட தாடியும் சற்றே பருத்த வயிறுமாய் வலத் தோளில் விரித்த குடையேந்தி மகிழ்ச்சிப் பெருக்குடன் நிற்கிறார். நிறைந்த அணிகலன்களும், பட்டாடையும், கிரீட மகுடமுமாய் வலக்கையில் மலருடன் நிற்கும் மூன்றாமவர் தேவர் தலைவர் இந்திரனாகலாம். தலைக்குப் பின்னால் ஒளிவட்டமும், திரண்டுருண்ட உடலமைப்பும் கொண்டு இறைவன் நிற்கும் திசை

நோக்கிய பார்வையுடன் வலக்கையில் மலரேந்தி காட்சிதரும் இந்த அழகு கொஞ்சும் ஆண் வடிவம் கதிரவனாகலாம். இந்நான்கு சிற்பங்களுமே மிகுந்த கவனத்துடனும், நிறைந்த அழகுணர்ச்சியுடனும், மிக அற்புதமான தோற்றப் பொலிவுடன் செதுக்கப்பட்டுள்ளன. குறிப்பாகக் கதிரவனின் உடலமைப்பும், முகப் பொலிவும், திருத்தமான ஒளியோட்டமும் அந்தப் படிமத்தை உயிர்ப்பு நிறைந்ததாக்கி நம் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு விடுகின்றன.

இரண்டாம் பிரிவில் மும்மூர்த்திகளையும் காண்கிறோம். இச்சிற்பத் தொகுதி சற்றே சிதைந்திருந்தாலும் வனப்பில் முன்னதற்குச் சற்றும் குறைந்ததல்ல. வலப்புறம் நான்முகனும் இடப்புறம் திருமாலும் இருக்க இடையில் இறைநாயகராய்ச் சிவபெருமான்! மூவரது இட முன் கரங்களும் கட்ய வலம்பிதத்தில் உள்ளன. நான்முகன், திருமால் இருவரின் வலமுன் கைகளும் காக்கும் குறிப்பிலிருக்க, சிவபெருமானின் வல முன்கை சிதைந்துள்ளது ; பின் திருக்கைகளில் மாறும் மழுவும். சிவபெருமான் தந்த சக்கரமும், சங்கும் திருமால் கொண்டுள்ளார். நான்முகனின் இடப்பின் கை தெரியவில்லை. வலப் பின் கையில் அக்க மாலை அழகிளவலாய்த் தோற்றம் தரும் இறைவனுக்குப் பின்னால் கொற்றக்குடை. நான்முகனுக்கும் சிவபெருமானுக்கும் இடையில் உள்ள குள்ளச் சிறு பூதமொன்று இக்குடையைப் பிடித்துள்ளாற்போல் காட்டப்பட்டுள்ளது. இறைவனுக்கும் திருமாலுக்கும் இடையில் நந்தி தலையை நீட்டியபடி காட்சி தருகிறது.

மூன்றாம் பிரிவு மூன்று சிறு தொகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. முதற் தொகுதியில் கீழே மூன்றும் மேலே இரண்டுமாய் ஐந்து பூத கணங்கள் மேலிரண்டும் சங்கூத, கீழிரண்டும் காளம் முழக்குகின்றன. மற்றொன்று மத்தளம் இயக்குகிறது. உலாவுக்கு முன்னோட்டமாய்ச் செல்லும் இந்த இசைக் குழுவுக்கு இரண்டாம் தொகுதியிலும் துணையுண்டு. இங்கே ஆறு கணங்கள். ஐந்து கணங்கள் அளவாலும், அமைப்பாலும் மாறுபட்ட அழகு மத்தளங்களை இயக்கி இசைக்க, ஒன்று தாளம் சேர்த்து மகிழ்ந்து நிற்கிறது. சல்லரி, தாளம், தகுணிதம், மொந்தை, சங்கம், தட்டழி, தண்ணுமை, பேரி, கரதரளம், குடமுழவு, கொக்கரை, வீணை, குழல். யாழ், தடாரி, படகம், மத்தளம், துந்துபி, முருடி என உலா பட்டியலிடும் இசைக்கருவிகளுள் சிலவற்றை இங்குக் கான முடிகிறது. இந்த இரண்டாம் தொகுதியில் மூன்று தேவர் வடிவங்களைக் காண முடிகிறது. மூவருள் இருவருக்குத் தலைக்குப் பின் ஒளி வட்டம் காட்டப்பட்டுள்ளது. மூவருமே வலக்கையில் மலரேந்தி இடக்கையைக் கட்ய வலம் பிதமாய்க் கொண்டு காட்சி தருகின்றனர்.

இதற்கு மேலுள்ள மூன்றாம் தொகுதியில் வலக்கையில் மலரேந்திய நான்கு திருவுருங்கள். இவர்தம் இடக்கைகள் கட்ய வலம் பிதத்தில் இருக்கத் தலைகளைச் சுற்றி ஒளி வட்டங்கள். இவர்கள் பன்னிரு ஆதித்தரில் சிலராகலாம். கயிலாயித்தினுள்ளிருந்து மழவிடை நோக்கி இறைவன் வருகின்ற காட்சியைக் கோயிலில் காட்டி மகிழ்ந்த இராசராசன், உலாவின் உச்சக் காட்சியை உணர்த்தத்தன் பேரில் அமைந்த திருவாயிலையே தேர்த்துள்ளான். தஞ்சைப் பெருங்கோயிலின் இரண்டாம் திருவாயிலான இராசராசன் திருவாயிலின் தென்முகச் சுவரில் இறைவனின் சுாளையுலாவும் அது கண்டு கருத்திழக்கும் கோதையர் நிலையும் காட்சிப்புதையல்களாய் இடம் கண்டுள்ளன.

ஐந்து பூத கணங்கள் சூழ இளமை பொலியும் வெள்ளெருதின் மேல் இறைவன் எழிலரசாய் உலா வருகிறார். பின் கைகளில் உடுக்கையும், பாம்பும். செவிகளில் பனையோலைக் குண்டலங்கள் அழகு செய்ய சன்ன வீரம் அணிந்து, சடாமகுடராய், இடமுன்கையில் தலையோடேந்தி எளிதாய் அமர்ந்த இனிய திருக்கோலம். நந்தியின் திமிலும், கழுத்து மடிப்புகளும் திருக்கோயிலின் தென் திருச்சுற்று மாளிகையில் அமர்ந்திருக்கும் நந்தியைப் பெரிதும் ஒத்துள்ளன. இறைவனின் இருபுறமும் கொற்றக் குடைகள். இடப்புறக் குடையை ஏந்திய எழில் பூதமொன்று ஏறுநடைபோடுகிறது. அதன் பின்னால் போற்றும் வலக்கையுடன் பாடும் மெய்ப்பாட்டில் மற்றொரு கணம். மேலே அந்தப் பாட்டுக்குத் தாளமிட்டு இசை சேர்க்கும் விரிசடைப் பூதம் தொலைக்காட்சியில் உயிர்ப்பு சேர்க்க நிகழ்ச்சி சொல்பவர்கள் தலையாட்டுவது போல இந்தக் கணங்களும் தலை சாய்த்து அழகு கூட்டுகின்றன. இறைவனுக்கு முன்னால் சங்கூதும் பூதமொன்று? அதன் வலப்புறத்தே தானியக்கும் தாளவொலிக்குத் தானே மகிழ்ந்து மயங்கும் மெய்ப்பாட்டில் இதயத்தை நெகிழ்விக்கும் கோலத்தில் இன்னொரு பூதம்! சாய்ந்து சரிந்த அதன் முகமும், இலேசாய் மயங்கிய கண்களும், விரித்த இதழ்களும் அழகுக் கொள்ளை தான்! 'சூழவரும் கணங்களே இவ்வளவு அழகென்றால், அவர்களின் தலைவனாம் இறைவன் எத்துனை அழகுடையவானயிருப்பான்! சிற்பிகளின் கை வண்ணம் கண்டாலே அந்தக் கண்ணுதலின் அழகு விளங்கும்.

பொற்புடைய பேதை முதலாகப் பேரிளம் பெண் ஈறாக மாதரவர் மாளிகையின் மேல் ஏறி, மால் ஏறி மயங்குவார்' என்ற ஞான உலா வரிகளுக்கு வரை படமாய்க் காட்சியளிக்கிறது, இறையுலாவுக்கு முன் அமைந்துள்ளது சிற்பத் தொகுதி. அழகுபடுத்தப்பட்ட உப்பரிகைத் தளத்தில் ஆரணங்குகள் நால்வர்! பேதை, பெதும்பை மங்கை, மடந்தை போதுமென்று நினைத்தார் போலும், சோழநாட்டுக் கலையறிஞர், காலமும், கலையுணர்வற்ற நெஞ்சங்களின் கை வேலையும் இச்சிற்பத் தொகுதியைப் பெரிதும் சிதைத்திருந்த போதும், சோழச் சிற்பிகளின் ஆற்றல் நிறை எண்ணவோட்டம் தேய்விலும் பொலிவாய் சிதைவிலும் சீராய், உலாவின் கருத்துக்கு உணர்வூட்டி நிற்கிறது. அரைகுறை ஒப்பனையும் ஆடையலங்காரமுமாய் வந்தவர்கள் இவர்கள் என்பதைத் தோற்றம் காட்ட உலாநாயகனின் அழகு கண்டு கிறங்கிப் போய் நாணிழந்து நலிந்து நொந்த நிலையை, நிற்கும் அமைவு காட்டுகிறது. சற்றே ஒசிந்து சற்றே நெகிழ்ந்து, நாணும் ஆவலும் போட்டியிடும் நிலையில் வெட்கம் தோற்க விருப்பம் வெல்லக் காதலில் தோய்ந்து, கருத்துகள் தேய்ந்து நிற்கும் இந்தக் காரிகைச் செல்வியர் காலக் கனவுகளின் கவிதைப் படைப்புகள்.

தஞ்சைப் பெரிய கோயிலை முழுமையான ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் கண்டறிந்து வெளிப்படுத்திய அரிய உண்மைகளுள் கல்லில் வடித்த கயிலாய உலா குறிப்பிடத்தக்கது மட்டுமல்ல, தலையாயதும் கூட! இலக்கிய வரிகளுக்கு இராசராசப் பெருவேந்தன் தந்த இணையற்ற மதிப்பையும் பெருமையை -யும் இச் சிற்பச் செறிவுகளே இனிதாய் உணர்த்த வல்லன.

தவத்திரு
குன்றக்குடி அடிகளார்
கோட்பாடுகள்



- ★ கோயிலைத் தழுவிய குடிகள்; குடிகளைத் தழுவிய கோயில்.
- ★ சமுதாயம் வளர்ந்தால் சமயம் வளரும்.
- ★ மக்கள் தொண்டே மகேசன் தொண்டு.
- ★ செழுந்தமிழ் வழக்கு அயல் வழக்கின் துறை வெல்லல்.
- ★ தாய்மொழி வழிபாட்டால் தகுபயன் பெறுதல்.
- ★ தமிழ்மொழி, தமிழ்நெறி மேம்பாடு.
- ★ திருக்குறள் நெறியை உலகப் பொதுமையாக்குதல்.
- ★ ஒழுங்கினைக் காத்தல்.
- ★ உறவினை வளர்த்தல்.
- ★ உதவிகள் செய்தல்.
- ★ மன்றினில் ஆடுவான் மாண்புசேர் நெறியில் மன்பதைக்குப் பொதுமைநெறி காணல்.